# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 333 ஐப்பசி 11 ஆம் நாள் திங்கட்கிழமை 28 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


# அப்பாவை புலிகள் கொன்றமைக்காக தமிழர்களை நான் வெறுக்கவில்லை

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 28**

**எனது அப்பாவை தமிழீழ விடுதலைப் புலிகள் கொலை செய்தனர் என்பதற்காக, தமிழ் மக்களை நான் ஒருபோதும் வெறுக்கவில்லை. இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

23



## சுர்ஜித் உயிருடன் மீள யாழில் மௌனவழிபாடு

யாழ்ப்பாணம், ஒக். 28

ஆழ்துளை கிணற்றில் சிக்கித் தவிக்கும் குழந்தை சுர்ஜித் உயிருடன் மீள வேண்டுமென கோப்பாயில் மக்கள் மௌன வழிபாட்டில் ஈடுபட்டனர்.

வலிகாம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு கோப்பாய் கண்

23

## தேர்தல் முடியும் வரையில் பேரவை உறுப்பினருக்குத் தடை

யாழ்ப்பாணம், ஒக். 28

அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேரவைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினரை, தேர்தல் முடியும்

23

## தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை அடைவோம்

### சஜித் உறுதி

கொழும்பு, ஒக். 28

தமிழ் மக்களை ஓரங்கட்டி அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற முடியாது. தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை கண்டே தீருவோம். இதில் எந்த மாற்றமும் இல்லை. இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தார், ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின்

23

## இளைஞர்கள் மீது கத்திக்குத்து

யாழ்ப்பாணம், ஒக். 28

சுன்னாகம் மற்றும் அளவெட்டிப் பகுதியில் இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கத்திக்குத்துக்களில் மூவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மல்லாகம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு உந்துருளியில் வந்த இனம்தெரியாத 4பேர் கொண்ட குழுவினர் மேற்கொண்ட கத்திக்குத்து தாக்குதலில் இரண்டு பேர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

07

## ஐ.எஸ். தலைவர் சாவு ட்ரம்ப் உறுதிப்படுத்தினார்

வொஷிங்ரன், ஒக். 28

ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் புக்தாதி அமெரிக்க படைகளால் கொல்லப்பட்டுள்ளார் என்று அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் டிரம்ப் இலங்கை நேரப்படி நேற்று இரவு 7.10 மணிக்கு உறுதி செய்தார்.

இது தொடர்பில் அவர் சிறப்பு அறிவிப்பை விடுத்து உரையாற்றினார்.

23



## பேச்சுக்கு கூட்டமைப்புத்தான் இன்னமும் நேரம் தரவில்லை

### கோத்தபாய தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தத் தயார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த அனுமதி கோரியிருந்தேன். அவர்கள்தான் இன்னமும் சந்

07

## யாழ்ப்பாணத்தில் இன்று ராஜபக்சாக்கள் பரப்புரை

### பாதுகாப்புக் காரணங்களுக்காக மன்றில் முன்னிலையாகாத கோத்தாவும் வருகை

யாழ்ப்பாணம், ஒக். 28

அரச தலைவர் தேர்தல் பரப்புரைக்காக வடக்கு மாகாணத்துக்கு இன்றைய தினம் ராஜபக்சாக்கள் வருகை தரவுள்ளனர்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச இருவருமே இன்று வருகை தரவுள்ளனர்.

வவுனியா மற்றும் யாழ்ப்

23

## பிள்ளையானை சிறையில் சந்தித்த மகிந்த ராஜபக்ச

மட்டக்களப்பு, ஒக். 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்குத் தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

07



## புதிய காற்றழுத்த தாழ்வு நிலை

### வடகிழக்கில் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகுவதற்கு வாய்ப்புள்ளது. இது அடுத்து வரும் நாள்களில் வடமேற்கு திசை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு நகர்ந்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்

23

## விவாதத்துக்கு தனித்துவர பயமென்றால் சகோதரர்களுடன் என்றாலும் வரலாம்

### கோத்தாவை சீண்டுகிறார் சஜித்

கொழும்பு, ஒக். 28

கோத்தபாய ராஜபக்ச தனித்து வருவதற்கு அச்சம் என்றால் தனது சகோரதரர்களுடன் இணைந்தேனும் முடிந்தால் பகிரங்க விவாதத்துக்கு வரட்டும் என்று மீண்டும் அழைப்பு விடுப்பதாக புதிய ஜனநாயக முன்னணி அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மக்கள் பரப்புரைக் கூட்டத்தில்

23

## 4 கிலோ கஞ்சாவுடன் இளைஞன் கைது

### பொலிஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

ஆனைக்கோட்டைப் பகுதியில் நான்கு கிலோ கேரளக் கஞ்சாவுடன் பண்டத்தரிப்பைச் சேர்ந்த இளைஞனை சிறப்பு அதிரடிப் படையினர் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணப்


23

# குருப்பெயர்ச்சி பலன்கள்!

குரு பகவான் ஒரு ராசியில் இருந்து அடுத்த ராசிக்கு செல்வதற்கு 13 மாதங்கள் அல்லது ஒரு வருடம் ஆகும். இப்படி ஒரு ஆண்டுக்கு ஒருமுறை நிகழக்கூடிய குரு பெயர்ச்சி இந்த வருடம் 29.10.2019 அன்று நிகழ்கிறது. விகாரி வருடம் ஐப்பசி மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை, வாக்கிய பஞ்சாங்கப்படி, விருச்சிகம் ராசியில் இருந்து தனுசு ராசிக்கு மாறுதலாகிச் செல்கிறார். குரு பகவான் தனுசு ராசியில் 14.11.2020 வரை சஞ்சாரம் செல்கிறார். குரு பார்க்க கோடி நன்மை என்றும், கோடி தோஷம் விலகும் என்றும் நம்பப்படுகிறது. குரு பெயர்ச்சியினால் நன்மைகள் நடக்கும் என்று பொதுவாக நம்பலாம்,

## 2019 —2020

## துலாம்



**சிறுசிறு தடைகளையும், தடுமாற்றங்களையும் தந்தாலும் இடையிடையே வெற்றியையும், மகிழ்ச்சியையும் தரும்.**



எந்த ஊருக்குப் பிழைக்கச் சென்றாலும் நீங்கள் சொந்த ஊரை மறக்காதவர். தோல்வி என்பது வெற்றிக்கான ஏணிப்படிதான் என்பதை உணர்ந்த கடின உழைப்பாளி. நல்ல எண்ணங்களை ஒருங்கே கொண்டு, தான் உண்டு தனது வேலை உண்டு என்று இருக்கும் உங்களுக்கு தனஸ்தானமான 2 ம் வீட்டில் அமர்ந்து பணப்புழக்கத்தையும், சமூகத்தில் அந்தஸ்தையும், வசதி, வாய்ப்புகளையும், குடும்பத்தில் மகிழ்ச்சியையும் தந்த குரு பகவான் 29.10.2019 முதல் 13.11.2020 வரை ராசிக்கு 3ஆம் வீட்டில் அமர்வதால் எதையும் திட்டமிட்டு செய்யுங்கள். எந்த ஒரு வேலையையும் முதல் முயற்சியிலேயே முடிக்க முடியாமல் இரண்டு, மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். இளைய சகோதரரின் வகையில் பிணக்குகள் வரும். வீண் வறட்டு கௌரவத்துக்காக சேமிப்பைக் கரைத்துக்கொண்டிருக்காதீர்கள். யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். திடீரென்று அறிமுகமாகுபவரை நம்ப வேண்டாம். மற்றவர்களை நம்பி முக்கிய விடயங்களை ஒப்படைக்காமல், நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது. தங்க நகைகளைக் கவனமாகக் கையாளுங்கள்.

அக்கம்பக்கம் வீட்டாருடன் எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ளவேண்டாம்.

சிலர் உங்களை நேரில் பார்க்கும்போது நல்லவர்களாகவும், பார்க்காத போது உங்களைப் பற்றி வேறு மாதிரியாகவும் பேசுவார்கள். கவனமாகப் பழகுங்கள். உறவினர்கள், நண்பர்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்ளவேண்டாம். இடைவெளி விட்டு பழகுவது நல்லது.

**குருபகவானின் பார்வைப் பலன்கள்:**

குரு உங்களின் ராசிக்கு 7ஆம் வீட்டைப் பார்ப்பதால் மனைவிவழியில் உதவிகள் உண்டு. குரு 9ஆம் வீட்டைப் பார்ப்பதால் பணவரவுக்கு குறைவி ருக்காது. தந்தைவழிச் சொத்துகள் கைக்கு வரும். குரு லாப வீட்டைப் பார்ப்பதால் மூத்த சகோதரர் ஆதரவாக இருப்பார். புது வாகனம் வாங்குவீர்கள்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

29.10.2019 முதல் 31.12.2019 வரை குரு பகவான் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால் பெரிய திட்டங்கள் தீட்டுவீர்கள். தீராத பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும். போட்டித் தேர்வுகளில் வெற்றிபெறுவீர்கள். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். 1.1.2020 முதல் 5.3.2020 வரை மற்றும் 31.7.2020 முதல் 18.10.2020 வரை உங்களின் ராசியாதிபதியும் அஷ்டமாதிபதியுமான சுக்கிரனின் பூராடம் நட்சத்திரத்தில் குரு செல்வதால் திடீர் பணவரவு உண்டு. வாகனம் வாங்குவீர்கள். உறவினர்களின் திருமணத்தை முன்னின்று நடத்துவீர்கள். மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும்.

6.3.2020 முதல் 27.3.2020 வரை மற்றும் 19.10.2020 முதல் 13.11.2020 வரை குரு பகவான் உங்களின் லாபாதிபதியான சூரியனின் நட்சத்திரமான உத்திராடம் 1 ம் பாதத்தில் செல்வதால் எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை மனத்தில் பிறக்கும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். அரசு வகை காரியங்கள் விரைந்து முடியும். சி.எம்.டி.ஏ., ப்ளான் அப்ரூவல் கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும்.

**மகரத்தில் குருபகவான்:**

28.03.2020 முதல் 6.7.2020 வரை குரு பகவான் உங்களின் ராசிக்கு 4ஆம் வீடான மகர ராசியில் அதிசாரமாகியும், வக்கிரமாகியும் அமர்வதால் தாயாரின் உடல் நலனில் கவனமாக இருங்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல், செலவுகள் இருக்கும்.

**குரு பகவானின் வக்ர சஞ்சாரம்:**

7.7.2020 முதல் 30.7.2020 வரை உள்ள காலகட்டத்தில் உத்திராடம் முதலாம் பாதம் தனுசு ராசியில் குரு வக்கிரமடைவதால் எதிலும் நிதானித்துச் செயல்படுவது நல்லது.

31.7.2020 முதல் 10.09.2020 வரை பூராடம் நட்சத்திரத்தில் குரு வக்கிர கதியில் செல்வதால் உங்களின் ரசனை மாறும். எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். ஆரோக்கியம் சீராகும். வீடு, வாகனத்தைச் சீர்செய்வீர்கள். சுற்றுலாதலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**வியாபாரிகளுக்கு:**

வியாபாரத்தில் சில சூட்சுமங்களை யும், ரகசியங்களையும் தெரிந்து கொண்டு அதற்கேற்ப லாபம் ஈட்டுவீர்கள். பழைய பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். தரமானப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலமாக புது வாடிக்கையாளர்கள் வருவார்கள்.

**அலுவலர்களுக்கு:**

உத்தியோகத்தில் சின்னச் சின்ன அலைக்கழிப்புகள் இருக்கும். பணிகளைப் போராடி முடிக்கவேண்டி வரும். சக ஊழியர்களின் கடின உழைப்பால் தடைப்பட்ட வேலைகளை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வு கிடைக்கும். சம்பள பாக்கி கைக்கு வரும். உயரதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். இடமாற்றம் சாதகமாகும்.

**பெண்களுக்கு:**

பெண்களுக்குத் தடைப்பட்ட உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பு கிடைக்கும். நல்ல இடத்தில் வரன் அமையும். பெற்றோருடன் இருந்த மனத்தாங்கல் நீங்கும். போட்டித்தேர்வுகளில் வெற்றிபெற்று வேலையில் அமருவீர்கள்.

**மாணவர்களுக்கு:**

மாணவ, மாணவிகள் விரும்பிய நிறுவனத்தில் எதிர்பார்த்த கல்விப் பிரிவில் சேருவீர்கள். அறிவாற்றல் கூடும். சின்னச்சின்ன தவறுகளையும் திருத்திக் கொள்ளுங்கள். நட்புவட்டம் விரிவடையும். ஆசிரியரிடம் தயங்காமல் உங்களின் சந்தேகங்களைக் கேட்டுத் தெளியுங்கள்.

**கலைத்துறையினருக்கு:**

கலைத்துறையினருக்குப் பெரிய வாய்ப்புகள் தேடி வரும். யதார்த்தமான உங்களின் படைப்புகளுக்குப் பாராட்டுகள் கிடைக்கும்.

இந்த குரு மாற்றம் சிறுசிறு தடைகளையும், தடுமாற்றங்களையும் தந்தாலும் இடையிடையே வெற்றியையும், மகிழ்ச்சியையும் தரும்.

வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து குல தெய்வத்தை வணங்குவது கூட சிறப்பைத் தரும். இவை தவிர குரு அருளைப் பெற ஏழை எளிய மாணவர்களுக்கு உதவலாம். 24.1.2020 முதல் அர்த்தாஷ்டம சனி ஆரம்பம் ஆகப் போவதால் சனி பகவானை கோயிலுக்குச் சென்று நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபடலாம். இதனை ஒரு சனிக் கிழமையில் செய்வது சிறப்பு.



# 85 வயது பாட்டியாக நடிக்கும் காஜல் அகர்வால்

ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்து கடந்த 1992ஆம் ஆண்டு வெளியாகி பெரும் வெற்றி பெற்ற படம் 'இந்தியன்'. இந்தப் படத்தில் சேனாபதி என்ற சுதந்திரப்போராட்டத் தியாகியாக கமல் நடித்திருந்தார். இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் பல வருடங்களுக்குப் பிறகு 'இந்தியன் 2' என்ற பெயரில் உருவாகி வருகிறது.

'லைகா' நிறுவனம் தயாரித்து வரும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்க, ரத்னவேலு ஒளிப்பதிவு செய்கிறார். இந்தப் படத்தில் சித்தார்த், காஜல் அகர்வால், விவேக், ரகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இந்தப் படத்தில் கமல்ஹாசன் சம்மந்தப்பட்ட சண்டைக் காட்சிகள் அண்மையில் படமாக்கப்பட்டது. இந்த நிலையில் இந்தப் படத்தில் காஜல் அகர்வால் கமல்ஹாசனின் மனைவியாக 85 வயது மதிக்கத்தக்க வேடத்தில் நடிப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.




சித்ரா தேவி @chithradevi_91

இந்நேரத்துக்கு இதுவரை 'அறம்' படத்தை டிவியில் போட்டு வியாபாரம் பார்க்காததே மிகச் சிறந்த ஆறுதலாக உள்ளது.






## ஆழ்துளை கிணற்றுக்குள் இருந்து நான் சுஜித் பேசுகிறேன்....

அம்மா நீ எப்படி இருக்கிறாய் !
முதல் தடவையாக உன்னை இத்தனை மணி நேரங்கள் நான் பிரிந்து இருக்கிறேன்.
நான் பிறந்தபோது நீ எவ்வளவு சிரித்து இருப்பாய் இப்போது அதேபோன்று நீ கலங்காமல் இரு.
நான் உன்னை விட்டு தூரமாகச் செல்லவில்லை.
உன் தவிப்பை நான் உணர்கிறேன் உன் மடியில் தலை சாய ஆசைப்படுகிறேன்.
நீ கவலைப்படாதே நான் உன் வயிற்றுக்குள் திரும்ப சென்று விட்டது போல் தான் உணர்கிறேன்.
நீ தைரியத்தோடு இரு நான் சீக்கிரம் பிரசவம் ஆகி விடுவேன்.
"நான் பிறந்தபோது நீ அடைந்த சந்தோசத்தை வாழ்வில் இன்னொரு முறை அனுபவிக்கப்போகிறாய்"
காத்திரு !

நெடுந்தீவு முகிலன்

saivan @kandanmuruganin

படத்தை இன்னும் கொஞ்சம்
நல்லா எடுத்துருக்கலாம்.

'பிகில்' லா?
இல்லை, 'கைதி'.
அப்போ, 'பிகில்'?
அதை எடுக்காமலே
இருந்துருக்கலாம்.






ச ப் பா ணி@manipmp

பணத்தைக் கொண்டாட முடியாது.
ஆனால் பணம் இருந்தால்தான்
கொண்டாட முடியும்

#தீபாவளி சிந்தனை




ஆழ்துளைக்
கிணற்றுக்குள் விழுந்த
குழந்தையை மீட்க
களத்தில்
நூற்றுக்கணக்கான
வர்கள் இரவு. பகல்.
வெயில். மழையைப்
பொருட்படுத்தாமல்
முயன்று
கொண்டிருக்கும்போது மட்டக்களப்பில் இருந்து
ஒருவரின் கருத்து

"ஒரு கம்பியின் நுனியில் பலூனைக் கட்டி, அதை குழிக்குள் செலுத்தி, குழந்தைக்கு கீழே கொண்டு சென்று, அந்த பலூனை ஹீலியம் வாயுவால் நிரப்பினால் குழந்தை மேலே வந்துவிடும்"

உங்களுக்கெல்லாம் கடைசி வரைக்கும் சம்பந்தரும், தீபாவளிக்குத் தீர்வும்தான்...

பணம் படைத்தவனுக்குத் "தீபாவளி"...
அதைப் பார்க்காதவனுக்கு
"தீராவலி"..!



# மனசு வலிக்கின்றது!

எங்கும் வளி அது தீபாவளி!
ஆனால் அங்கே ஒரு குழந்தை கிணற்றில் உயிருக்காக ஊஞ்சல் ஆடுகிறது.
சினிமாக் கொட்டகைகளில் பாலாபிசேகம். முகநூலிலே முகங்களைக் காட்டும் ஒளிப்படங்கள்.
ஒரு நிமிடம் அந்த குழந்தைக்காக ஒதுக்கிப் பிராத்தனை செய்யுங்கள் இன்னும் சில மணித்துளிகள் அந்த உயிர் அங்கலாய்க்கின்றது.
பிள்ளைகளைப் பெற்ற பெற்றார்களே! அதுவும் ஒரு தாயின் கருவில் உருவானதே.
வலியை வரியிட்டு காட்ட முடியாது. இறைவன் என்பதைப் பல வடிவங்களில் மனிதர்களால் வழிபடுகின்றோம் அந்தச் சக்தியிடம் இரஞ்சுங்கள்! அந்த பிஞ்சு உயிர் பிழைக்கட்டும்.

# கண்ணீர் அஞ்சலி

## S.V. முருகேசு நடராசா

(பொறியியலாளர் *S.V.M. private Ltd* பணிப்பாளர்)



**கைதனில் ஏந்தி உன்னைக்
கருத்துற வளர்த்த நெஞ்சம்
வெய்யவோர் கவலை கொண்டு
வேதனை கொள்ளுதய்யா!
பொய்யிலா உந்தன் கண்கள்
பொலிவற்றுப் போனதென்று
பொய்யிலா உறவோர் நாங்கள்
பேதலித்துள்ளோம் ஐயா!**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**S.V.M. பணியாளர்கள்**


தோற்றம் 18.11.1952 | மறைவு 26.10.2019

(8x20) 16/17

# மரண அறிவித்தல்

## S.V. முருகேசு நடராசா

(பொறியியலாளர் S.V.M Private Ltd பணிப்பாளர்)



தோற்றம் 18.11.1952 | மறைவு 26.10.2019

காரைநகர், களபூமி, விளானையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட S.V.முருகேசு நடராசா 26.10.2019 சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற S.V. முருகேசு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற Dr. செல்லத்துரை - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி ம்ற்றும் தங்கராசா, இராஜேஸ்வரி, தங்கரத்தினம். பூமணி, குணரத்தினம், சதானந்தன், சிவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இரத்தினராசா மற்றும் வரலட்சுமி, இராசலட்சுமி. விக்கினேஸ்வரன், நாகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2019) திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து 11 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 12.30 மணிக்கு பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**S.V. முருகேசு குடும்பத்தினர்.**

S.V.M. **குணரட்ணம்** - 077 732 5418

S.V.M. **தங்கரட்ணம்** - 077 817 7805

S.V.M. **சதானந்தம்** - 077 748 2265



# இணுவில் கந்தசுவாமி கோவில்

## சத்துரு ஸம்ஹார திரிசதி ஹோமமும் கந்தசஷ்டி பெருந்திருவிழாவும்

காலம்:- 28.10.2019 திங்கட்கிழமை முதல்
02.11.2019 சனிக்கிழமை வரை நடைபெறும்

தினமும் காலை:- 5 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் சண்முகர்ச்சனையும் தொடர்ந்து ஹோமமும் பூர்ணாகுதியும் இடம்பெறும்.

மாலை :- 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சண்முகர்ச்சனை, சுவாமி வீதியுலாவும் இடம்பெறும்




02.11.2019 சனிக்கிழமை
மாலை 4.00 மணிக்கு
சூரசம்ஹாரம் இடம்பெறும்

தினமும் விசேட மங்கல வாத்தியங்கள் இடம்பெறும்

CS28960(16/17)

தர்மகர்த்தா சபையினர்.


# கடற் பஞ்சு!



கடலில் வாழும் கடற்பஞ்சு தாவரம் அல்ல. அது ஒரு மிருக இனத்தைச் சார்ந்தது. மிருகங்களில் வாழ்க்கையை ஒட்டியே இதன் வாழ்க்கையும் உள்ளது. இது கடலில் வாழ்ந்து கடலின் ஆகாரத்தையே உட்கொள்கிறது. இறந்து விட்ட இந்தக் கடற்பஞ்சை துடைப்பதற்காகப் பயன்படுத்துகின்றனர்.


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்



கடந்த 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் தாமோதரம்பிள்ளை இராமச்சந்திரன்

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (29.10.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

(cs 28954) (13.17)

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை. குடும்பத்தினர்.



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



உலகத்தோடு இணைந்தது
23 . 11 . 1956

இறையோடு இணைந்தது
26 . 10 . 2019

### திருமதி பஞ்சலிங்கம் டில்லியம்மா (டில்லி)

ஆசாரி வீதி, கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சலிங்கம் டில்லியம்மா (டில்லி) நேற்றுமுன்தினம் (26.10.2019) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதியரின் இளைய புதல்வியும், காலஞ்சென்ற தவபாலன், காலஞ்சென்ற கமலாம்பிகை, தனலட்சுமி (பிரான்ஸ்), அமிர்தலிங்கம் (ராமு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவியும், கிரிதாஸ் (பிரான்ஸ்), பிரிதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், விதூஷனி (பிரான்ஸ்), பவித்திரா ஆகியோரின் அன்பு மாமியும், கார்த்தி (பிரான்ஸ்), யாதனா (பிரான்ஸ்), ஸாக்ஸி, டிவாகர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2019) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(அமிர்தலிங்கம் - ராமு)

ஆசாரி வீதி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (cs 28955) (13.17)



## மரண அறிவித்தல்

### தர்ஷிகா ஜெகநாதன்



தோற்றம் 08.02.1992
மறைவு 11.09.2019

சம்மட்டி ஓலை. மானிப்பாய் வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், Scarbrough, Toronto, Canada ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தர்ஷிகா ஜெகநாதன் கடந்த 11.09.2019 புதன்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் ஜெகநாதன் சாந்திமலர் தம்பதிகளின் பாசமிகு மகளும், உதயராஜ் (உதயன்). சத்தியராஜ் (ராயு). நிந்துஜா (நிந்து), உஷாநந்தினி (சுவிஸ்). ஜஸ்ரின் கோபிநாத் (கொலண்ட்), ஜீவநந்தினி (ஜேர்மனி), கோபிராஜ், மகிந்தன் ஆகியோரின் ஆருயிர் சகோதரியும், காலஞ்சென்ற சிவபரன், யோகேஸ்வரன் மற்றும் கலாரஞ்சன், கலாரஞ்சினி ஆகியோரின் பெறாமகளும் ரவிக்குமார், சுஜாதாஸ், தர்ஷா, தாட்ஷாயினி, கார்த்திகா, ஊர்மிலா ஆகியோரின் அன்பு மைத்துனியும், அக்ஷயாவின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2019) திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,அயலவர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்மட்டி ஓலை,
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். (CS/28953)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

077 135 9624, 077 400 6988

**விற்பனைக்குண்டு**

நல்லின தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு.

077 423 6645

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

45 நாட்கள் நிரம்பிய "டாசோன்" நாய்க்குட்டிகளும் 5 மாத "ஜேர்மன் சப்பேட்" ஆண் நாய்க்குட்டியும் விற்பனைக்கு உண்டு.

077 297 6255 (யாழ்நகர்)

**வீடு விற்பனைக்கு**

பண்டத்தரிப்பு சந்திக்கு அருகாமையில் சண்டிலிப்பாய் செல்லும் வீதியில் ஆறுபரப்பு காணியுடன் ஆறு அறைகளும், இரண்டு கோல்களும் மற்றும் வீட்டுடன் இணைந்த இரண்டு கடைகளும் விற்பனைக்கு உண்டு.

075 0404 452, 077 8249 281

**விற்பனைக்கு**

யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதியில் 5 பரப்புக்காணியும் 4 பரப்பு காணியும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் 4 1/2 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

077 723 2535

# நியாயமற்ற வாதம்!

தெருவில் சுற்றிக் கொண்டிருந்த ஒரு நாய், ஒரு வீட்டின் மாட்டுத் தொழுவத்துக்குள் நுழைந்தது. மாட்டுக்குப் போடுவதற்கென தொழுவத்தில் நிறைய வைக்கோலை சேமித்து வைத்திருந்தான் வீட்டுக்காரன். வைக்கோலைக் கண்டதும் நாய்க்கு அது அருமையான படுக்கையாகத் தோன்றியது. வைக்கோலின் மீது ஏறி சுகமாகப் படுத்துக் கொண்டு உறங்க முற்பட்டது.

வீட்டுக்காரனுடைய மாடு தொழுவத்தினுள் வந்து தனக்கென வைக்கப்பட்டிருந்த வைக்கோலைத் தின்னத் தொடங்கியது. உடனே நாய், "லொள் லொள்" என ஆர்ப்பாட்டமாகக் குலைத்து மாட்டை விரட்ட முயற்சிசெய்தது.

"இது எனக்காக என் எஜமானர் சேமித்து வைத்திருக்கும் வைக்கோல். நான் இதைத் தின்னுவதை நீ ஏன் தடுக்கிறாய்?" என மாடு நாயைப் பார்த்துக் கேட்டது.

"வைக்கோல் யாருக்காக வேண்டுமானாலும் இருக்கட்டும். நான் இப்போது இதில் படுத்துத் தூங்க இருக்கிறேன். என் தூக்கத்தைக் கெடுக்காதே போ!" என்று கூச்சல் போட்டது நாய்.

"இது என்ன நியாயம்? நீ உறங்க வேண்டும் என்றால், வழக்கமான உன் குப்பை மேட்டுக்குப் போவதுதானே!" என்று மாடு கேட்டது.

"என்னை அதிகாரம் செய்ய நீயார்? உன்னை வைக்கோலைத் தின்ன விட மாட்டேன். நான் இந்த வைக்கோலில் படுத்து உறங்கத்தான் செய்வேன்," என்று நாய் அடம் பிடித்தது.

மாடு, நாயுடன் விவாதம் செய்ய விரும்பாமல், ஒரு பக்கமாக இழுத்து வைக்கோலைத் தின்னத் தொடங்கியது. நாய் பயங்கரமாகக் குரைத்துக் கொண்டு மாட்டின் மீது பாய்ந்து அதைக் கடித்து விரட்டிவிட்டது.

நாய் வைக்கோல் மீது சுகமாகப் படுத்து உறங்கத் தொடங்கியது. நாய்க்கு உணவு வைக்கோல் அல்ல. மாட்டின் உணவு அது. நாய், வைக்கோலை தான் தின்ன மாட்டாத நிலையில், மாட்டையும் தின்ன விடவில்லை.

உலகத்திலே இந்த மாதிரி சில ஆள்கள் உண்டு. இவர்கள் தாங்களும் வாழ மாட்டார்கள்; பிறரையும் வாழ விட மாட்டார்கள். இம்மாதிரி இவர்கள் செய்வதற்கு நியாயமான காரணமே இருக்காது. வெறும் வயிற்றெரிச்சல், பொறாமை போன்ற தீய குணங்கள் தான் இதற்குக் காரணமாக இருக்கும். நீங்களும் இப்படிச் செய்யாதீர்கள்!

# INVITATION FOR BID DISTRICT SECRETARIAT MULLAITIVU

1. The Chairman, Procurement Committee, District Secretariat, Mullaitivu on behalf of the Government Agent/ District Secretary, Mullaitivu now invites sealed bids from eligible and qualified bidders for the Supply of Equipment's in the table below.
2. Bidding will be conducted through National Competitive bidding.
3. To be eligible for Supplier award, the successful bidder shall not have been black listed and shall be registered in the relevant items supply, valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the Procurement Branch, District Secretariat, Mullaitivu. And inspect the Bidding Documents at the same address on any working days from 9.00 hrs to 15.00 hrs from 28.10.2019 to 11.11.2019
Contact numbers are: phone:-0212290096 Fax 021 229 0045.
5. A Complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on the submission of a written application to the Procurement Branch, District Secretariat, Mullaitivu from 28.10.2019 until 11.11.2019 from 9.00 hrs to 15.00 hrs upon payment of a non- refundable fees mentioned in the table below. The method of payment should be by cash.
6. Sealed bids shall be ( Original & Duplicate) sent by registered post addressed to the Chairman, Procurement Committee, District Secretariat, Mullaitivu or deposited in the Tender Box available at the Government Agent Office, District Secretariat, Mullaitivu on or before 15.00 hrs on 13.11.2019. Late bids will be rejected, Bidders should write the job description and bid No. on the top left hand corner of the envelope. Bids will be opened soon after closing in the presence of the bidders or bidders representatives who choose to attend.
7. Bid shall be accompanied by bid security as per the information given in the table.
8. Pre bid conference will be held at Board Room commencing at 15.00 hrs on 06.11.2019

| Project | Details of Machinery/ Equipment | Nos | Estimated amount(Rs in(million) (Excluding Vat) | Non Refundable fees (Rs) | Required Bid Security | | Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs) | Validity Period of bid security | |
| 1. TODDY BOTTLING PLANT – 3000 BOTTLES (625 ml) PER DAY | 1.1 Collection Tank | 1 | 6.66Mn | 2000.00 | 67,000.00 | 19.01.2020 | It is probable that all equipment's shall be supplied by one supplier |
| | 1.2 Holding Tank | 1 | | | | | |
| | 1.3 Filtration Unit | 1 | | | | | |
| | 1.4 Feed Pump | 1 | | | | | |
| | 1.5 Product Transfer Pump | 1 | | | | | |
| | 1.6 Overhead Jacketed Heating Tank | 1 | | | | | |
| | 1.7 Semi-Automatic Filling & Capping Machine with Suitable Air Compressor | 1 | | | | | |
| | 1.8 JIB Hoist or any other Appropriate Method (Specify) | 1 | | | | | |
| | 1.99 SS Crates | 2 | | | | | |
| | 1.10 SS Table | 1 | | | | | |
| | 1.11 Hot Water bath | 1 | | | | | |
| | 1.12 Water bath with stand | 1 | | | | | |
| | 1.13 Work top | 1 | | | | | |
| | 1.14 Bottle Washer (Internal & External) | 1 | | | | | |
| | 1.15 High Pressure Water Cleaner | 1 | | | | | |
| 2. SWEET TODDY BOTTLING PLANT – 5000 BOTTLES (190 ml) PER DAY | 2.1 Jacketed Collection Tank with heat Meter | 1 | 6.66Mn | 2000.00 | 67,000.00 | 19.01.2020 | It is probable that all equipment's shall be supplied by one supplier |
| | 2.2 Holding Tank | 1 | | | | | |
| | 2.3 Filtration Unit | 1 | | | | | |
| | 2.4 Feed Pump | 1 | | | | | |
| | 2.5 Product Transfer Pump | 1 | | | | | |
| | 2.6 Overhead Tank | 1 | | | | | |
| | 2.7 Semi-Automatic Filling & Capping Machine with Suitable Air Compressor | 1 | | | | | |
| | 2.8 Sterilizer (Vertical) | 1 | | | | | |
| | 2.9 High Pressure Water Cleaner | 1 | | | | | |
| 3. Palmyra fruit processing facility upgrade for Mullaitivu West Palmyra Development Co-operative Society | **Quality Control Equipment and Machineries** | | 8.29Mn | 2000.00 | 83,000.00 | 19.01.2020 | It is probable that all equipment's shall be supplied by one supplier |
| | 3.1 Thermometer meter | 1 | | | | | |
| | 3.2 Brix meter | 1 | | | | | |
| | 3.3 pH meter | 1 | | | | | |
| | 3.4 Palmyrah fruit Pulp extractor | 2 | | | | | |
| | 3.5 Digital balance | 1 | | | | | |
| | 3.6 Steam Double Jacketed Kettle | 1 | | | | | |
| | 3.7 Boiler Plant | 1 | | | | | |
| | 3.8 Water softeners | 1 | | | | | |
| | **Pulp extraction process** | | | | | | |
| | 3.9 Industrial Gas Burner with Cylinder(1) | 1 | | | | | |
| | 3.10 Industrial Gas Burner with Cylinder(2) | 1 | | | | | |
| | **Factory apparatus and utensils** | | | | | | |
| | 3.11 Silver bucket with cover (25L) | 10 | | | | | |
| | 3.12 Silver bucket with cover (50L) | 7 | | | | | |
| | 3.13 Stainless steel table | 5 | | | | | |
| | 3.14 Measuring cup, stainless steel, 1 L | 4 | | | | | |
| | 3.15 Measuring cup, stainless steel, 5 L | 3 | | | | | |
| | 3.16 Silver spoons - large | 2 | | | | | |
| | 3.17 Basin with cover, stainless steel, 50L | 10 | | | | | |
| | 3.18 Plastic cans with double caps - 10L | 200 | | | | | |
| | 3.19 Plastic cans with double caps - 5L | 500 | | | | | |
| | 3.20 Plastic cans with double caps - 1 L | 1,000 | | | | | |
| | 3.21. Semi automatic paste filler | 1 | | | | | |
| | 3.22. Stainless steel vessels for boiling | 2 | | | | | |
| | 3.23. Manual chipper machine | 1 | | | | | |
| | 3.24 Band sealer | 1 | | | | | |
| | 3.25. Fire extinguisher - 1Nos | 1 | | | | | |
| | 3.26 Insect Trap - 2Nos | 2 | | | | | |
| | 3.27 Storage racks | 25 | | | | | |

## லாவோஸ்


1. நாற்புறமும் நிலத்தால் சூழப்பட்ட ஒரே தென்கிழக்கு ஆசிய நாடு.
2. 19 ஜூலை 1949ஆம் ஆண்டு பிரான்ஸிடமிருந்து சுதந்திரம் பெற்றது.
3. இந்த நாட்டின் தேசியச் சின்னம் யானை. தேசிய மலர் மர சம்பங்கி.
4. விவசாயம் முக்கியமான தொழில்.
5. வியன்டியேன் இதன் தலைநகரம்.
6. புத்தர் ஆலயங்கள் இங்கு ஏராளமாக இருக்கின்றன. பா தட் லுவாங் என்ற புத்தர் ஆலயம் 3ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்டது. இதன் கோபுரம் தங்கத்தால் செய்யப்பட்டிருக்கிறது.
7. அதிக விசத்தன்மை கொண்ட 14 அடி நீளப் பாம்புகள் இங்கே இருக்கின்றன.
8. கம்போடியாவுக்கு அருகில் இருக்கக்கூடிய கோனே அருவி யில், நயாகரா அருவியைவிட இரு மடங்கு தண்ணீர் விழு கிறது.

**சிறுநீரகம் தேவை**

B,O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

T.P 077 875 9400

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 - 12 - 1971

உதிர்வு 28 - 10 - 2017

**அமரர் பீற்றர் அன்ரன் யூட் றொபின்**

அன்புடனும் பண்புடனும்
பார் போற்ற வாழ்ந்தீர்
காலமெல்லாம் கண்ணின் மணியாய்
எமைக் காப்பீர் எனக்
காத்திருந்த வேளையில்
பாதியிலே எமைப் பரிதவிக்க
விட்டுச் சென்ற காரணம் யாமறியோம்.
ஆண்டவர் சந்நிதியில் ஆத்மா சாந்தியடைய

என்றும் உங்கள் நினைவுகளுடன் பிரார்த்திக்கும்
**மனைவி, மகன்.**

(CS 2892G)

### பிள்ளையானை...

பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மகிந்த, முதலில் தீபாவளி வாழ்த்துக்களை தெரி வித்துக் கொள்கின்றேன். மலையக மக்களுக்கு தீபாவளி முற்பணம் கொடுப்பார்கள். அதுவும் இம்முறை கொடுக்கப்படவில்லை. அதற்கும் எமது எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கின்றேன்.
நான் பிள்ளையானை சந்திக்க வந்துள்ளேன். அவரை பார்த்து பேசினேன். அவருடைய தலை மையில் ஒரு பெரிய கூட்டம் ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. அதன் காரணமாகவே அவரை வந்து நான் சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளேன்.
இம்முறை தேர்தலில் ஒரு தீர்க்கமான முடிவு களை எடுக்க வேண்டும் என்று மக்களிடம் கேட் டுக் கொள்கின்றேன். தவறான முடிவுகளை எடுக்க வேண்டாம்.
மக்கள் நல்ல முடிவுகளை எடுப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். காரணம் இந்த அரசு மட் டக்களப்பு மக்கள் மட்டுமல்ல கிழக்கு மாகாண மக்களுக்கு ஒட்டுமொத்த இலங்கை மக்களுக் கும் எவ்விதமான வேலைத்திட்டங்களை செய்ய வில்லை என்பதே உண்மை.
மட்டக்களப்பில் நான் செய்த வேலைத்திட்டங்களை விட ஏதாவது வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளதா ? நீங்களே அதனை பார்க்கலாம் - என்றார். (ஒ,5)

### இளைஞர்கள்...

இளைஞர்கள் உரையாடி கொண்டு நின்ற போது உந்து ருளியில் வந்த குழு அவர்கள் மீது சரமாரியான கத்திக் குத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளது. இதனால் இருவர் வயிற்றிலும் முதுகிலும் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அளவெட்டிப் பகுதியில் நேற்று மாலை கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டில் உள்ள நபரை வெளியில் அழைத்து அவரைக் கத்தியால் குத்திவிட்டு குழு ஒன்று தப்பித்துச் சென்றுள்ளது. காயமடைந்த நபர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார். (ஒ,5,7,26)

### பேச்சுக்கு...

திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தரவில்லை. இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலரும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி யின் அரச தலைவர் வேட்பாளரு மான கோத்தபாய ராஜபக்ச தெரிவித் தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 5 கட்சி களும் இணைந்து பொது ஆவணம் தயாரிப்பதற்கு முன்னரே, அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் பிர தான வேட்பாளர்களுடன் பேச்சுக் களை ஆரம்பித்திருந்தது. அந்தப் பேச்சுக்கள் தொடரும் என்று, கூட்ட மைப்பின் பேச்சாளரும், நாடாளு மன்றஉறுப்பினருமானஎம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்த நிலையில், கூட்ட மைப்புடனான பேச்சுத் தொடர்பில் கோத்தபாயவிடம், பன்னாட்டு ஊட கம் ஒன்றின் கொழும்புச் செய்தியா ளர் கேள்வி எழுப்பியிருந்தார். அதற் குப் பதிலளிக்கையிலேயே மேற்கண் டவாறு அவர் குறிப்பிட்டார்.
'நான் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை யைத்தான் அடியோடு நிராகரிக்கின் றேன். அதற்காக தமிழ்க் கட்சிகளு டன் பேச்சு நடத்தத் தயாரில்லை என்று ஒருபோதும் சொல்லவில்லை. கூட்டமைப்புடன் பேச்சு நடத்த அனு மதி கோரியிருந்தேன். அவர்கள்தான் இன்னமும் சந் திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தர வில்லை. அவர் கள் நேரம் ஒதுக் கித் தந்தால் எந்த வேளையிலும் சந்திப்பதற்குத் தயாராக இருக் கின்றேன். தமிழர் களின் வாக்குக ளைப் பெறுவ தற்கு அவர்க ளைப் பிர திநித்து வப்படுத்தும் எந் தக் கட்சிகளுட னும் பேச்சு நடத் தத் தயாராக இருக்கின்றோம்' என்றார் கோத்த பாய. (ஒ,5,22)

## 41ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில் 08.06.1953

விண்ணில் 20.09.2019


**சுப்பிரமணியம் பாக்கியம்**

எமது அம்மாவின் இறப்புச் செய்தி கேட்டு எம் பிரிவுத் துயரிலும் இறுதி திருப் பலியிலும் கலந்துகொண்டு ஆன்ம இளைப்பாற்றிற்காக செபித்து பல வழி களிலும் உதவி செய்த பெரியோர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், பங்குத்தந்தையர்கள், வழிபாட்டுக்குழுவினர், பங்குமக்கள், தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்து கொண்ட அன்பு உள்ளங்கள் மற்றும் அவர் நோயுற்ற காலத்தில் அவரைப் பராமரித்து அவருக்காக செபித்த அனைத்து உள்ளங்க ளிற்கும் எம் சிரம் தாழ்த்தி கரம் கூப்பி நன்றிகளை அன்புடன் தெரிவிப்பதுடன் அழைப்பு கிடைக்க தவறியவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று (30.10.2019) புதன்கிழமை காலை 6 மணிக்கு வவுனியா புனித அந் தோனியார் ஆலயத்தில் நடைபெறும். அம்மாவின் ஆன்ம இளைப்பாற்றிற்கான நினைவுத் திருப்பலியில் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

4ஆம் ஒழுங்கை, சாந்தசோலை
மகாறம்பைக்குளம், வவுனியா.

குடும்பத்தினர்.
077 922 5653, 077 959 1253

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்



தோற்றம் 31.01.1976

மறைவு 30.09.2019

**அமரர்**
**திருஞானசம்பந்தர் கோடீஸ்வரன்**

கடந்த (30.09.2019) திங்கட்கிழமை சிவபத மடைந்த எமது குடும்பத்தலைவர் திருஞான சம்பந்தர் கோடீஸ்வரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (28.10.2019) திங்கட்கிழமை வில்லூன்றி தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய கிரியைகள் (30.10.2019) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

193/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 419 9685

வாணிப வித்தகர் அமரர் S.V முருகேசு அவர்களின் புத்திரன்
**உயர்திரு. முருகேசு நடராசா**
(பொறியியலாளர் S.V.M Private Ltd பணிப்பாளர்)அவர்களுக்கு
**எமது இதய அஞ்சலி**




தோற்றம் 18.11.1952

மறைவு 26.10.2019

ஆற்றலும் அறிவும் மிக்க தொழில் வித்தகரே!
காரைநகர் மண்பெற்றெடுத்த கலங்கரை விளக்கே!
மண்ணைவிட்டு மறுவுலகம் சென்ற செய்தி
எம்மவரை வருத்துகிறது
எங்குதான் இனிமேல் காண்போம்?


**சரவணா றேடேர்ஸ்**
இல.3 நவீனசந்தை வெளிப்புறம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## இரண்டு படங்களிலும் 5 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடிப்போம்



## அழகிய படங்கள் வரைய கற்போம்






## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை (வெள்ளையப்பா) வீரசிங்கம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கணவோடை, களபூமி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை (வெள்ளையப்பா) வீரசிங்கம் (ராசன் மருந்தாளர்) நேற்று (27.10.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை வேலுப்பிள்ளை அன்னபூரணம் தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான M.A கந்தையா தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும் புவனேஸ்வரியின் கணவரும் ஐங்கரன், கேசவன், கலைமகள் ஆகியோரின் அன்புத்தந்தையும் திருமகள், டெபி, சஜீவன் ஆகியோரின் மாமனாரும் அக்சரா, அனுஷ்கா, அருண், அஞ்சலி, கார்த்திகேயன், குமரன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான அன்னபாய்க்கியம், பரமேஸ்வரி மற்றும் திலகவதி, திருநாவுக்கரசு, காலஞ்சென்ற புனிதவதி மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற உமாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2019) திங்கட்கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் களபூமி தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு
021 225 1835,
077 114 7054

தகவல் :
ஐங்கரன் - 00447900583800 UK
கேசவன் - 0044795660428 UK


# பொன்மொழிகள்

1. பத்தாவது முறையாகக் கீழே விழுந்தவனை பார்த்து, பூமி முத்தமிட்டு சொன்னது..."நீ ஒன்பது முறை எழுந்தவன் என்று"!
2. தோல்வியும் துன்பமும் தனியே வருவதில்லை. கூடவே வலிமையையும் அழைத்து வருகிறது.
3. என் தவறை என்னிடம் தயங்காமல் கூறுபவன் நண்பன். என் தவறை மற்றவர்களிடம் தயங்காமல் கூறுபவன் துரோகி.
4. அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது.
5. கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்.
6. மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகியிருக்கும்.
7. வாசிப்புப் பழக்கம் என்பது அருமையான ருசி, அழகான பசி. ஒரு முறை சுவைக்கப் பழகிவிட்டால் அது தொடர்ந்து வரும்.
8. அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து. அறிவை வளர்த்துக் கொண்டால் எல்லாவிதமான பயங்களும் அகன்றுவிடும்.
9. நேற்றைய பொழுதும் நிஜமில்லை; நாளைய பொழுதும் நிச்சய மில்லை; இன்றைய பொழுது மட்டுமே எம் கையில்.

## இரவில் நூடில்ஸ் உணவு சாப்பிடலாமா



நீண்டநேரம் பசியைக்கட்டுப்படுத்தும் ஆற்றல் நூடில்ஸ் உணவுக்குண்டு.ஆனால் இதனை இரவு நேரத்தில் சாப்பிட்டால், சில பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடும்.

இரவில் கொழுப்புச்சத்து நிரம்பிய வறுத்த, பொரித்த உணவுகளை அதிக அளவில் உண்பதால் எடை அதிகரிப்பதற்கும், நோய்கள் உள்ளே வருவதற்கும் முக்கிய காரணமாக அமைகிறது.

நீண்டநேரம்பசியைக்கட்டுப்படுத்தும்ஆற்றல்நூடில்ஸ்உணவுக்குண்டு. ஆகையால்பசிஅதிகமாக எடுக்கும்போது இதைச்சாப்பிடலாம். ஆனால் இதனை இரவு நேரத்தில் சாப்பிட்டால், சில பிரச்சி னைகளுக்கு ஆளாக நேரிடும்.

நூடில்ஸில்இருக்கும்கொழுப்பு, நீங்கள்தூங்கும்போதுஉங்கள்உடலின் எடையை எக்கச்சக்கமாக அதிகரிக்கும். இது தவிர இதில் உள்ள கார்போஹைட்ரேட்கள் இருப்பதால் அஜீரண கோளாறுகளும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

ஆகவேதான் இரவில் நூடில்ஸ் உணவு சாப்பிடக்கூடாது. இதனை தவிர்த்து ஆரோக்கியமான வேறு நல்ல உணவு வகைகள் சாப்பிட்டு வந்தால், உங்கள் உடலின் எடையும் கூடாது, உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கும்.

## சரும வறட்சியை போக்கும் நெய்



நெய் ஆரோக்கியமான மற்றும் எடை அதிகரிப்பதற்கு உதவு கின்றது. நெய் மென்மையான மற்றும் ஆரோக்கியமான தோலைப் பெற பயன்படுத்தப்படுகிறது.

நெய் சரும வறட்சியைத் தடுத்து புத்துணர்ச்சியை அளிக்கின்றது. சிறிதளவு நெய்யைச் சருமத்தில் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்யவும். விரைவில் சருமம் உலர்வதைத் தடுத்து எதிர்காலத்தில் சரும வறட்சியை தடுக்க பாதுகாப்பான மருந்தாகும்.

உங்கள் கண்கள் சோர்வடைவதால் களைப்படைவதால் பாதிக்கப்படுகின்றவரா நீங்கள் சிறிது நெய்யை எடுத்து கண்களை சுற்றி பூசுங்கள். இவ்வாறு தினமும் செய்து வந்தால் கண்கள் சோர்வடைவது குறையும்.

நெய் உலர்ந்த உதடுகளைத் தடுத்து பளபளப்பான மற்றும் இளஞ்சிவப்பு உதடுகளை அளிக்கின்றது. அதற்குத் தினமும் படுக்கபோவதற்கு முன்னால் சிறிதளவு நெய்யை உதட்டில் தடவி வந்தால் விரைவில் நல்ல பலனை காணலாம்.

# எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்

கே.எஸ்.சிவஞானராஜா



*"துதிப்போர்க்கு வல்வினைபோம்*
*துன்பம்போம் நெஞ்சிற்*
*துதிப்போர்க்குச் செல்வம்*
*பலித்துக் கதித்தோங்கும்*
*நிஷ்டையும் கைகூடும்*
*நிமலர் அருள்*
*கந்தசஷ்டி கவசம் தனை"*
*"அமரர் இடர் தீர அமரர் புரிந்த*
*குமரனடி நெஞ்சே குறி"*

ஆறுமுகம் கொண்டு, ஆறிரு திண்புயமும் பன்னிரண்டாயுதமும் பாசாங்குசமும் பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்கவும் பல்பூஷணமும் பதக்கமும் தரித்து, அழகிய மார்பில் நன்மணி பூண்ட நவரத்தின மாலையும் முப்புரி நூலும் முத்து அணி கொத்தாகிய கவினுறு கழுத்தும் செப்பழகுடைய திரு வயிறு உந்நியும் துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும் நவரத்தினம் பதித்த மேலாடையும் இரு தொடை அழகும், இணை முழந்தாளும் திருவடி அதனில் சிலம்பொலி முழங்கவும்நீறிடுநெற்றியும்நீண்டபுருவமும் ஓம்கார பிரணவ மந்திரம் தவளும் பவளச் செவ்வாயும் இலங்க, அசுரர் குடி கெடுத்த ஐயன் முருகப் பெருமான் மையல் நடம் செய்யும் மயில் வாகனனாக கையில் ஆடும் பணி வேலுடன் மந்திரமே உருவாக, அட்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாக திசைமன்னர் எண்மர் சேர்ந்து பணிந்து வணங்கவும் நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திட சகல உயிர்களுக்கும் அபயகரமளித்து காட்சி தருகின்றார்.

**சிறப்பு**

இலங்கையிலும் இந்தியாவிலும் முருகப்பெருமானை விரதமிருந்து தவமிருந்து போற்றி வழிபாடாற்றி வரம் பெறும் விரதங்களில் சிறப்பானது கந்தசஷ்டியாகும். விநாயகருக்குச் சதுர்த்தி போல முருகனுக்கு கந்தசஷ்டி பேறானதாகும். கந்தனுக்குரிய விரதங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன வார விரதம், நட்சத்திர விரதம், திதி விரதம் ஆகிய மூன்றுமாகும். வார விரதம் என்பது ஒவ்வொரு வாரத்திலும் சுக்கிர வாரம் என்று சொல்லப்படும் வெள்ளிக்கிழமையன்று விரதமிருந்து முருகனை வழிபாடாற்றுவதாகும். நட்சத்திர விரதம் என்பது ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரத்தன்று விரதமிருந்து முருகனை வழிபாடாற்றுவதாகும். திதி விரதம் என்பது ஐப்பசி மாதம் வளர்பிறையில் சஷ்டியன்று விரதமிருந்து முருகனை வழிபாடாற்றுவதாகும். இந்த விரதந்தான் எல்லா விரதங்களிலும் சகல பேறுகளையும் தர வல்லதாகும். இதைவிட ஒவ்வொரு மாதமும் வருகின்ற சஷ்டியன்று விரதமிருந்து முருகனை வழிபடுபவர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

சஷ்டியில் பொதுவாகவே உண்ணா நோன்பு இருந்து உடல் பொருள் ஆவி தன்னை முருகனுக்காய் சொந்தமாக்கி மிளகு, பால், பழம் மூன்றோடும் உடலை இலகுவாக்கி முருக நாமம், முருகநாம பஜனை, முருக நாம சங்கீர்த்தனம், கந்தசஷ்டி கவசம், கந்தரனுபூதி, கந்தலரங்காரம், கந்தர் கலிவெண்பா, திருமுரு காற்றுப்படை, கந்தபுராணம், திருச் செந்தூர்ப் புராணம், முருகன் கூத்த லங்காரம், கந்தவன மான்மியம் என முருக வாலாய், நூல்கள் படிக்கவும் பாடவும் முன்னெடுக்கப்படுகிறது.

முதல் ஆறு நாள்களும் கடும் விரதமிருந்து முருக ஆலயங்களிலும் தரிசனமும் பூசையும் கண்டு ஏழாம் நாள் பாரணையோடு அடியாளர்களுக்குத் தானம் செய்து தவமாகித் தாமும் விரதத்தை நிறைவு செய்து வேண்டி வரங்களுக்குப் பாத்திரமாகிப் பூரித்துப் பூத்திருப்பர்.

இலங்கையில் நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, இணுவில், கந்தவனம், அளவெட்டி, ஏழாலை, கொக்குவில், தென்மராட்சி, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, மலையகம், கதிர்காமம் ஆகிய முருக ஆலயங்களிலே மிகவும் பயபக்தியோடும் பரவசத்தோடும் மெய்மறந்து கந்தசஷ்டி விரதத்தை கடைப்பிடிக்கிறார்கள்.



**கவசம்**

ஸ்ரீ பாலதேவராய சுவாமிகளினால் உளம் உருகிப் பாடப்பட்ட கந்தசஷ்டி கவசப் பாடலே உலகெங்கணும் பாடப்படுகிறது. இந்தியாவில் இந்த விரதம் பெரும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக குழந்தைப் பாக்கியம் வேண்டுவோர்க்கு இந்த விரதம் ஒரு அனுகூலமாகச் சித்தி பெறுகிறது.

"நீ துயரப்படுகிறாய் சுகம் தருவேன்", "யாமிருக்கப் பயம் ஏன்?" என்றவாறும் நவக்கோள்களான சூரியன், சந்திரன், செவ்வாய், சனி, ராகு, கேது, புதன், வியாழன் ஆகிய ஒன்பதின் பார்வையும் நன்மையளிக்குமாறு செய்வேன் என்றவாறும் முருகன் எந்தநாளும் ஈரெட்டாய் வாழ கந்தசட்டியில் வரந்தருளக் காத்திருப்பான். அதைவிட முருகா! முருகா! என்று கூவியழைக்க தண்டியக்காரர்களும் சண்டாளர்களும் இடிவிழுந்து பொடிபெர்டியாகப்போவர். சிவபெருமான் முருகன் பெருமையை மொழிகின்றார். முருகனாலேயே எதையும் வெல்லமுடியுமென்கிறார்.

தேவி! நமக்கு ஆறு முகங்கள் இருப்பது போல முருகனுக்கும் ஆறுமுகங்கள் உண்டு. 'ஓம்' என்ற ஒலி அட்சரத்தோடு எமது ஆறெழுத்தும் உனது மகனான முருகனின் சடாட்சர மந்திரமாகிறது. 'சரவணபவ' என்பதில் ச- மங்கலம், ர- ஒளி, வ - சாத்துவிகம், ந- போர், ப- வெற்றி, வ- பேறளிப்பவர். ஆகவே அசுரர்களைப் பெரு வெற்றி கொண்டு மங்கலத்தை அருள்பவராக முருகன் கந்தசஷ்டியில் கோலமுறு ஞாலமுடன் காட்சி தருகின்றார்.

இதன் பிரகாரம் சூரவம்சம் அழியப் போகிறது. இமையவர் தம்மைக் கொடுமைப்படுத்தியன் விளைவாக ஆணவமும் அக்கிரமமும் அதிகாரங் கொண்ட சூரபத்மன் மட்டுமல்ல செருக்குடைய எவருமே கந்தசஷ்டி விரதகாலத்தில் ஆடி அடங்குவர் என்பது விரதமான்பாகும். நாமும் திருந்த வாய்ப்புண்டு.

அன்றோர்களையும் குழந்தைகளையும் பெண்களையும் தவத்தினரையும் அந்தணர்களையும் மேலோர்களையும் சிறுவர்களையும் தண்டித்தவர்களும் தண்டிப்பவர்களும் கந்தசஷ்டியில் வருந்துவதும் திருந்துவதும் மரபாகும்.

**பலன்**

கந்தசஷ்டி விரதம் வீட்டுக்கும் நாட்டுக்கும் மிகுந்த நன்மை பயக்கும். எதிரிகள் எவராயினும் அடிபணிந்து சக வாழ்வும் சமாதானமும் சரணமும் எய்தவர்.

கொடு நோய்கள் யாவும் விலகி உடலை விட்டு நீங்கும் சந்தான பாக்கியமும் சௌபாக்கிய விருத்தியும் சாதகமாகும். தனம், தானியம், மனம் மாங்கல்யம், கனம், கௌரவம், அபரிமிதமாகு உச்சம் தரும். சொந்தபந்தம், உணவு, உறையுள், கல்வி, செல்வம், ஆயுள், ஆளுமை, மாட்சி, ஆட்சி யாவுமே வீடு தேடி வரும்.

**மனிதரும் தேவராகலாம்**
**தேவரும் மனிதராகலாம்.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொல்லப்பட்டார் பக்தாதி

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தொடர் தாக்குதல்களை நடத்தி சுமார் 250க்கும் மேற்பட்ட அப்பாவி உயிர்களைக் காவுகொண்ட ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட் (ஐ.எஸ்.ஐ.எஸ்) அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவு அமெரிக்க இராணுவத்தால் சிரிய வான் பரப்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே அல் பக்தாதி கொல்லப்பட்டுள்ளார்.

இலங்கை நேரப்படி நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இந்த அறிவித்தல் வெள்ளைமாளிகை வட்டாரங்களில் இருந்து வெளிவந்தது. மாலை 7.10 மணியளவில் 'பக்தாதி கொல்லப்பட்டார்' என்ற அறிவிப்பை உத்தியோகபூர்வமாக வெளியிட்டார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

மத்திய கிழக்கு அயல் நாடுகளான ஈராக், சிரிய நாடுகளின் எல்லைப் பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை இஸ்லாமிய சட்டங்களுக்கு உட்பட்ட தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு. அந்த அமைப்பின்பிடியில் இட்லிப், டமஸ்கஸ், பல்மைரா, பக்தாத் என்ற முக்கிய நகரங்கள் பலவும் இருந்தன. கள்ளச் சந்தையில் கஞ்சா விற்பனை, போதைப்பொருள்கடத்தல், இராணுவத்தளபாடப்பரிமாற்றம் என்று பலவழிகளில்பணத்தைக்குவித்துவந்தஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இராணுவ ரீதியாக தன்னை குறுகிய காலத்துக்குள் வலுவாகக் கட்டமைத்துக் கொண்டது.


ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக அமெரிக்காவின் தலைமையில் கூட்டுப்படை போராட ஆரம்பித்தது. படிப்படியாக ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான போர்முன்னெடுக்கப்பட்டது. பொதுமக்களுடன் மக்களாக வாழ்ந்தமை, மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை என்பன அந்த தீவிரவாத அமைப்புக்கு எதிரான பன்னாட்டுச்சமூகத்தின் போரை மந்தப்படுத்தின. இருந்த போதிலும் 2017ஆம் ஆண்டு ஈராக்கில் இருந்து விரட்டப்பட்டது ஐ.எஸ். ஈராக்கில் இருந்த பக்தாதி சிரியாவுக்குள் நுழைந்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக பக்தாதி தேடப்படுவதும், அவரை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்படுவதும் தொடர்ந்தது. இடையே இரண்டு தடவைகள் பக்தாதி கொல்லப்பட்டார் என்று தகவல் வெளிவந்திருந்தது. எனினும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தகவலை உறுதிப்படுத்தவில்லை. இதையடுத்து உயிர்த்தஞாயிறு தினத்தன்று இலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து பக்தாதி காணொலியில் தோன்றி உரையாற்றினார். இதையடுத்து அவர் உயிருடன் உள்ளார் என்று உறுதிப்படுத்தப்பட்டு சிரியாவில் அவர் தீவிரமாகத் தேடப்பட்டார்.

சிரியப் புறநகர்ப் பகுதிகள், சிரியப் பாலைநிலங்கள் என்பவற்றில் சல்லடைபோட்டது அமெரிக்கா. எனினும் எந்தத் தகவலும் இல்லாத நிலையில், அமெரிக்கப் படைகளால் மிகமிக இரகசியமாக முன்னெடுக்கப்பட்ட வான்தாக்குதலில் பக்தாதி கொல்லப்பட்டுள்ளார் என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியா, ஈராக் நாடுகளிலும், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பக்தாதி கொல்லப்பட்டமை வெகுகோலாகலமாகக் கொண்டாடப்பட்டுவருகின்றது. ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டதன் பின்னர் ஹம்சா பின்லேடன் தோற்றம் பெற்றதைப்போன்று பக்தாதியின் பின்னர் இன்னும் ஒருவர் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை வழிநடத்தத்தான் போகின்றார். அனைத்து வலையமைப்புக்களையும் முறியடித்து இந்தப் பூமியை பயங்கரவாதம் அற்ற தேசமாக்குவது வல்லரசுகளின் பொறுப்பு. கடமையும்கூட.

# புடினின் செல்வாக்கு சரிந்து செல்கிறதா?



ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் வீழ்ச்சிக் காலம் தொடங்கிவிட்டது என்றே தோன்றுகிறது. அரசியல் ரீதியாக உள்நாட்டில் எதிர்ப்பு வலுத்துவருகிறது. அவரது செல்வாக்கு வேகமாகச் சரிந்துவருகிறது. இப்போது அவர் எதிர்ப்புகளை அடக்கியாள்வதில்தான் பெரும் அக்கறை காட்டுகிறார்.

எதிர்ப்புகள் வெளியில் தெரியாமலும், எதிர்ப்பாளர்கள் செல்வாக்குப் பெறாமலும் புடின் எவ்வாறு கையாள்கிறார்? வழக்கறிஞர் கரின்னா மாஸ்கலேன்கோ விவரிக்கிறார். 'தனக்கு எதிராகச் செயல்பட நினைக்கும் அனைத்துத் தொழிலதிபர்களையும் சிறையில் தள்ள வேண்டியது அவசியமில்லை. மிகவும் பணக்காரரும் சுதந்திரமானவரும் அனைவருடனும் நல்ல தொடர்பில் உள்ளவருமான ஒருவரை மட்டும் சிறையில் தள்ளினால் போதும், மற்றவர்களுக்கு அது எச்சரிக்கையாக அமைந்துவிடும். தன்னைக் கடுமையாக விமர்சிக் கும் எல்லா பத்திரிகையாளர்களையும் ஒடுக்க வேண்டிய அவசியமே இல்லை. தலைசிறந்தவரும், மிகுந்த துணிச்சல் உள்ளவருமான ஒரு பத்திரிகையாளரை ஒடுக்கினால் போதும்; மற்றவர்கள் பாடம் படித்துவிடுவார்கள் என்று நம்புகிறார் புடின்' என்கிறார் மாஸ்கலேன்கோ. இந்த வியூகம் ஒன்றும் புதுமையானதில்லை. காலங்காலமாக யதேச்சதிகாரிகள் கையாள்வதுதான்.

### அராஜக அடக்குமுறை

எதிர்க்கட்சி வரிசையிலேயே மிகவும் முக்கியமானவராக இருந்த போரிஸ் நெம்சோவ் 2015ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார். அந்தப் படுகொலையின் பின்னணியில் 'கிரெம்ளின்' இருப்பதாகப் பத்திரிகைகள் எழுதின. நெம்சோவுக்குப் பிறகு புடினை எதிர்ப்பதில் முக்கியப் பங்கு வகித்தவர் அலெக்ஸி நவால்னி. அவர் மீது வெவ்வேறு பொய்யான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு சிறைக்குப் போவதும் வருவதுமாக இருந்தார். அது மட்டுமல்ல இன்னதென்று இனம் காண முடியாத ரசாயனத் திரவகங்களும் அவர் மீது ஊற்றப்பட்டன. ரஷ்ய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் புடினைக் கடுமையாக விமர்சித்துவந்தவருமான டெனிஸ் வொரனன்கோவ் போன்றவர்கள் அந்நிய நாடுகளின் தலைநகரங்களில் பட்டப்பகலில் மர்மநபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இப்படியான கொலைகள், அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் சிலர் ஜனநாயகத்துக்காக உறுதியாக நிற்பதும் தொடர்கிறது.

### நிழலுலக நண்பர்கள்

சோபலின் கணவருக்கு விஷம் ஊட்டப்பட்டது. அவரைத் தாக்க வந்தவர்கள் சோபலின் முகத்தில் கறுப்புநிற திரவத்தைப் பூசினார்கள். அதை 'பிரமிதியஸ்' என்றும் அழைப்பார்கள். அது நிமிஷத்துக்கு நிமிஷம் தீவிரமாகி இறுதியில் உயிரைப் பறித்துவிடும் இரசாயன நஞ்சு. அதன் பாதிப்பிலிருந்து அவர் மீட்கப்பட்டார். பொலிஸார் அவரைப் பெண்ணென்றும் பாராமல் அவருடைய அலுவலகத்திலிருந்து பொலிஸ் நிலையத்துக்கு வீதியில் இழுத்துவந்தது. 'அரசை எதிர்ப்பவர்களை இணங்க வைக்கவோ பணியவைக்கவோ முடியாது என்கிற நிலையில், அவர்கள் கொல்லப்படுகிறார்கள். தன்னை எதிர்ப்பவர்களைத் தீர்த்துக்கட்டுமாறு புடின் உத்தரவிட வேண்டிய அவசியம்கூட இல்லை, அவருடைய நிழலுலக நண்பர்கள் தங்களுடைய நண்பரின் நிம்மதிக்காக இதை எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்து முடிப்பார்கள். பலமற்றவர்களைப் பலசாலிகள் அச்சுறுத்துவதைச் சிறு வயது முதலே எதிர்த்துவந்திருக்கிறேன். சிறு வயதிலிருந்தே நேர்மையாக நடக்க வேண்டும் என்று சொல்லி வளர்க்கப்பட்டவள் நான். எனவே, எனக்கு அச்சமில்லை!' என்கிறார் சோபல்.

எளிதில் அடங்க மறுக்கும் எதிர்ப்பாளர்கள் மட்டும் சர்வாதிகாரிகளின் வீழ்ச்சிக்குக் காரணமாவதில்லை, சர்வாதிகாரிகளால் கொல்லப்படும் அசாதாரணமான மக்கள் தலைவர்களும், சர்வாதிகாரிகளை வீழ்த்திவிடுவார்கள். தென்னாப்பிரிக்காவின் ஸ்டீவ் பைகோ, பிலிப்பின்ஸ் நாட்டின் பெனிக்னோ அகினோ, போலந்தின் ஜெர்சி பொப்பிலுஸ்கோ போன்றவர்களால் சர்வாதிகாரிகள் எப்படி வீழ்ந்தார்கள் என்பதை வரலாறு சொல்கிறது.

### சரியும் செல்வாக்கு


நெம்சோவ் இப்போது கிரெம்ளினை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறார். செர்கி மேக்னிட்ஸ்கி, நடாலியா எஸ்டிமிராவா, அலெக்சாண்டர் லிட்வினன்கோ, அன்னா பொலிடிகோவ்ஸ்காயா போன்றோர் புடின் ஆட்சிக்காலத்தில் கொல்லப்பட்ட அரசியல் எதிரிகள். தொடர்ந்து உயர் பதவியில் நீடித்திருக்க புடின் கடைப்பிடிக்கும் உத்தி இதுதான்: அடிவருடிகளுக்குப் பணத்தை அள்ளி வீசு. எதிரிகளுக்குப் பீதியூட்டு. மக்களிடம் 'எதிரிகளால் ஆபத்து' என்ற தேசியவாதப் பரப்புரை செய்! இவ்வளவுதான்... ஆயுட்காலம் முழுக்க ஆட்சியில் இருந்துவிடலாம்' என்று நம்புகிறார் புடின். ஆனால், பன்னாட்டு ஒதுக்கல், தொடர்ந்து தேங்கிய நிலையில் உள்ள பொருளாதாரம், மக்களால் விரும்பப்படாத ஓய்வூதியச் சீர்திருத்தங்கள், நம்பகத்தன்மையற்ற வெளிநாட்டுச் சாகசங்கள் என்று ஆட்சிக்கு எதிரான அதிருப்தியும் வெறுப்பும் வளரும் வேகம் மோசமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டன.

முக்கியமான மாற்றம் இளைஞர்களிடம் வெளிப்படுகிறது. ஹாங்காங்கைப் போல ரஷ்யாவிலும் அரசுக்கு எதிரான போராட்டங்களில் இளைஞர்கள்தான் முன்னிலை வகிக்கின்றனர். புடினை நம்பும் இளைஞர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 30 வீதமாக இருந்தது. இப்போது 19 வீதமாகச் சரிந்திருக்கிறது. ஆயுட்காலம் முடியும் வரையில் உயர் பதவியில் இருக்க விரும்பும் புதினுக்கு இது நல்ல சகுனம் இல்லை.

நன்றி : இந்து தமிழ் திசை

# சிரியப் பிரச்சினை தலைதூக்குகிறது!

கடந்த 8 ஆண்டுகளாக சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டுக் கலவரத்தால் சிந்திய குருதி போதாதென்று குருதி ஆறு ஓடும் வகையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் புதிய முடிவை எடுத்திருக்கிறார். குர்து இனத்தவருக்கு பாதுகாப்பாக சிரியாவின் வடகிழக்கு பகுதியில் இருந்த அமெரிக்க படைகளை திரும்பப் பெறுவதாக அறிவித்தார் ட்ரம்ப். அவரின் இந்த முடிவால், குர்து மக்களின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. அமெரிக்க படைகள் வெளியேறிய அடுத்த நிமிடத்தில் இருந்து குர்து இனத்தவர் மீது துருக்கி படைகள் தாக்குதலை தீவிரப்படுத்திவிட்டன. இதையடுத்து, துருக்கி மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக துருக்கி அதிபர் எர்டோகனுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிரான வேட்டையில் குர்து இனத்தவரை நன்கு பயன்படுத்திக் கொண்ட ட்ரம்ப், இப்போது அவர்களை உதாசீனப்படுத்தியுள்ளார். இது அவர்களை மிகவும் கேவலப்படுத்துவதாக உள்ளது.



**ட்ரம்புக்கு கண்டிப்பு**

ட்ரம்பை அதிபர் பதவியில் இருந்து அகற்றுவது தொடர்பான விடயத்தில் வேறுபட்டு இருக்கும் ஜனநாயகக் கட்சியினரும் குடியரசுக் கட்சியினரும், சிரியாவில் இருந்து படைகளை விலக்கிக் கொள்ளும் முடிவை ஒன்றுபட்டு கண்டித்திருக்கிறார்கள். பிரதிநிதிகள் சபையில் ட்ரம்ப் நிர்வாகத்தின் முடிவுக்கு எதிராக 354 பேரும், ஆதரவாக 60 பேரும் வாக்களித்திருக்கிறார்கள். அமெரிக்க படையை வாபஸ் பெறுவது மோசமான விளைவை ஏற்படுத்தும் என குடியரசுக் கட்சித் தலைவர்களே கூறியிருக்கின்றனர். அவர்களில் ஒருவர், கொலைகாரர்களுக்கும் சர்வாதிகாரிகளுக்கும் ஆதரவாக ட்ரம்ப் செயல்பட ஆரம்பித்து விட்டார் எனக் கூறியிருக்கிறார். செனட் சபையிலும் ட்ரம்புக்கு நெருக்கமான குடியரசுக் கட்சித் தலைவர்கள் அமெரிக்க வெளியுறவுக் கொள்கைகள் குறித்து வெளிப்படையாக விமர்சித்துள்ளனர். ஐஎஸ் தீவிரவாதிகள் மீண்டும் செயல்படத் தொடங்கினால் அதற்கு ட்ரம்ப் தான் பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என செனட்டர் லிண்ட்சே கிரகாம் கூறியி ருக்கிறார்.

குர்து இனத்தவரைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை என அமெரிக்க அதிபர் கூறியிருப்பது, இத்தனை நாள் நடந்த உள்நாட்டுக் கலவரத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட குர்து இனத்தவரின் கன்னத்தில் விழுந்த அறையாகும். குர்து இனத்தவரின் கட்டுப்பாட்டில் உள்ள சிறைகளில் இருக்கும் 11 ஆயிரம் ஐஎஸ் தீவிரவாதிகள் குறித்தும் பெரும் அச்சம் எழுந்துள்ளது. இவர்களில் 50 தீவிரவாதிகள் மத்திய கிழக்கு நாடுகளில் மட்டுமல்லாது ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் கூட மிகப் பெரிய தாக்குதல்களை நடத்தும் அளவுக்கு அபாயகரமானவர்கள். அமெரிக்காவின் சொல் பேச்சுக்கு கட்டுப்பட்டு இத்தனை நாள் நடந்து கொண்ட குர்து இனத்தவரை கைவிட்டதோடு, அவர்களை துருக்கி அதிபர் எர்டோகனின் கோரத் தாக்குதல்களுக்கு இலக்காக மாற்றிவிட்டார் ட்ரம்ப்.

**என்ன செய்வார் எர்டோகன்?**

ஆனால், குர்து இனத்தவர் மனம் தளரவில்லை. எந்த சூழலிலும் தாக்குப்பிடித்து வாழும் அவர்களின் இயல்பை கைவிடவில்லை. மேலும் துருக்கி சிரியா எல்லையை ரஷ்ய படையினருடன் சேர்ந்து சிரியா ராணுவமும் காவல் காத்து வருகிறது. வட சிரியாவில் இருந்து அமெரிக்க

> “குர்து இனத்தவருக்கு பாதுகாப்பாக சிரியாவின் வடகிழக்கு பகுதியில் இருந்த அமெரிக்க படைகளை திரும்பப் பெறுவதாக அறிவித்தார் ட்ரம்ப். அவரின் இந்த முடிவால், குர்து மக்களின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. அமெரிக்க படைகள் வெளியேறிய அடுத்த நிமிடத்தில் இருந்து குர்து இனத்தவர் மீது துருக்கி படைகள் தாக்குதலை தீவிரப்படுத்திவிட்டன.

படைகளை விலக்கிக் கொள்வதன் மூலம், ரஷ்யாவும் சிரியாவும் அதன் நெருங்கிய நாடான ஈரானும் இந்தப் பகுதியில் கோலோச்ச ஏற்பாடு செய்துவிட்டார் ட்ரம்ப். சிரியாவின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளை படையெடுப்பு மூலம் துருக்கியுடன் இணைக்க துருக்கி அதிபர் எர்டோகன் ஆசைப்படலாம். ஆனால் அது அத்தனை எளிதான காரியமல்ல. சில ஐரோப்பிய நாடு கள் ஏற்கெனவே துருக்கி மீது ராணுவ ரீதியான தடைகளை விதித்துள்ளன. இதனால் தொடர்ந்து ராணுவ நடவடிக்கையில் துருக்கி ஈடுபட முடியாது. ஐரோப்பிய நாடுகளை பழி வாங்கும் நோக்கில், துருக்கி மக்கள் அங்கிருந்து வெளியேறி ஐரோப்பிய நாடுகளுக்கு பெருமளவில் தஞ்சம் தேடி ஓடும்படி செய்ய எர்டோகன் நினைத்தால், அதன் விளைவுகள் இன்னும் மோசமாக இருக்கும்.

**அமெரிக்காவுக்குப் பின்னடைவு**

ஐ.எஸ் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் மற்றும் சிரியாவில் இருந்து ட்ரம்ப் படைகளை விலக்கிக் கொண்டதற்கான உண்மையான காரணம் இதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். அவரின் இந்த முடிவால் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் மிகப் பெரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. தீவிரவாதம் மட்டுமல்லாது பல வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தும் ட்ரம்ப்பின் முடிவு குறித்து அமெரிக்க நிர்வாகத்தில் உள்ள பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர். முக்கியமாக, குர்து இனத்தவரை கைவிட்டதும் அவர்களை துருக்கியின் தாக்குதலுக்கு இலக்காக மாற்றியதும் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையின் நம்பகத்தன்மை குறித்து பல விமர்சனங்களை எழுப்பியுள்ளது. இப்படியெல்லாம் நம்பிக்கை துரோகம் செய்தால் எந்த அளவுக்கு அமெரிக்காவை நம்பலாம் என அமெரிக்காவின் தோழமை நாடுகளும் புதிதாக கூட்டணி சேர விரும்பும் நாடுகளும் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

*நன்றி : இந்து தமிழ் திசை*

## ஆசிரியருக்கான கடிதம்

# பட்டாசுகளால் படும் அவஸ்தையை உணர்வீராக!

பண்டிகை என்றாலே பட்டாசுச் சத்தங்கள் என்ற எண்ணம் இன்னமும் முடிந்தபாடாக இல்லை. இவை எப்போது முடிவுக்கு வரும் என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறது மனது. இந்தப் பட்டாசுகளால் ஏற்படும் அவஸ்தையை அதன் அவலத்தை அவற்றைக் கொழுத்துபவர்கள் கணக்கில் எடுப்பதில்லை போலும். மனித சமூகம் மட்டுமல்ல, மிருகங்கள் படும் துன்பம் சொல்லி மாளாதது. அதிலும் குறிப்பாக நாய்களின்பாடோ பெரும்பாடுதான்.

பட்டாசுகளின் சத்தத்தால் எத்தனையோ நாய்கள் தெருத்தெருவாக அலைந்து திரிகின்றன. சிலர் நாய்களை இலக்குவைத்தும் பட்டாசுகளைக் கொழுத்துகின்றனர். சிவனே என்று ஓர் ஓரத்தில் அவை உறங்கிக் கிடக்க பட்டாசுகளை வீசி அவற்றை வீதிக்கு இழுத்துவிட்டு, பின்னர் அவற்றால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று கொடிபிடிப்பது எந்த வகையில் நியாயம்.

இவை ஒருபுறம் இருக்க பட்டாசுகளால் சூழலுக்கு ஏற்படும் தீங்கும் அளப்பெரியது. காற்றுமாசு உள்ளிட்ட ஏகப்பட்ட பிரச்சினைகளை இந்தப் பட்டாசுகள் ஏற்படுத்திவிட்டுவிடுகின்றன. இந்தியத் தலைநகர் டெல்லியில் பட்டாசுகள் வெடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு சூழலை மாசுபடுத்துகிறது அது. எனவே எமது ஆறறிவு ஜாம்பவான்கள் இந்த விடயத்தைக் கருத்தில் எடுத்து பொறுப்புணர்ந்து செயற்படுதல் வேண்டும்.

ஆர்.லயனல்,ஆனைக்கோட்டை.

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

## நுணாவில் நூலகத்தில் பயிற்சிநெறி

சாவகச்சேரி, ஒக்.28
சாவகச்சேரி நகர சபையின் நுணாவில் பொது நூலகத்தால் 'நூல்பாதுகாப்பும்வீட்டுநூலகபராபரிப்பும்' என்னும் பயிற்சிநெறிஎதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதி புதன்கிழமைஇருகட்டங்களாக நடத்தப்படவுள்ளது.
காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும், பிற்பகல் 2 மணிதொடக்கம்மாலை 5மணிவரையும்பயிற்சி வகுப்பை தகமைசார் வளவாளர்களால் நடத்தவுள்ளனர். பொதுமக்கள், வாசகர்கள், மாணவர்கள், பாடசாலைநூலகர்கள் ஆகியோருக்கு இந்தப் பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது.
பயிற்சி வகுப்பில் பங்குபற்ற விரும்புபவர்கள் நவம்பர் ஐந்தாம் திகதிக்கு முன்னர் நூலகத்தில்பதிவுசெய்யுமாறு நூலகர் கி. கிருஷ்ணவதனி அறிவித்துள்ளார். (9)

## திருப்புகழ் இசை அர்ப்பணம்

கொடிகாமம், ஒக்.28
கோண்டாவில் கிழக்கு சிறி ஞானப்பழனி முருகன் மீது தவ. தஜேந்திரனால் புதிதாக இயற்றப்பட்டு, மதிசங்கரால் பொழிப்புரை செய்யப்பட்ட திருப்புகழ் பாக்கள் அர்ப்பணம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆலயத்தில் நடைபெறவுள்ளது.
வசந்த மண்டபத்தில் எழுந்தருளும் முத்துக்குமார சுவாமி முன்னிலையில் கலாவித்தகர் அமிர்தசிந்துஜன் மற்றும்சக கலைஞர்களால் திருப்புகழ்பாக்கள் இசையோடு அர்ப்பணம் செய்யப்படும். (க-159)



வலி. தென். மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஜோன் ஜிப்றிக்கோவின் வேண்டுகோளுக்கிணங்க, யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் ஊரெழுச்சி திட்டத்தின் கீழான நிதி ஒதுக்கீட்டில், பண்டத்தரிப்பு 4 ஆம் வட்டாரத்திலுள்ள வணபிதா ஜெலான் அடிகளார் வீதி சீரமைப்புச் செய்யப்பட்டு பொதுமக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. (க-104)

# வல்லிபுரம் தீர்த்தக் கடற்கரையோரம் 15 ஆயிரம் பனம் விதைகள் நடுகை

*யாழ்ப்பாணம், 28*
வல்லிபுரம் தீர்த்தக் கடற்கரையோரப் பகுதியில் 15 ஆயிரம் பனம் விதைகள்நடுகை செய்யப்பட்டுள்ளன. பருத்தித்துறைப்பிரதேசசெயலகத்தின் உதவியுடன், இந்தப் பனம் விதைகள் கடந்த வாரம் நடுகை செய்யப்பட்டன என்று பனை அபிவிருத்தி சபை தெரிவித்தது.

பனை அபிவிருத்தி சபையால் குடாநாட்டில் பனம் விதைகள் நடுகை செய்யும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. சகல பிரதேசசெயலகங்களின் உதவியுடன் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுவருகின்றன.
பனம் விதைகள் யாவற்றையும் இந்த மாத இறுதிக்குள் நடுகை செய்து முடித்து விட பனை அபிவிருத்தி சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
பொது இடங்கள், விளையாட்டு மைதானங்கள், ஆலயச்சுற்றாடல்கள் போன்றவற்றில் பனம்விதைகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன.
சமுர்த்திப் பயனாளிகள், கமக்கார அமைப்பினர், பொது அமைப்பு பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் போன்றோரின்பங்களிப்புடன்சகல பிரதேச செயலகங்களும் பனம் விதைகளை நடுகை செய்து வருகின்றன.
வல்லிபுரம் தீர்த்தக் கடற்கரையோரத்தில்கடந்தவாரம் மட்டும்15 ஆயிரம்பனம்விதைகள்நடுகைசெய்யப்பட்டுள்ளன.
பனம் விதைகள் நடப்பட்ட முழுமையானதரவுகள்யாவும் இம்மாத இறுதியில்வெளியிடப்படும்என்றுபனை அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது. (க-17)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.28
அமல மரி தியாகி சபையைச் சேர்ந்த அருட்பணி எஸ். ஜெயந்தன்பச்சசேக் அடிகளாரின் ஆக்கத்தில் வெளிவரும் நூல் வெளியீட்டுவிழா, யாழ்ப்பாணம் முதன்மை வீதியிலுள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூதுக் கலையக அரங்கில் இன்று திங்கட்கிழமைமாலை4மணிக்கு இடம்பெறும்.
'நறுக்கென்று மூன்று விரல் கேள்விகள்' என்ற சமூக சுயவிமரிசனப் பத்தித் தொகுப்புக் கொண்ட நூலின்வெளியீட்டுவிழா வவுனியா கல்வியற் கல்லூரிஓய்வுநிலைபீடாதிபதி க. பேணாா்ட் தலைமையில்நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக அருட்பணி எஸ்.ஜெ. இம்மானுவேல் அடிகளார், சிறப்பு விருந்தினர்களாக அருட்திரு ம. செபஸ்தியான், யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரிப்பீடாதிபதி சி. பரமானந்தன், யாழ். மூத்த விரிவுரையாளர் க. ஸ்ரீகணேசன், ஓய்வுநிலை அஞ்சல் ஊழியர் கிறிஸ்ரி றெய்வல், சட்டத்தரணி ஜொனி சுவின்ரன், யாழ் கல்வி வலயம் ஆசிரிய ஆலோசகர் ஜோண்சன்ராஜகுமார் ஆகியோர் கலந்துகொள்வர். (க-60)

## தென்மராட்சியில் டெங்கு அபாயம் விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கை

சாவகச்சேரி, ஒக்.28
தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளமையால், பொதுமக்கள் விழிப்புடன் அவதானமாகச் செயற்படுமாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.
தென்மராட்சிப் பிரதேசத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், காணிகள் மற்றும் குடியிருப்புக்களில் காணப்படும் நீர் ஏந்து பொருள்களை அப்புறப்படுத்தி டெங்குநுளம்புஉற்பத்தியாகாத வகையில் துப்புரவாக வைத்திருக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த வருடம் ஜனவரி தொடக்கம் கட்டுப்பாட்டிலிருந்தடெங்குத்தொற்று கடந்த மாதம் 22 ஆக அதிகரித்தது. ஒக்ரோபர் மாதத்தில் 26 ஆம் திகதி வரை 44 பேர் டெங்குத் தொற்றால்பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுள்ளனர்.
ஒக்ரோபர் மாதத்தில் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே அதிகம் என்பதால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
சுகாதார டெங்குக் கட்டுப்பாட்டு அலகினர் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை அதி அபாய டெங்கு பிரதேசமாக அறிவித்துள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)



## தரம் - 5 புலமைப் பரிசில் மாணவர்கள் மதிப்பளிப்பு

கொடிகாமம், ஒக்.28
கொடிகாமம்திருநாவுக்கரசுஆரம்பபாடசாலையில்தரம் 5 புலமைப்பரிசில்பரீட்சையில்சித்தியடைந்தமாணவர்களுக்கு மதிப்பளிக்கப்பட்டது.
பாடசாலையின்முதன்மைமண்டபத்தில்அதிபர்திருமதி பு. மங்களேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் நிகழ்வு நடைபெற்றது.
நிகழ்வில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற 16 மாணவர்களும், 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்றுசித்தியடைந்த 37 மாணவர்களும்மதிப்பளிக்கப்பட்டனர். வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற 16 மாணவர்களுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி சு. சபேசன் ஈருருளிகளை வழங்கிவைத்தார்.
ஹற்றன் நஷனல்வங்கி, மக்கள்வங்கி, தேசியசேமிப்புவங்கிஎன்பனபுத்தகப்பைகள்மற்றும்உண்டியல்களை மாணவர்களுக்குஅன்பளிப்புசெய்தன. நடுவகப்பணியகம், மாங்குளம்மக்கள்நலன்காப்பகத்தினர்வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கு பண உதவி வழங்கினர். (க-159)

# 5 ஆயிரம் பனம் விதைகளை நடுகை செய்வதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.28
கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஐயாயிரம் பனம் விதைகளை நடுகை செய்யவுள்ளது.
இந்த பனம் விதைகள் இந்த வாரம் நடுகைசெய்யப்படும்என்றுசங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.
சங்கத்தின்அங்கத்தவர்களின்உதவியுடன் இந்தப் பனம் விதைகள் நடுகைசெய்யப்படும். பொது இடங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களில் பனம் விதைகளை நடுகை செய்ய சங்கம் தீர்மானித்துள்ளது. அதேவேளை கடந்த வருடம் சங்கம் ஐயாயிரம் பனம் விதைகளை நடுகை செய்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

## தரவட்டம் நிகழ்வு பிற்போடப்பட்டது

தென்மராட்சி, ஒக். 28
தீபாவளியை முன்னிட்டு தமிழ் பாடசாலைகளுக்கு திங்கட்கிழமை கல்வி அமைச்சால் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.
அதனால் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 4 வகுப்பு ஆசிரியர்களுக்குச் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் வலயத்தால் இன்று நடாத்தப்படவிருந்த தரவட்டம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்று வலயக் கல்வி பணிப்பாளர் த. கிருபாகரன் அறிவித்துள்ளார். (க-9)

## பரிசளிப்பு விழாவும் நுழைவாயில் திறப்பும்

கொடிகாமம், ஒக். 28
கெற்பேலி அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், நுழைவாயில் முகப்பு திறப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.
அதிபர் க. ஞானராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சிவத்திரை சிவநாதன், சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி. சிவ தாசன், மதிப்பு விருந்தினராக ஓய்வு நிலை ஆசிரியர்களான க. ஆறுமுகம், அன்னித்தா ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

# மாற்றுக் காணி பெறுவதில் படையினர் குத்துக்கரணமடிப்பு

### முன்னர் சம்மதித்துவிட்டு தற்போது மறுக்கின்றனர்


யாழ்ப்பாணம், ஒக். 28

**யா**ழ்ப்பாணம் பலாலி வீதிக்கு கிழக்குப் பகுதியில் படையினர் வசமுள்ள 719 ஏக்கர் நிலப்பரப்பில் நிலைகொண்டுள்ள படையினருக்கு, வேறு இடத்தில் நிலம் வழங்கும் யோசனையைப் படைத் தரப்பினர் முன்னர் ஏற்றிருந்த நிலையில், தற்போது இணங்க மறுப்புத் தெரிவிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினர் வசமுள்ள நிலவிடுப்புத் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் கடந்த மாதம் 14ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது படையினருக்கு மாற்று நிலம் வழங்கும் தீர்மானம் எட்டப்பட்டிருந்தது.
யாழ்ப்பாணத்தில் படையினர் வசமுள்ள நிலங்களின் உரிமையாளர்களைப் பதிவுசெய்யுமாறு விடுத்த அறிவித்தலுக்கமைய யாழ்ப்பாணக் குடாநாட்டில் நில உரிமை கோரி 2ஆயிரத்து 913 விண்ணப்பங்கள் ஆளுநருக்குக் கிடைத்திருந்தன. அதில் ஆயிரத்து 800 குடும்பங்கள் பலாலி வீதிக்கு கிழக்கேயுள்ள நிலத்தைக் கோரி நின்றனர். இதில் 720 ஏக்கர் நிலம் உள்ளது. அவற்றில் இயன்றளவு நிலத்தை விடுவித்தே ஆகவேண்டும். இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன என்று அன்றையதினம் கட்டளைத் தளபதியிடம் ஆளுநர் கேட்டிருந்தார்.
பலாலி வீதிக்கு மேற்கே உள்ள வானூர்திப் படையினரின் முகாமின் கிழக்குப் பகுதியே இராணுவ வசமுள்ளது. தேசிய பாதுகாப்பும் முக்கியம். எஞ்சிய நில விடுவிப்புக் கடன் நிதியும் கிடைக்கவில்லை. கிடைத்தால் சில இடம் விடுவிக்க முடியும். ஆனாலும் அதிகமான நிலம் விடுவிக்க முடியாது என்று கட்டளைத் தளபதி அன்று தெரிவித்திருந்தார்.
பலாலி வீதிக்கு கிழக்கில் உள்ள நிலத்தை முழுமையாக விட்டே ஆக வேண்டும். அல்லது அந்தப் பகுதியில் புதிய முகாம் அமைக்க நிதி கோரும் படையினர் புதிதாக அமைக்கவுள்ள கட்டடங்களை அந்தப் பகுதியல் அமைக்காது வேறு பகுதியிலுள்ள அரச காணியில் அமைத்துக் கொண்டு இந்த நிலங்களை உரியவர்களிடம் விடுவிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராசாவிடம் தெரிவித்திருந்த நிலையில், ஆளுநருக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.
இறுதியில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒதுக்குப் புறங்களில் அரச காணி இருப்பின் அந்த இடத்தில் முகாம் அமைக்க ஆராய்வதாக இணக்கம் ஏற்பட்டது.
படையினர் தோட்டம் செய்ய நிலத்தைப் பிடித்து வைத்திருக்கின்றனர். ஆனால் எமது மக்கள் 2 ஆயிரம் குடும்பங்கள் வாழ இடமின்றியுள்ளனர். எனவே, இந்த விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் சுட்டிக்காட்டியிருந்தார். போரால் இடம்பெயர்ந்த மக்கள் ஏதிலிகளாய் வாழும் நிலையில் இன்னும் தீர்வு கிட்டாதமை அரசு என்ற வகையில் மன்னிப்பு கோர வேண்டும் என்று ஆளுநர் தெரிவித்திருந்தார்.
இந்த சந்திப்பின் பிரகாரம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வல்லைவெளி, அல்லது அல்லைப்பிட்டியில் ஒதுக்குப் புறங்களிலுள்ள அரச நிலத்துக்குப் படை முகாமை மாற்றி மக்களின் நிலத்தை மக்களிடம் வழங்கும் தீர்மானம் முன்வைக்கப்பட்டது. அதற்காக அல்லைப்பிட்டிப் பகுதியிலிருந்த அரச நிலத்தை காண்பித்த போதே அந்த இடத்தை படையினர் நிராகரித்தனர்.
எஞ்சிய இடங்களைப் பார்வையிடவும் அவர்கள் கவனம் செலுத்தவில்லை. இதனால் குறித்த முயற்சி இடைநடுவில் கைவிடப்பட்ட நிலையிலுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-105)

## அமைதியாக இடம்பெற்ற தீபாவளிக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ்ப்பாணம் குடாநாட்டில் தீபாவளிப் பண்டிகையை மக்கள் நேற்று அமைதியாகவும் ஆலய வழிபாட்டுடனும் கொண்டாடினனர். புதிய ஆடைகள் அணிந்து ஆலயங்களுக்குச் சென்று மக்கள் அங்கு இடம்பெற்ற சிறப்பு பூசை வழிபாடுளிலும் பங்கேற்றனர். அநேகமான அம்மன் ஆலயங்களில் கௌதரி விரத வழிபாட்டுப் பூசைகள் இடம்பெற்றன. இந்த பூசை களில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட னர்.
அதனைவிட தீபாவளியை முன்னிட்டு சில இடங்களில் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டப்போட்டி மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (க-17)





தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுக் காலை சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. வெளிநாட்டவர்கள் பலரும் நல்லூரின் தீபாவளி வழிபாடுகளில் பங்கேற்றிருந்தனர்.

படங்கள் - ஜ. சிவசாந்தன்

## தீபாவளி வியாபாரம் நேற்றும் களைகட்டியது

யாழ்ப்பாணம், ஒக். 28
தீபாவளிப் பண்டிகையான நேற்றும் யாழ்ப்பாணம் நகரில் வியாபார நடவடிக்கைகள் சூடு பிடித்துக் காணப்பட்டன.
கூடுதலாக நடைபாதை வியாபாரம் நேற்றும் களைகட்டியது.
காலையில் மழை பெய்யாது விட்டுக் கொடுத்ததால் நடைபாதை வியாபாரிகள் நூற்றுக் கணக்கில் வீதியில் படையெடுத்து வியாபார நடவடக்கையில் ஈடுபட்டனர்.
முனிஸ்வரன் வீதி, நூல் நிலைய வீதி போன்ற வீதிகளில் மக்களின் நெரிசல் நேற்றும் அதிகரித்துக் காணப்பட்டன.
தெற்கில் இருந்து அதிகமான நடைபாதை வியாபாரிகள் யாழ்ப்பாண நகருக்குப் படையெடுத்து வந்திருந்தனர். அவர்கள் வியாபார நடவடிக்கையில் நேற்றும் ஈடுபட்டனர். (க-17)

## நுணாவில் நூலகத்தால் போட்டிகள்

சாவகச்சேரி, ஒக். 28
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, வாசகர்களுக்கிடையில் வாசிக்கும் சமூகத்தை உருவாக்க சாவகச்சேரி நகர சபையின் நுணாவில் பொது நூலகத் தால், 'சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்' எனும் தொனிப்பொருளில் கட்டுரை மற்றும் குறுக்கெழுத்து ஆகிய திறந்த போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
நுணாவில் பிரதேசத்தின் பழைமை, கலாசாரம், சுற்றுலா மையங்கள், வரலாறுகள், பிரபலமானவர்கள், எழுத்தாளர்கள் குறிப்பிட்ட துறை சார்ந்தவர்கள் ஆற்றிய பணிகள், நுணாவில் பிரதேசத்தை அண்மித்த கிராமங்களுக்குப் பெயர்கள் உருவாகுவதற்கான காரணங்கள் உள்ளிட்ட ஆக்கங்களைக் கட்டுரையாளர் சமர்ப்பிக்கலாம்.
ஆதரங்களான ஒளிப்படங்கள், புள்ளிவிவ ரங்கள் உசாத்துணை நூல்கள் நூல்களின் தரவுகள் போன்றவற்றையும் இணைத்து 400 சொற்களுக்குக் குறையாமல் அமைத்து, எதிர்வரும் நவம்பர் மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.
குறுக்கெழுத்துப் போட்டியானது சமகால தகவல்களை அடிப்படையாக உள்ளடக்கியதாகஅமைந்திருக்கும் (விளையாட்டு கல்வி, கலை, இலக்கியம், கணினி சாவகச்சேரி நகர சபை அரசியல், சினிமா, இலங்கை, உலகம்)
போட்டிக்கான வினாத்தாளை நூலகத்தில் பெற்று எதிர்வரும் நவம்பர் ஐந்தாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளனர்.
போட்டிகளில் சிறந்த ஆக்கங்களுக்குப் பரிசில்கள் வழங்குவதுடன், நூலக ஆவணங்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப்படும்.
அத்துடன் தேசிய வாசிப்பு மாதச் செயற்றிட்ட அறிக்கையிலும் சேர்த்துக் கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# இன ஒற்றுமையைச் சிதைக்க பல வழிகளிலும் சதி முயற்சி

## அரச தலைவர் வேட்பாளர் சீலரத்ன தேரர் தெரிவிப்பு

வவுனியா,ஒக்.28

இன ஒற்றுமையைச் சிதைப்பதற்கு பல்வேறு வழிகளில் சதிகள் அரங்கேறப்படு'கின்றன. அவற்றுக்கு இடம்கொடுக்காமல் ஒற்றுமையுடன் பயணிக்கவேண்டும் என்று அரசதலைவர் வேட்பாளர் பத்தரமுல்லே சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

வவுனியாவுக்கு நேற்றுப் பயணம் செய்த அவர் சகாயமாதாபுரம் ஜெய துர்க்கை அம்மன் ஆலயத்தில் வழி பாடுகளின் பின்னர் கருத்துத் தெரி விக்கும்போது மேலும் தெரிவித்ததா வது:

நாங்கள் தமிழ் ,சிங்கள முஸ்லிம் கள் என்ற வேறுபாடு இல்லாமல் இலங்கையர் என்ற ஒற்றுமையுடன் வாழவேண்டும். அந்த ஒற்று மையை வலியுறுத்துவதற்காகவே நாம் இங்கு வந்திருக்கின்றோம். இந்த நாடு புனிதமானது. சிறப்பா னது பெருமைக்குரியது. சிங்களவர் கள் இந்து ஆலயத்துக்கு வருவது போல, தமிழர்கள் பௌத்த ஆலயத் துக்கு வந்திருக்கின்றார்கள். அவர் களின் கலாசாரங்களைப் பின்பற் றிக் கொள்கின்றார்கள்.

இந்த ஒற்றுமையைச் சிதைப்பதற்கு பல்வேறு வழிகளில் சதிகள் இடம் பெற்று வருகின்றன. அது அரசியல் சார்ந்தோ அல்லது சமூகத்தின் வேறு சில சார்ந்தோ இருக்கலாம். இவற்றுக்கு இடம் கொடுக்காமல் நாம் ஒற்றுமையாக இருக்கவேண் டும்.

அந்த ஒற்றுமையைக் கலைப்ப தற்கு யாரும் இடமளிக்கக் கூடாது. இந்தத் தேசம் பல்வேறு சர்ச்சைக ளால் பிரிக்கப்பட்டுகொண்டே இருக் கிறது. எனவே அதற்கு உடந்தை யாக இருக்காமல், யாருடைய செயற்பாட்டுக்கும் காது குடுக்காது அனைவரும் சமத்துவமாக இருக்க வேண்டும். என்றார்.

இதேவேளை குறித்த ஆலய நிர்வா கத்தினர் விடுத்த வேண்டுகோளுக் கிணங்க, ஆலயத்துக்கு அருகி லுள்ள வானூர்திப் படைத் தளத்தி லிருந்து ஒரு பகுதி காணியை ஆலயத்தின் தேவைக்காக பெற் றுத்தருவதாகவும் அவர் உறுதி மொழி அளித்தார் என்று தெரிவிக் கப்பட்டது. (த-110)

---

## கந்தசஷ்டி உற்சவம்

…ாணம்,ஒக்.28

…ார் சிறி பால கதி காம ஆலயத்தில் கந்த சஷ்டி உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகளுடன் ஆரம் பமாகும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை சூரசம் ஹாரம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மறுநாள் 108 சங்காபி சேகமும், பாறணை பூசையும் நடைபெறும். மாலை 5.30 மணிக்கு பாலமுருகனுக்குப் பட்டாபிசேகம் இடம் பெறும். (க)

★★★★

யாழ்ப்பாணம்,ஒக்.28

கொழும்புத்துறைமேற்கு சிறி பழனி ஆண்டவர் கோவிலின் கந்தசஷ்டி உற்சவம் இன்று திங்கட் கிழமை ஆரம்பமாகி நடைபெறும்.

இன்று பிற்பகல் 4 மணிக்கு சிறப்பு பூசை அபிசேகம்நடைபெற்று, 5மணிக்குவசந்தமண்ட பப் பூசை மற்றும் திரு விழா இடம்பெறும்.

தொர்டர்ந்து அடுத்த மாதம்2ஆம்திகதிசனிக் கிழமைகாலை9மணிக் குச் சிறப்பு பூசை அபிசே கத்துடன், கந்தசஷ்டி நிறைவு திருவிழா இடம் பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கி ழமைகாலை7மணிக்கு சிறப்பு பாரணை விரத பூர்த்திப் பூசை வழிபாடு கள்நடைபெறும். (க-17)

★★★★

கரணவாய்,ஒக்.28

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி பூசைவழிபாடு கள்இன்றுதிங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஆறுதினங்கள் இடம்பெ றும். 'தொடர்ந்து 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு சூர சங்கார நிகழ்வு இடம்பெ றும். (க-108)

---

## சிறப்புற்ற கருத்துப் பகிர்வு

யாழ்ப்பாணம், ஒக். 28

சிறகுகள் அமையத்தின் யாழ். பயில் களத்தின் ஏற்பாட்டில் 'சமூக நிறுவ னங்களும் ஆவணப்ப டுத்தலும்' என்ற தலைப் பிலான கருத்துப் பகிர்வு உரையாடல் யாழ்ப்பா ணம் தந்தை செல்வா கலையரங்கில் நேற்று முன்தினம் நடைபெற் றது. நிகழ்வின் முதன் மைக் கருத்துப் பகிர்வா ளராக கோபிநாத் தில்லை நாதன் (நூலக நிறுவனம்) கலந்து கொண்டார்.

சமூக நிறுவங்களின் செயற்பாடுகள் மற்றும் சமூகம் சார் ஆவணப்ப டுத்தலில் முக்கியத்து வம் மற்றும் ஆவணப்ப டுத்தல் முறைமைகள் தொடர்பில் நடைபெற்ற நிகழ்வில் சிறகுகள் அமையம், பசுமை சுவ டுகள், நெடுந்தீவு நண் பர்கள் வட்டம், ஔடதம், யாழ் திரிசாரணர்கள், இயற்கைவழி இயக்கம் ஆகிய சமூக அமைப்புக் களின்பிரதிநிதிகள்கலந்து கொண்டனர். (த-222)

---

## அல்லாரை வித்திக்கு புதிய நுழைவாயில்

கொடிகாமம்.ஒக்.28

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியருக்கான மணிவிழா, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவ னுக்கான மதிப்பளிப்பு மற்றும் பாடசாலையின் நுழை வாயில் திறப்பு விழா, பாடசாலையின் பெயர்ப் பலகை திரைநீக்கம் உள்ளிட்ட நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

மணிவிழா நிகழ்வில் ஆசிரியர் மங்கையற்கரசி இராசேந்திரனுக்கு, தென்மராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வாழ்த்து மடலை வாசித்து வழங்கி மதிப்பளித்தார். அவருக்கான சேவாமங்கல பத்திரமும் வழங்கப்பட்டது.

பாடசாலையின் நுழைவாயிலை ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் நாடா வெட்டித் திறந்து வைத்தார். பாடசாலையின் பெயர் பலகையை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி பெற்ற மாணவன் ந.கோபிநாத் (153 புள்ளிகள் ) பதக்கம் அணிவித்து பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.

நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக விஞ்ஞான பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. நிருபராணி, தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன், சேவைக்கால தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார், அலுவலர்கள் கலந்து கொண்டனர். (க-159)

---

## சட்டவிரோதமாக மாடு வெட்டி தலையுடன் சென்றாரென தனன்களப்பில் ஒருவர் கைது

சாவகச்சேரி, ஒக். 28

சாவகச்சேரி, தனன்களப்பு வீதியில் மயானத்தை நோக் கிச் சென்ற ஈருருளியில் குருதி தோய்ந்த உரப்பை கட்டிச் செல்வதை அவதானித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஈருருளியை மறித்து சோதனையிட்டபோது அதனுள் மாட்டின் கறுப்பு நிலத்திலானதலை இருப்பதைக் கண்டு அதனைப் பறிமுதல் செய்தார்.

இந்தச் சம்பவம் தீபாவளி தினமான நேற்று இடம்பெற் றது.

சாவகச்சேரி நகரசபையின் கொல்களத்தில் அனுமதி பெறப்பட்ட கால்நடைகள் வெட்டப்படுவதைக் கண்கா ணிக்க வருகை தந்திருந்த பொதுச் சுகாதாரப் பரிசோத கர் அனுமதி பெறாது வெட்டிய மாட்டின் தலையை அவதானித்தார்.

தீபாவளி தினமான நேற்று மீசாலை மேற்கு கொட்டாம் பிட்டிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி வெட்டப்பட்ட மாட்டின் தலையை கூலியாகத் தந்தார்கள் என்று அத னைக் கொண்டு வந்தவர் தெரிவித்தார் என்று விசார ணையில் கூறியுள்ளார். பின்னர் அவர் விடுவிக்கப் பட்டார். அவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொது சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் தெரிவித்தார். (த-9)

---

## தனிமையில் வாழ்ந்தவர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு,ஒக்.28

தனிமையில் வசித்து வந்த நபர் சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் மேற்கைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே அங்கு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது பிள்ளைகள் வெளிநாட்டிலும், வெளி மாவட்டங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். வீட்டுக்குள் அழுகிய நிலையில் இருந்த சட லத்தைப் பொலிஸார் நேற்று மீட்டனர். (க-ரி3)

---

## ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைக்கு 382 பேர் இணைக்கப்பட்டுள்ளனர்

அச்சுவேலி, ஒக். 28

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசா லைக்கு இந்த வருட (2019-2020) கல்வியாண்டுக்கு 382 பயிற்சி ஆசிரி யர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கலாசாலை அதிபர் வீ.கருணைலிங்கம் தெரிவித்தார்.

பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பாட நெறிகளும் பயிற்சி ஆசிரியர்களின் எண்ணிக்கை விவரம்:

ஆரம்பக் கல்விப் பாடநெறிக்கு- 259 பேர், ஆங்கிலப் பாடநெறிக்கு - 24 பேர், தகவல் தொழில்நுட்பப் பாடநெறிக்கு- 7பேர், தமிழ் மொழி பாடநெறிக்கு- 25 பேர், உடற்கல்வி பாடநெறிக்கு- 17 பேர், வர்த்தக பாடநெறிக்கு - 7 பேர், சிறப்புக் கல்வி பாடநெறிக்கு- 3 பேர், மனைப் பொருளியல் பாடநெறிக்கு- 6 பேர், சங்கீத பாடநெறிக்கு- 11 பேர், கணித பாடநெறிக்கு- 11 பேர்.

குறித்த 11 பயிற்சிநெறிகளுக்கும் 38 பயிற்சி ஆசிரியர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளனர். பயிற்சி ஆசிரியர்கள் இரண்டு வருடங்கள் ஆசிரியர் பயிற் சியை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (த-11)





# பாம்பு கடித்து சிறுவன் இறக்க வீடு வழங்காதமையே காரணம்

## பாவற்குளம் கிராமமக்கள் குற்றச்சாட்டு
## இடம்மாறினால் வழங்கலாம் என்கிறார் செயலர்

வவுனியா, ஒக். 28

வவுனியா பாவற்குளம் பகுதியில் பாம்பு கடித்து 5 வயது சிறுவன் இறந்தமைக்குக் காரணம், அந்தக் குடும்பம் வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்படாமையும், அதன்மூலமாக வீடு பாதுகாப்பானதாக இல்லாதிருந்ததுமே என்று கிராமமக்கள் தெரிவிக்கின்றனர்.



பாவற்குளம் படிவம் ஒன்று என்ற கிராமத்தில் எஸ்.சுஜன்(வயது 5) பாம்பு கடித்து கடந்த 20ஆம் திகதி இறந்துவிட்டான். குறித்த கிரா மத்தில் கோழிக்கூடு அளவிலான தகரக் கொட்டிலில் இருக்கும் அந்தக் குடும்பம்வசித்துவருகின்றது. கூலித் தொழிலாளி சுரேனுக்கு மூன்று பிள்ளைகள். அதில் மூத்த பிள்ளையே சுஜன். நித்திரையில் இருக்கும்போது பாம்பு கடித்துள்ளது. பின்னர் அவன் இறந்துவிட்டான்.

பாவற்குளம் சனசமூக நிலையத் தலைவர் அ.அலக்ஸ் தெரிவித்ததாவது:

கடந்த மூன்று வருடங்களாக அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் எமது கிராமத்தின் நிலை தொடர்பாகத் தெளிவுபடுத்தியுள்ளோம். இருந்தபோதும் வீட்டுத்திட்டம் வழங்குவதில் அரசு அசமந்தமாகச் செயற்பட்டமையே சிறுவன் உயிரிழக்கக் காரணம். இதுபோன்ற 10 குடும்பங்கள் எமது கிராமத்தில் கொட்டகைகளில் வசித்து வருகின்றன. அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

செட்டிக்குளம் பிரதேச செயலர் க.சிவகரன் தெரிவித்ததாவது:

குறித்த துயரச் சம்பவம் நடந்த குடும்பத்தினர் தண்ணீர் வழிந்தோடும் பகுதியிலேயே வசித்துவருகின்றனர். அதன் காரணமாகவே அவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. அந்த இடத்தைவிட்டு வேறு ஒரு இடத்துக்குச் செல்லும் பட்சத்தில் வீட்டுத்திட்டம் வழங்கப்படும் என்று தெரிவித்தார். (த)

# சோலை வரித் தொகையை ஏற்கமுடியாதென்று எதிர்ப்பு

## மன்னாரில் கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டது

மன்னார், ஒக். 28

**யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களுடன் ஒப்பிட்டு மன்னாரில் சோலைவரி கணிப்பிடப்பட்டிருப்பதை** ஏற்கமுடியாது என்றுகூறி மன்னார் வர்த்தகர்கள், பொது அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இதனாலும், மக்கள் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்ளாததாலும் சோலைவரி அறவீடு தொடர்பான கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

மன்னார் நகர சபைக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் கூட்டம் நடைபெற்றது.

சோலைவரி அறவீடு தொடர்பான சிக்கலுக்குத் தீர்வு பெறும் நோக்கில், கூட்டம் ஏற்பாடு செய்யுமாறு மன்னார் வர்த்தகர்களும் பொது அமைப்புகளும் மன்னார் குடிமக்கள் குழுவினரைக் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவில்லை என்றும் அதனால் தீர்மானம் எதுவுமின்றியே கூட்டம் நிறைவுற்றது என்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். வெறுமனே நகரசபையின் வருமான வரிப் பரிசோதகருடன் மாத்திரம் தங்களுடைய பிரச்சினைகளைக் கலந்துரையாடிப் பயனில்லை. எனவே மக்கள் பிரதிநிதிகள். உட்பட அனைவரும் பங்கேற்கும் வகையிலான கூட்டத்தை நடத்துமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டு கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

"எவ்வளவு பெறுமதியான வீடு, வாகனங்கள் இருந்தாலும் அவ்வளவும் கடனில்தான் உள்ளன. தொழில் வாய்ப்புகள் இல்லை, வங்கிகளில் எடுத்த கடனைக் கட்டுவதா? அல்லது வாகனங்களுக்கான லீசிங்கைக் கட்டுவதா? ஒரு வங்கியில் கடன் எடுத்து அடுத்த வங்கிக்கடன் கட்டுவதும் சங்கங்களில் கடன் எடுத்து வாகன லீசிங் கட்டுவதும் என்று கடனில்தான் மக்களின் முழு வாழ்வும் மூழ்கிப்போகிறது. சோலைவரி அறவிடுவதை நடைமுறைப்படுத்தி மக்களின் தலையில் சுமையைச் சுமக்கச் சொல்வது நியாயமில்லை. மன்னார் மாவட்டத்தில் அறவிடப்படும் சோலைவரிகளில் குழறுபடிகள் உள்ளன. சோலைவரி தவறல்ல. ஆனால், மாவட்டத்தின் தன்மைக்கும் மக்களின் வருமானத்துக்கும் ஏற்ற வகையில் இருக்க வேண்டும்" என்றும் கூட்டத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இவற்றை உரிய தரப்புக்குத் தெரியப்படுத்தி அடுத்த கூட்டம் விரைவில் அறிவிக்கப்படும் என்று குடிமக்கள் குழுவினர் தெரிவித்தனர். (த-213)

# தீபாவளியை முன்னிட்டு குடும்பங்களுக்கு உதவி

வவுனியா,ஒக்.28

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட70குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம்வழங்கப்பட்டன.

தமிழ்விருட்சம்அமைப்பின் வேண்டுகோளுக்கு இகணங்கலண்டன்வாழ்சட்டத்தரணி இ.இரட்னசிங்கம் குடும்பத்தின்நிதிப்பங்களிப்பில் பொதிகள் வழங்கப்பட்டன.

வவுனியா செட்டிக்குளம் , புளியங்குளம்,கனகராயன்குளம்,நெடுங்கேனி,தாலிக்குளம்,சிதம்பரபுரம்போன்ற பல்வேறு பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த பெண் தலைமைத்துவம் மற்றும் மாவீரர்,முன்னாள்போராளி, கணவன்காணாமல்போன மற்றும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 70 குடும்பங்களுக்கு அத்தியாவசிய 10 பொருள்களடங்கிய உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன.

தமிழ்விருட்சம்அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமார் , செயலாளர் மாணிக்கம் ஜெகன்,உறுப்பினர்களான இராமச்சந்திரன் , விக்னா , மாதவன் ஆகியோர் பொதிகளைப் பயனாளிகளுக்கு வழங்கிவைத்தனர். (க)



தீபாவளி சிறப்பு பூசையும், கௌரி காப்பு பூசையும் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நேற்று சிறப்பாக இடம்பெற்றன. ஆலய முதன்மைக்குருக்கள் கீர்த்தி ஸ்ரீ வாசன் குருக்கள் தலைமையில் வழிபாடுகள் இடம்பெற்றன. (க)



# வெள்ள அந்தரிப்பிலும் மன்னாரில் தீபாவளி

மன்னார்,ஒக்.28

மழையால் ஏற்பட்டுள்ள வெள்ள அந்தரிப்புக்கு மத்தியிலும் மன்னாரில் நேற்று தீபாவளிக் கொண்டாட்டம் இடம்பெற்றது. மாவட்டத்தில் அனைத்து கோவில்களிலும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு விபாடுகள் இடம்பெற்றன.

அதே நேரம் கேதார கௌரி விரதத்தில் 21நாள்கள் ஈடு பட்ட அனைவரும் நேற்று காப்புக் கட்டி தங்களுடைய வழிபாடுகளை நிறைவேற்றினர். (க-56)

# தீபாவளித் தினத்தில் அதிரடிப்படை ரோந்து

வவுனியா, ஒக். 28

வவுனியாவில் சிறப்பு அதிரடிப்படையினர் சிறப்பு உந்துருளிகளில் (பீலட் பைக்) ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். வவுனியா நகரம் மற்றும் அதனையண்டிய பகுதிகளில் நேற்றுக் காலைதொடக்கம் சிறப்பு அதிரடிப் படையினர் 6 சிறப்பு உந்துருளிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அவ்வப்போது சில பகுதிகளில் காவல் கடமைகளிலும் ஈடுபட்டுள்ளனர். தீபாவளி தினமான நேற்று அதிரடிப்படையினரின் இத்தகைய செயற்பாட்டால் ஒரு வித அச்ச நிலையை எதிர்கொள்கின்றோம் என்று மக்கள் தெரிவித்தனர். (த-ரி4)



# போராட்டத்தைக் குழப்ப புலனாய்வாளர்கள் சதி

## பொதுமக்கள் ஏமாந்துவிடாதீர்கள் என்று உறவுகளின் முல்லைச் சங்கம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 28

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் கவனவீர்ப்புப் போராட்டம் வலுப்பெற்றுள்ள நிலையில் இராணுவப் புலனாய்வாளர்கள் உட்பட பலர் இணைந்து போராட்டங்களை வலுவிழக்கச் செய்கின்றனர். போராட்டங்களைக் குழப்பும் முயற்சியில் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பொதுமக்கள் இவற்றில் சிக்கிவிட வேண்டாம் என்று வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் முல்லைத்தீவுச் சங்கத்தின் தலைவி ம.ஈஸ்வரி தெரிவித்தார்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் 2017 மார்ச் மாதம் 8ஆம் திகதி தொடக்கம் அவர்கள் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று 965ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களுடைய உறவுகளை வட்டுவாகல் தொடக்கம் ஓமந்தை வரையில் நேரடியாக ராணுவத்திடம் கையளித்தோம். இன்னும் காணாமலாக்கப்பட்டவர்களாகவுள்ளனர்.

வெள்ளை வான்களில் கடத்தப்பட்டனர், வீடு வீடாகச் சென்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர், அவர்கள் பற்றிய எந்தவித தகவலும் இதுவரை வெளியிடப்படவில்லை.

ஓ.எம்.பி. அலுவலகத்துக்கு எதிராகவும் போராட்டங்களை மேற்கொண்டுள்ளோம். இப்போது அந்த அலுவலகம் தேவையில்லை என்கின்ற நிலையில் இருக்கும்போது, கோத்தபாய ராஜபக்ச அரசதலைவர் வேட்பாளராகக் களமிறங்கியுள்ளார். அவர் "காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றி தங்களிடம் கேட்க வேண்டாம், அவர்கள் தங்களிடம் இல்லை. ஆனால் அவர்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணமும் இறப்புச் சான்றிதழும் வழங்கப்படும்" என்று தெரிவித்திருக்கின்றார். காணாமலாக்கப்பட்டோருக்காக நீதியையே அரசிடம் எதிர்பார்த்துள்ளோம். இதற்குரிய தீர்வை அரசு தராத பட்சத்தில், அரசிடம் நாங்கள் தீர்வு கேட்கவில்லை என்ற நிலை வரக்கூடாது என்பதற்காக அரச தலைவரை மூன்று தடவைகள் சந்தித்துள்ளோம். ஆளுநரை ஒரு தடவை சந்தித்தோம்.

**வாக்களிக்கத் தயாரில்லை**

நாங்கள் எவருக்குமே வாக்களிக்கத் தயாராகவில்லை. ஏற்கனவே இருந்த அரசு 100 நாள்களில் தீர்வு தரும் என்று நம்பி வாக்களித்தோம்.

ஆனால் இன்று வரை எங்களுக்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை. எனவே நாங்கள் யாருக்குமே வாக்களிப்பதற்குத் தயாராக இல்லை.

எங்களுடைய போராட்டம் ஆயிரமாவது நாளை எட்டவுள்ள நிலையில் அன்றையதினம் நாங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும் போராட்டம் நடத்தவுள்ளோம். (த-ரி3)



# நல்லிணக்க நிகழ்வு சிலாபத்தில் நடந்தது

மன்னார், ஒக். 28

மதத்தலைவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வு சிலாபம் மறை மாவட்ட வாழ்வுதய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சர்வமதச் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக இது நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் சர்வமதச் செயற்றிட்டத்தின் நோக்கம் தொடர்பாகவும், கடந்த காலங்களில் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மூலம் அடையப்பட்ட விளைவுகள் தொடர்பான கலந்துரையாடலும் நடத்தப்பட்டது. தொடர்ந்து சிலாபத்தில் உள்ள சர்வ மதங்களையும் பிரதிபலிக்கும் வழிபாட்டு இடங்களுக்குச் சென்றிருந்தோம் என்று அவர்கள் கூறுகின்றனர். சிலாபத்தில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் ஒருமித்து வாழும் கிராமம் ஒன்றுக்கும் சென்றிருந்தோம் என்றும் சுமார் 30 பேர் இதில் இணைந்திருந்தனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (த-56)



# செஞ்சோலைக் கிராமத்தில் 42 குடும்பங்களுக்கு உதவி

கிளிநொச்சி, ஒக். 28

கிளிநொச்சி மலையாளபுரம் செஞ்சோலை மாதிரிக் கிராமத்தில் உள்ள 17 குடும்பங்களுக்கு கூரைத் தகடுகளும், 25 குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகளும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்று உள்ள குடும்பங்களுக்கு சுமார் மூன்றரை இலட்சம் பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டன.

நோர்வே புலர்வின் பூபாள்ம் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன், நமச்சிவாய மூதாளர் பேணலகத்தின் ஊடாக உதவிகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-35)

# 'போர்க்காலங்களில் வன்னி விவசாயிகள்'

## ஆங்கில நூல் வெளியீடும் கலந்துரையாடலும் வவுனியாவில்

கலாநிதி ஜெயசீலன் ஞானசீலனின் 'போர்க்காலங்களில் வன்னி விவசாயிகள்' ஆங்கில நூல் வெளியீடும் கலந்துரையாடலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக பம்பைமடு கேட்போர் கூடத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வுக்குழுவின் தலைவர் பேராசிரியர் ச.சிறீசற்குணராஜா ஆகியோரும் மதிப்புறு விருந்தினராக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரனும் கலந்துகொள்வர்.

கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆய்வு மற்றும் அபிவிருத்தி [illegible] மேலதிக பணிப்பாளர், கலாநிதி எஸ்.ஜே.அரசகேசரி நூல் விமர்சன உரையாற்றுவார். கலந்துரையாடலில் பேராசிரியர் சிறீசற்குணராஜா 'போர்க்காலங்களில் வடக்கின் கல்விப் பாதுகாப்பு' என்ற தலைப்பில் உரையாற்றுவார். தொடர்ந்து திறந்த பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை முதுநிலை விரிவுரையாளரும் சமூக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியுமான கலாநிதி எஸ்.என். மொறாயஸ் 'போர்க்காலங்களில் வடக்கின் பொருளாதார பாதுகாப்பு' என்ற தலைப்பில் கருத்துக்களைப் பகிரவுள்ளார். வவுனியா வளாகத்தின் சூழலியல் விஞ்ஞானத்துறையைச் சார்ந்த முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ச.விஜயமோகன் 'போர்க்காலங்களில் வடக்கில் வன விலங்குகளால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இன்னல்கள்' என்பது பற்றிவி[illegible]வுள்[illegible] (த)



# ரூ.50 இலட்சம் பெறுமதியான சட்டவிரோத வலைகள் எரிப்பு

வவுனியா, ஒக். 28

வவுனியாவில் அமைந்துள்ள நன்னீர் மீன்பிடி குளங்களில் சட்ட விரோதமான முறையில் மீன்பிடிக்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு தொகுதி தங்கூசி வலைகள் நீதிமன்றின் உத்தரவின் பேரில் எரித்தழிக்கப்பட்டன. வவுனியா மாவட்ட நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா விரிவாக்கல் அலுவலகத்தால், இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது, கைப்பற்றப்பட்ட தங்கூசி மற்றும் முக்கூட்டு வலைகளே எரிக்கப்பட்டன.

நீதிமன்ற உத்தரவுடன், வவுனியா மாவட்டச் செயலக வளாகத்தில் வலைகள் நேற்று முன்தினம் எரித்தழிக்கப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள பல்வேறு குளப்பகுதிகளில் இருந்து கைப்பற்றப்பட்ட சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இவ்வாறு எரிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

## வவுனியாவில் முன்னாள் போராளி சாவு

வவுனியா,ஒக். 28

முன்னாள் போராளியான குடும்பத் தலைவர் சாவடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா பறண்நட்டகல் பகுதியில் வசித்துவந்த பேரின்பநாதன் (வயது 35) என்பவரே சாவடைந்தார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை.

நேற்றுமுன்தினம் இரவு உறங்கிய பின்னர் அவரில் அசைவு எதுவும் இருக்கவில்லை. பின்னர் அவர் இறந்துவிட்டார் என்பது தெரியவந்தது.

மறுவாழ்வு பெற்று விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளியான அவர்சிலநோய்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற்றுவந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. ஓமந்தைப் பொலிஸார் விசாரணை நடத்தினர். (த-ரி0)

# முல்லைத்தீவு அபிவிருத்திக்கு ரூ.85 மில்லியன் நிதி ஒதுக்கீடு

### அமைச்சரின் செயலர் தெரிவிக்கிறார்

முல்லைத்தீவு, ஒக். 28

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அபிவிருத்தி வாழ்வாதார நிதியாக 85 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரிசாட் பதியுதினின் செயலர் முகைதீன் தெரிவித்தார்.

கற்சிலைமடுவில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் மிக வறிய நிலையில் இருப்பதனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் மற்றும் கிராம உள்ளக வீதிகள் வாய்க்கால்களைச் சீரமைக்கவும் அமைச்சர் ரிசாட் நிதி ஒதுக்கியுள்ளார் என்றார். நிகழ்வில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர்கள் அமைச்சின் செயலர் மற்றும் கலந்துகொண்டனர். (த-500)



## சைவ உணவகத்துக்கு எதிராக சுகாதார சீர்கேடு என்று வழக்கு

வவுனியா, ஒக். 28

வவுனியாவில் சைவ உணவகம் ஒன்றில் வழங்கப்பட்ட உணவில் இலையான் காணப்பட்டது என்று குற்றஞ்சாட்டி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உணவக நடத்துநருக்கு எதிராக நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மதியம் வழங்கப்பட்ட உணவில் இலையான் இருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுபற்றி உணவு உண்ண வந்திருந்தவர் ஊழியரிடம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். அந்த உணவை மீளப் பெற்றுக்கொண்ட உணவக ஊழியர் இலையானை வெளியேற்றிவிட்டு மீண்டும் அதே உணவை வாடிக்கையாளருக்கு வழங்கியுள்ளார் என்றும் ஊழியரின் செயற்பாட்டை அவதானித்த வாடிக்கையாளர் வவுனியா சுகாதார திணைக்களத்துக்குத் தகவல் வழங்கியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உணவகத்துக்குச் சென்ற பொது சுகாதாரப் பரிசோதகர்கள் உணவகத்தைப் பரிசோதனை செய்தனர். உணவத்தில் சுகாதார சீர்கேடும் நிலவுவதாகத் தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதி விசாரணைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-ரி4)

## வீதியை விட்டு விலகி தடம்புரண்ட ஓட்டோ

வவுனியா,ஒக்.28

வீதியை விட்டு விலகிய முச்சக்கர வண்டி, பாதசாரிகள் நடைபாதையுடன்மோதிதடம்புரண்டது. இந்த விபத்து வவுனியா தொடருந்து நிலைய வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது.

முச்சக்கர வண்டி தொடருந்து நிலைய வீதியூடாக வவுனியா நகர் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது, வாடி வீட்டுக்கு அருகே சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி, பாதசாரிகள் நடை பாதையில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் காயமடைந்தனர். அவர்கள் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-ரி4)



மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலை பங்கின் புனித ஆனாள் ஆலயத்தைச் சேர்ந்த 74 சிறார்களுக்கு முதல் நன்மை என்னும் திருவருட்சாதனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது. (க-60)

## சங்கிலித் திருடர்களை மடக்கிய இளைஞர்கள்

கிளிநொச்சி,ஒக்.28

தங்கசங்கிலி அறுத்த திருடர்களை மடக்கிப் பிடித்த இளைஞர்கள், அவர்களைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி அக்கராயனில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது.

வீதியில் நடந்து சென்ற பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை, உந்துருளியில் பயணித்த இருவர் அறுத்துச் சென்றனர்.

அதனை அவதானித்த அந்தப் பகுதி இளைஞர்கள், அவர்களை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். திருடர்கள் அறுத்த தங்க சங்கிலியுடன் வேகமாக உந்துருளியில் பயணித்த போது இளைஞர்கள் துரத்தி சென்று மடக்கி பிடித்தனர். அவர்களிடம் இருந்து தங்கச் சங்கிலியையும் மீட்டனர்.

மடக்கிப் பிடித்த இருவரையும் பிரதேச இளைஞர்கள் அக்கராயன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## கௌரி காப்பு கட்டும் நிகழ்வு ஒட்டுசுட்டானில் சிறப்புற்றது

முல்லைத்தீவு, ஒக். 28



கௌரி காப்பு விரதத்தின் இறுதிநாள் காப்புக்கட்டும் நிகழ்வு ஒட்டுசுட்டான்தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தில் வெகுசிறப்பாக நேற்று நடைபெற்றது.

மதியம் அபிடேகம் இடம்பெற்று சிறப்புப் பூசைகளுடன் சிவனம்மை சகிதம் வீதிவலம் வந்தமர்ந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தவண்ணம் இருந்தமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

கௌரி விரதம் கடைப்பிடிப்பவர்கள் தமது வேண்டுதல்களை இறைவனிடம் வேண்டி அம்மையின் காப்புக்களைப் பெற்றுக் கைகளில் அணிந்துகொண்டனர். காப்புக்கட்டும் நிகழ்வில் பிறமாவட்ட மக்களும் பெருமளவில் கலந்துகொண்டனர். (த-500)

## மாணவர்களுக்கு மதிப்பளித்தல்

முல்லைத்தீவு,ஒக்.28

கைவேலி கணேச வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப்பளித்தல் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய முதன்மை மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலயமுதல்வர் இ.பேரின்பராணிதலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு கல்விவலயப் பிரதிக் கல்வி பணிப்பாளர் திருமதிதாட்சாயினிவஜீகரன், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சுப்பிரமணியேஸ்வரன், முல்லைத்தீவு கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசகர் திருமதி சி. ஆனந்தராசா, முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சு.சிவாகரன், மதிப்புறு விருந்தினர்களாக கிராம அபிவிருத்தி சங்க தலைவர் வே.லிங்கம், கைவேலி 2 ஆம் வட்டார கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர் செ.மனோகரராசா ஆகியோர் கலந்து கொள்வர். (க-422)

## சிறுவர் முதியோர் தின விழா

முல்லைத்தீவு,ஒக்.28

மாந்தை கிழக்கு பிரதேச செயலக சிறுவர் மற்றும் முதியோர் தின விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர் ரஞ்சனா நவரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சமூக சேவைகள் திணைக்ளப்பணிப்பாளர் வனஜா செல்வரத்தினம், துணுக்காய் கல்வி வலய நிர்வாக அலகின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ.சஞ்ஜீவன், மதிப்புறு விருந்தினர்களாக விநாயகபுரம் அ.த. க. பாடசாலை அதிபர் இ.கலைவாணி, மாந்தை கிழக்குப் பிரதேச முதியோர் சங்கத் தலைவர் அ. தனிநாயகம், தேசிய நிலை பளுதூக்கல் சாதனையாளரும், பாண்டியன்குளம் மகா வித்தியாலய மாணவியுமான செல்வி இ.ஜீவிதா ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

# இனவாதத்தை கையிலெடுத்து வெல்லப் பார்க்கிறார் கோத்தா

## சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.28

உலக வரலாற்றில் ஹிட்லர், அஸாத், முகாபே, கடாபி, சதாம் ஹுசைன் போன்ற சர்வாதிகாரத் தலைவர்கள் பலரும் இனவாதத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தியே ஆட்சியாளர்களானார்கள். அதனைப் போன்றே தற்போது கோத்தபாய ராஜபக்சவும், சஹ்ரான் என்ற பெயரைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்டி இந்த முறை அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முயற்சிக்கின்றார்.



இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுஜீவசேனசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவின் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குறைந்தபட்சம் பிரதேச சபை உறுப்பினராகக் கூட இருக்காத கோத்தபாய ராஜபக்சவால் இந்த நாட்டை நிர்வகிக்க முடியுமா என்ற சந்தேகம் எழுகின்றது. நாட்டை நிர்வகிப்பதற்கான ஆசை இருந்தாலும் கூட, அது அத்தனை இலகுவானதல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

உலகிலேயே சிறந்த இராணுவத் தளபதிகளில் ஒருவராக விளங்கும் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவை சிறையில் அடைத்து, துன்புறுத்தியதை மறந்துவிட முடியாது. அவர் என்ன தவறிழைத்தார் என்பதற்காக அந்தத் தண்டனை வழங்கப்பட்டது என்று யாரேனும் அறிந்திருந்தால் கூறமுடியுமா?. 3 வருடங்களுக்குள் போரை முடிவுக்குக் கொண்டுவருவேன் என்று வாக்குறுதியளித்த சரத்பொன்சேகா அதை நிறைவேற்றினார். மக்கள் மத்தியில் அவருக்கு செல்வாக்கு அதிகரித்துவிடும் என்று கருதியே கோத்தபாய ராஜபக்ச சரத்பொன்சேகாவை சிறையில் அடைத்தார். இத்தகைய ஒருவரை அரச தலைவராக்குவதற்கு மக்கள் மனநிலையில் பிறழ்வு எதுவும் ஏற்படவில்லை.

கோத்தபாய ராஜபக்சவின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. ஆனால் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச அவருக்குரிய கடமையின் பிரகாரம் மக்களுக்கு சேவையாற்றுவதிலேயே குறைகளும், குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன. ஒருவேளை கோத்தபாய ராஜபக்ச அரச தலைவரானால் எனது உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்படலாம். எனினும் அவரை வெற்றி பெறச்செய்யும் தீர்மானத்தை மக்கள் மேற்கொள்ள மாட்டார்கள் என்று நம்புகின்றோம். - என்றார். (எ-31)

# தீபாவளி முற்பணத்தை வழங்க மறுப்பது ஏன்?

## கேள்வி எழுப்புகிறது இ.தொ.கா.

கொழும்பு, ஒக்.28

தீபாவளி முற்பணமாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மேலதிகமாக 5 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தும், தேர்தல்கள் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்திருந்தும் இன்னமும் அந்த கொடுப்பனவு வழங்கப்படாமல் தாமதமாகின்றமைக்கான காரணம் என்ன?

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியிடம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கேள்வியெழுப்பியுள்ளது.

கொழும்பில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான பழனி சக்திவேல் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

தீபாவளி முற்பணமாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மேலதிகமாக வழங்கப்படவிருந்த 5 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எந்த சந்தர்ப்பத்திலும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அந்த மக்களுக்கு உடனடியாக மேலதிக கொடுப்பனவை பெற்றுக் கொடுக்குமாறும்வலியுறுத்துகின்றோம்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 10 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு பெருந்தோட்டக் கம்பனிகள் முன்வந்த போது , மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் பழனி திகாம்பரம் 15 ஆயிரம் ரூபாவைப் பெற்றுத்தருவேன் என்று கூறினார். இதற்கான நடவடிக்கைகள் பெருந்தோட்டத்துறை அமைச்சால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தற்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் , சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பி , மேலதிகமாக வழங்கப்படவிருந்த 5000 ரூபாவை வழங்கவிடாமல் தடுத்திருப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது உண்மைக்கு புறம்பானதாகும். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இவ்வாறுமேலதிககொடுப்பனவை வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவும் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

எமது கட்சி தொழிலாளர்களுக்கு யார் நன்மை செய்தாலும் பேதமின்றி அதனை வரவேற்கும். வறுமையிலிருக்கும் பெருந்தோட்டமக்களுக்கு 5 ஆயிரம் ரூபா உடனடியாக பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையுமாகும்- என்றார். (எ-61)

# மாரப்பன தலைமையில் இலங்கை குழுவினர்

கொழும்பு, ஒக்.28

அணி சேரா இயக்கத்தின் அரச தலைவர்களின் 18ஆவது உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் செல்லும் இலங்கைளின் தூதுக்கு குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் தலைமை தாங்கிச் சென்றுள்ளார்.

அணிசேரா இயக்கத்துக்கான அஸர்பைஜானின் புதிய தலைமையின் கீழ் உச்சி மாநாட்டுக்கான அடிப்படையை உருவாக்குவதற்கான அமைச்சர்கள் மட்ட ஆயத்தக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் அமைச்சர் திலக் மாரப்பனவும் பங்கேற்றியுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

இந்த முறை அணிசேரா இயக்கத்தின் உச்சிமாநாடானது, 'சமகால உலகொன்றின் சவால்களுக்கு ஒருங்கிணைந்த மற்றும் சரியான பதிலை உறுதிசெய்வதற்கான பண்டுங் கோட்பாடுகளை நிலைநாட்டு தல்' என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

இலங்கை 1955 பண்டுங் மாநாட்டின் இணை அனுசரணையாளராகவும், அணிசேரா இயக்கத்தின் ஆரம்ப உறுப்பினராகவும் விளங்கு கின்றது. கடந்த 6 தசாப்த காலத்திற்கும் மேலாக இந்த இயக்கம் தொடர்ச்சியாக முன்னேற்றம் கண்டு வருவதுடன், அதன் உறுப்பினர் தொகை தற்போது 120 ஐ விட அதிகரித்துள்ளது. (எ-31)

# தேர்தல் முடிவை கூறுவதில் அவதானமாகச் செயற்படுக

## தேர்தல்கள் ஆணைக்குழு ஊடகங்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஒக்.28

அரச தலைவர் தேர்தல் முடிவுகள் தொடர்பில் தேர்தல் ஆணையகத்தால் வழங்கப்படும் உத்தியோகபூர்வ முடிவுகளை மட்டும் வெளியிடவேண்டும். நீதி மற்றும் அமைதியான தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க அனைவரும் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு தேர்தல் ஆணைக்குழு ஊடகங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட சிறப்பு அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

அரசதலைவர் தேர்தலின்போது வாக்கு கணக்கெடுப்புகளை மேற்கொள்ளும் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையங்களின் வாக்குப் பதிவுகளும் உரிய தேர்தல் தொகுதிகளுக்கமைய சேகரிக்கப்பட்டு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளால் தேர்தல் ஆணையகத்தில் உருவாக்கப்பட்டுள்ள இறுதி வாக்கு முடிவுகளை பதிவுசெய்யும் மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

இறுதி முடிவுகளை சேகரிக்கும் மத்திய நிலையத்தில் இந்த வாக்குகள் தொடர்பில் உரிய பரிசோதனைகளை மேற்கொண்டு இந்த வாக்கு பதிவுகள் உத்தியோக பூர்வ அறிவிப்புக்காக மீண்டும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும். இதன் பின்னர் சில நிமிடங்கள் கழித்து அந்த முடிவுகள் அனைத்தும் உத்தியோக பூர்வமாக ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

உத்தியோக பூர்வமற்ற முறையில் வெளிவரும் முடிவுகளை ஊடகங்களின் வாயிலாகப் பிரசுரிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பொய்யான முடிவுகளை வழங்குவதால் பொது மக்கள் மத்தியில் வன்முறைகள் மற்றும் முரண்பா டுகள் ஏற்படவும் வாய்ப்புள்ளதனால் தேர்தல் ஆணையக்த்தால் வெளியிடப்படும் தேர்தல் முடிவுகளை தவிர வேறு எந்த முடிவு களையும் வெளியிடாதிருக்க வேண்டும். என்றுள்ளது. (எ-71)



# ஜ.முன்னனி வேட்பாளர் வவுனியாவுக்கு வருகை

வவுனியா,ஒக்.28

ஜனசெத முன்னனியின் அரச தலைவர் வேட்பாளர் பத்திர முல்லை சீலரத்ன ஹிமி வவுனியாவுக்குநேற்று வருகை தந்தார்.

வவுனியா, றம்பைக்குளம் பகுதியில் உள்ள சிறி துர்க்கை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்புப் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டதுடன், ஆலயத்தில் நின்ற மக்களுடனும் கலந்துரையாடினார்.

ஒரே குரலின் கீழ் பாதுகாப்பான நாட்டை உருவாக்க தனக்கு வாக்களிக்குமாறு கோரிய அவர், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் தான் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

குறித்த வழிபாட்டு நிகழ்வில் அவரது ஆதரவாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (க-ரி4)

## ஜனநாயகத்தை பாதுகாக்க மக்கள் முன்வர வேண்டும்!

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

மக்கள் ஆணையைப் பெற்று ஆட்சியமைத்த அரசை, அரசமைப்புக்கு முரணாக மாற்றியபோது ஜனநாயக முறையில் நீதித்துறையின் ஊடாக அதைத் தோற்கடித்தோம். அரசியல் நிலைப்பாடு வேறுபட்டதாக இருந்தாலும் ஜனநாயகத்தையும், நீதித்துறையின் சுயாதீனத்தையும் நாட்டு மக்கள் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சுயாதீன தேர்தல் முறைமையின் ஊடாக மக்களாணையைப் பெற்ற அரசு அரசமைப்புக்கு முரணாக அரசியல் சூழ்ச்சியால் மாற்றியமைக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருந்த போதும் எவ்வித உரிய காரணங்களும் இன்றி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. 52 நாள் இடைக்கால அரசு தொடர்ந்து ஆட்சியில் நிலைக்கவில்லை. நீதித்துறையின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் ஊடாக ஜனநாயகம் மீண்டும் உருவாக்கப்பட்டது.

ஜனநாயகத்தை மீண்டும் உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த வெற்றி ஒரு தனிநபரை சார்ந்ததோ, ஒரு கட்சியை சார்ந்ததோ கிடையாது. முழு நாடுமே வெற்றி கொண்டுள்ளது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஊடாகவே அரசியல் சூழ்ச்சி தோற்கடிக்கப்பட்டு ஜனநாயகம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சுயாதீன நீதித்துறை, சுயாதீன பொலிஸ் மற்றும் சுயாதீன அரச நிறுவனங்கள் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் நிறுவனங்கள் எவ்வித தலையீடும் இன்றி செயற்படும் நிலைமை ஏற்படுத்தப்பட்டது.

எமது நோக்கத்தின் அடிப்படையில் நீதித் துறையின் கட்டமைப்பில் எவரும் தலையிடாத வகையில் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்கள் சட்டத்தின் பிரகாரம் தீர்ப்பு வழங்கும் நிலைமையினை அனைவருக்கும் பொதுவாக ஏற்படுத்தியுள்ளோம். இதனூடாக தலைமை அமைச்சர் நியமனம் நாடாளுமன்றத்துக்கும், தலைமை அமைச்சருக்கும் நாடாளுமன்றத்துக்கு பொறுப்பு கூறும் கடமையுடையவர் என்பது நீதி மன்றத்தின் ஊடாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசியல் நெருக்கடி காலத்தில் ஜனநாயகத்துக்காக செயற்பட்ட சபாநாயகர் கருஜயசூரிய பல்வேறுப்பட்ட அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார். இருப்பினும் அவர் ஜனநாயகத்திற்காக பாடுபட்டார். உறுதியான கொள்கையின் ஊடாக நாடாளுமன்றத்தின் கட்டமைப்பை எவருக்கும் இல்லாதொழிக்க முடியாமல் போனது.

பெற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக வெற்றி மற்றும் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை ஆகியவற்றை தொடர்ந்து பாதுகாப்பது அனைவரது பொறுப்பாகும். கட்சியைப் பாதுகாக்கும் நோக்கில் இதைக் குறிப்பிடவில்லை. நாட்டின் ஜனநாயகத்தையும் தொடர்புடைய தாபனங்களை பாதுகாப்பது அனைவரது பொறுப்பாகும். நாட்டின் அரசியல் நிலைப்பாடு பல்வேறு தரப்பினருக்கிடையில் மாறுபட்டதாகும். ஜனநாயகமும், நீதித் துறையும் அனைவருக்கும் பொதுவானதாக தொடர்ந்து முன்னெடுத்து செல்லப்பட வேண்டும் - என்றுள்ளது. (எ-61)

# இந்த ஆண்டு இறுதிக்குள் 10,000 குற்றப் பத்திரங்கள்

### சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.28

இந்த ஆண்டு இறுதிக்குள் ஊழல், மோசடி உள்ளிட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் 10 ஆயிரம் குற்றப்பத்திரங்களை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட விவகாரம் (ஊழலுக்கு எதிரான) மற்றும் ஊடகம் தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழுவிடம் தெரிவித்தது.

இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் 7 ஆயிரத்து 800 குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் சுட்டிக் காட்டியது. அதேநேரம், தனியார் தொலைக்காட்சி மற்றும் வானொலிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பில் புதிய சட்டவரைபொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அது அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் பொதுஜன ஊடகத்துறை அமைச்சின் அதிகாரிகள், துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் தெரிவித்தனர். ஊழல் மோசடியைத் தடுப்பது தொடர்பான சட்டவரைபை அடுத்த அமர்வில் ஆராய்வதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

சட்ட விவகாரம் (ஊழலக்கு எதிரான) மற்றும் ஊடகம் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர், அரச தலைவர் சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரட்ன தலைமையில் நாடாளுமன்றக் குழு அறையில் கடந்த 23ஆம் திகதி கூடியது. இதன்போதே இந்த விடயங்கள் ஆராயப்பட்டிருந்தன.

வழக்குகளை விசாரணை செய்வதில் நீதிமன்றங்களில் காணப்படும் காலதாமதம் பெரும் பிரச்சினையாக இருப்பதாகவும், இது தொடர்பில் முழுமையாக ஆராயப்பட வேண்டியிருப்பதாகவும் இந்தக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கையை 13 இல் இருந்து 15 வரை அதிகரிப்பது தொடர்பான யோசனையொன்றும் துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் முன்வைக்கப்பட்டது. எதிர்காலத்தில் அதைக் கவனத்தில் எடுப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. சட்ட விவகாரம் (ஊழலுக்கு எதிரான) மற்றும் ஊடகம் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில் இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்தின் அதிகாரிகளை அரச சேவையிலிருந்து வேறுபடுத்தி தனியான சேவையாக ஏற்றுக் கொள்வது தொடர்பான யோசனை பற்றியும் சம்பந்தப்பட்ட தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பான நடவடிக்கைகளை 2020ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தொடங்குமாறு துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்த உத்தேச திட்டம் தெரிவுசெய்யப்பட்ட மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்களில் நடைமுறைப்படுத்தப்படும். துறைசார் மேற்பார்வைக் குழுவின் கூட்டத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவித்தான, இராஜாங்க அமைச்சர் அலி சாஹிர் மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். நீதி அமைச்சு, வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் அதிகாரிகள், நீதி சேவை ஆணைக்குழுவின் அதிகாரிகள், சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (எ-61)

## பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஒக்.28

மட்டக்களப்பு ஏறாவூர் களுவங்கேனி நீரோடையிலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

களுவங்கேனி முதலாம் பிரிவு மாரியம்மன் வீதியைச் சேர்ந்த 56 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயாராகிய மாரிமுத்து ராகினி என்பவரே சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். அவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தனது மகனின் வீட்டிலிருந்து வெளியேறி காணாமல்போயிருந்த நிலையில், இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## வாக்காளர் அட்டைகளை வழங்கும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஒக்.28

அரச தலைவர் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை வழங்கும் பணிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தப் பணிகள் நவம்பர் 9ஆம் திகதிவரை இடம் பெறவுள்ளது என்று உப தபால் அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாக்காளர் அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகளின் சிறப்புத் தினமாக நவம்பர் மாதம் 3ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள 60 இலட்சம் வீடுகளுக்கு வாக்காளர் அட்டைகள் வழங்கப்படவுள்ளன. அந்தத் தினத்தில் அனைத்து வாக்காளர்களும் இது தொடர்பில் கவனம் செலுத்தி வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். நவம்பர் மாதம் 9ஆம் திகதியாகும் போது வாக்காளர் அட்டை கிடைக்காவிட்டால், அவர்கள் அருகாமையில் உள்ள அஞ்சல் அலுவலகத்தில் தங்களது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தியபின்னர் வாக்காளர் அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

அதேவேளை, அரச தலைவர் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பு நடவடிக்கைகள் இடம் பெறவுள்ள நிலையில் அதற்கு 6 இலட்சத்துக்கும் அதிகமானோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் இந்த மாதம் 31ஆம் திகதிக்குள் முன்னெடுக்கப்படவுள்ளன. என்றார். (எ-31)

# மொட்டில் இருந்தே நறுமணம் வீசுமாம்

### டிலான் எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.28

மொட்டில் இருந்து மாத்திரமே நறுமணம் வீசும் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சகல மக்களினதும் பாதுகாப்பை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டுமானால் கோத்தபாய ராஜபக்சவை வெற்றியடைய செய்ய வேண்டியது கட்டாயம். 2 அடி 1 அங்குலம் நீளமான வாக்காளர் பட்டியலில் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்க கூடிய ஒருவரே உள்ளார். அவர் தான் கோத்தபாய.

நான் பசறைக்கு சென்ற போது வாக்கு சீட்டு நீளம் என்பதால் முதியவர்களுக்கு அது குறித்து கற்பிக்க வேண்டும் என கூறினேன். அதற்கு பதிலளித்த பெண் ஒருவர் மொட்டின் வாசனை உணர்ந்து வாக்களிப்பேன் என்று தெரிவித்தார்.

வாக்கு சீட்டில் உள்ள மற்றையர்கள் அனைவரும் துர்நாற்றம் வீசகூடியர்கள். மொட்டில் இருந்து மாத்திரமே நறுமணம் வீசும்-என்றார். (எ)

# நிறுத்தப்பட்ட அபிவிருத்தி மீண்டும் ஆரம்பிக்கப்படும்

## கோத்தபாய தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.28
2015ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்ட அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளையும் எமது ஆட்சியில் மீண்டும் ஆரம்பிப்போம் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

பண்டாரவளையில் நேற்றுமுன்தினம் நடத்திய பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் வேலை செய்துக் காட்டியுள்ளோம். எமக்கான ஒரு நோக்கமுள்ளது. கொழும்பு மட்டுமன்றி, பண்டாரவளை, பதுளை, காலி, கண்டி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் நாம் எமது அபிவிருத்திப் பணிகளை செயற்படுத்தினோம்.

அவற்றை நிறைவு செய்ய எம்மால் முடியாது போனது. 2015ஆம் ஆண்டு தோல்வியடைந்தமையால், மக்களின் எதிர்பார்ப்பை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாது போனது.

எவ்வாறாயினும், நாம் எமது செயற்பாடுகளை அடுத்த வெற்றியின் ஊடாக மீண்டும் ஆரம்பிக்கவே எதிர்ப்பார்க்கிறோம். இதற்காக மக்கள் எம்மீது நம்பிக்கைகொள்ள வேண்டும். இராணுவத்தினரை போன்று சிவில் பாதுகாப்புத் தரப்பினரது சம்பளத்தையும் நாம் உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தொழில்நுட்ப வளர்ச்சிதான் எமது அடுத்தக்கட்ட நடவடிக்கை ஆகும். இதற்காக இளைஞர் யுவதிகளை நாம் ஊக்குவிக்க வேண்டும். இதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த முடியும் என்பதோடு, 3 இலட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புக்களையும் வழங்க முடியும்-என்றார். (ஏ)

# அரசியல்வாதிகளிடமிருந்து காக்கவே தேர்தலில் போட்டி

## மகேஸ் சேனநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.28
அரசியல்வாதிகளிடம் இருந்து இந்நாட்டை மீட்டெடுப்பதன் மூலமாகவே நாட்டு மக்கள் மத்தியில் உண்மையான நல்லிணக்கத்தை நிலைநாட்ட முடியும். இதற்காகவேதான் அரசியல்வாதி அல்லாத நாம் வருகின்ற அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

இவ்வாறு தேசிய மக்கள் இயக்கத்தின் வேட்பாளர் முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.

அவர் நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கடந்த 70 வருடங்ளுக்கும் மேலாக அரசியல்வாதிகள்தான் இந்த நாட்டை ஆட்சி புரிந்து வருகின்றனர். இவர்கள் குறுகிய சுய இலாப அரசியல் நோக்கங்களுக்காக நாட்டு மக்களை காலம் காலமாக பிரித்து வைத்திருக்கின்றனர். இவர்களிடம் இருந்து நாட்டை மீட்டெடுப்பதன் மூலமாகவே உண்மையான நல்லிணக்கத்தை நாட்டு மக்கள் மத்தியில் நிலைநாட்ட முடியும் என்பது எமது அவதானம் ஆகும். அரசியல்வாதி அல்லாத அதியுயர் தொழில் தகைமை உடைய நாம் இதனாலேயே வருகின்ற தேர்தலில் தேசிய மக்கள் இயக்கத்தின் வேட்பாளராக களத்தில் குதித்துள்ளோம்.

நாம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சேவையாற்றுவதற்காகவே இராணுவத்தில் இணைந்தோம். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அடங்கலாக நாட்டின் அனைத்து இடங்களிலும் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் எம்மாலான சேவைகளை இதய சுத்தியுடன் வழங்கி இருக்கின்றோம். குறிப்பாக கடந்த காலப் போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மக்களுக்கு வேண்டிய அவசியமான ஏராளமான மனித நேய வேலை திட்டங்களை நாம் இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தளபதியாக இருந்து இராணுவத்தின் மூலமாக பற்றுறுதியுடன் செய்து கொடுத்து இருக்கின்றோம். நாட்டின் இராணுவ தளபதியாக நாம் பதவியேற்ற பிற்பாடும் எமது வழிகாட்டல், அறிவுறுத்தல் ஆகியவற்றுக்கு அமைய யாழ். மாவட்டத்தில் தொடர்ந்தும் கணிசமான மனித நேய வேலை திட்டங்கள் இராணுவம் மூலமாக முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதை யாவரும் அறிவார்கள்.

தமிழர், முஸ்லிம், சிங்களவர் போன்ற இன பேதங்கள் எங்களுக்கு இடையில் தேவையே இல்லை, எமது நாட்டில் மீண்டும் ஒரு போர் வேண்டவே வேண்டாம், இளையொர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தும் நிலைமை வரவே கூடாது, நாம் எல்லோரும் இலங்கையர்களாக வாழ வேண்டும் என்பதே எமது கனவாகும். எமது மூதாதையர்கள் அவ்விதம் வாழ்ந்து காட்டி இருக்கின்றார்கள். அவ்வாறான பொற்காலம் மீண்டும் பிறக்க வேண்டும் என்றால் அரசியல்வாதிகளின் இரும்பு பிடியில் இருந்து எமது நாடு மீட்கப்பட வேண்டியது அத்தியாவசியம் ஆகும். அதே நேரத்தில் அரசியவாதிகள் தேர்தல் காலத்தில் உங்கள் முன்னிலைக்கு வந்து கூறுகின்ற கருத்துக்களை எல்லாம் பார்க்கின்றபோது சாத்தான்கள் வேதம் ஓதுவது போல் இருக்கின்றது. அரசியவாதிகள் போல் அல்லாது நாம் சொல்வதையே செய்வோம், செய்வதையே சொல்வோம் என்பதையும் இத்தருணத்தில் உங்கள் முன்னிலைக்கு தெரிவிக்கின்றோம்- என்றார். (ஏ)

## கோத்தாவை விவாதத்துக்கு அழைக்கும் சஜித் பிரேமதாச

நேரடி தொலைக்காட்சி விவாதமொன்றில் என்னை எதிர்கொள்ள வேண்டும் என்று நான் கோத்தபாய ராஜபக்சவுக்குச்சவால்விடுக்கின்றேன் என்று புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர்சஜித் பிரேமதாசதனது டுவீற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

விவாதத்தின் ஊடாக நாம் கொண்டிருக்கும் இலக்குகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றை வாக்காளர்கள் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். ஒரு பலம்பொருந்திய வேட்பாளர் என்பவர் தனது பிரதிவாதியுடன் முன்கூட்டியே திட்டமிட்டுதயாரிக்கப்படாத கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கு அஞ்சுபவராக இருக்கக்கூடாது. தனது சிந்தனைகளை உறுதியுடன் நிலை நிறுத்துவதற்கு அஞ்சாத ஒருவரை தலைவராக அடைவதற்கு இலங்கை வாக்காளர்கள் தகுதியானவர்கள். அச்சத்தில்தப்பியோட முனைபவரை விட வும் சவால்களை எதிர்கொள்வதற்கான தைரியத்தைக் கொண்டிருக்கும் ஒருவரை அரச தலைவராக அடையும் தகுதியை அவர்கள் கொண்டிருக்கிறார்கள்-என்றார். (ஏ-71)

# தேர்தல் தொடர்பாக 1,835 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக்.28
அரச தலைவர் தேர்தல் தொடர்பாக இதுவரை ஆயிரத்து 835 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணிவரையான 19 நாள்களுக்குள் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று சுயாதீன தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாவட்டத் தேர்தல் முறைபாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு ஆயிரத்து 249 முறைபாடுகளும் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 586 முறைபாடுகளும் கிடைத்துள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையங்களுக்கும் கிடைக்கப்படும் முறைப்பாடுகளில் அதிகளவிலான முறைப்பாடுகள் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பாகவே பதிவாகியுள்ளன.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியிலிருந்து சனிக்கிழமை பிற்பகல் 4 மணிவரையான 24 மணித்தியாலத்துக்குள் தேர்தல் தொடர்பாக 69 முறைபாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மாவட்டத் தேர்தல் முறைபாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 56 முறைப்பாடுகளும் தேசிய தேர்தல் முறைபாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 13 முறைபாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

66 முறைபாடுகள் தேர்தல் சட்டதிட்டங்களை மீறியவை என்றும், இரு முறைப்பாடுகள் தேர்தல் தொடர்பான ஏனைய குற்றச் செயல்கள் குறித்தும் வன்முறைகள் குறித்து ஒரு முறைப்பாடு பதிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ)

# வெளிநாட்டு மொழிகளை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள்

கொழும்பு, ஒக்.28
அரச பாடசாலைகளில் வெளிநாட்டு மொழிகளைக் கற்பிப்பதற்கு அந்தத் துறையில் பட்டம் பெற்ற ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதனூடாக வெளிநாட்டு மொழியைக் கற்றுக்கொடுக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், வெளிநாட்டு மொழி கல்வி யை கற்றுக்கொள்ளும் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் வாய்ப்பு கிடைக்கும்என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வெளிநாட்டு தொடர்புகள் அவசியமாகின்றன. அந்த வகையில் வெளிநாடுகளுடனான வர்த்தக நடவடிக்கைகளுக்கு மொழி இன்றியமையாதது ஆகும். வெளிநாட்டு மொழி கல்வியின் அவசியத்தை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்துக்கு அனுமதி கிடைத்தமைக்கு அமைய 729 ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான அனுமதியை முகாமைத்துவ சேவகர் திணைக்களம் வழங்கியுள்ளது.

இதுவரையில் வெளிநாட்டு மொழிகளைக் கற்பிக்கும் தேசிய பாடசாலைகளிலும் தேசிய பாடசாலைகளாக்சு உத்தேசிக்கப்பட்டுள்ள பாடசாலைகளிலும் தரம் 10 11 மாணவர்களுக்கும் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்குமே இந்த வெளிநாட்டு மொழி கற்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பாடத்திட்டத்தில் பிரெஞ்சு, ஜேர்மன், ஹிந்தி, ஜப்பானிய, கொரியா மற்றும் அரேபிய மொழிகளை கற்பித்துக் கொடுப்பதற்காகவே ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ-31)

# வவுனியாவில் உறவுகள் நீதிகேட்டுப் போராட்டம்

வவுனியா, ஒக். 28

தீபாவளி தினமான நேற்று வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக 981 நாள்களாகப் போராடிவரும் நிலையில், நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



"பல நாள்களாக நாங்கள் வீதிகளில் போராடிவருகிறோம். எமக்கு நீதி வழங்குவதற்கு யாரும் முன்வராதநிலையில் அரசதலைவர் தேர்தலில் எதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பேரம் பேசும் செயற்பாட்டில் தமிழ்க் கட்சிகள் ஈடுபட்டுள்ளன. அத்துடன் இனத்தை அழித்த மகிந்தவின் மகனுக்கு எமது அரசியல்வாதிகள் ஆதரவளிப்பது கவலை அளிக்கின்றது. 2017 ஆம் ஆண்டு தீர்வு வரும் என்று சம்பந்தன் தெரிவித்த நிலையில் இரு வருடங்கள் கடந்தும் எதுவும் கிடைக்காமல் போலி வாக்குறுதிகளால் ஏமாந்த நிலையில் தமிழர்கள் தெருவில் விடப்பட்டுள்ளனர்." என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர் தெரிவித்ததாவது:

"சிங்கத்திடம் புலிகள் தோற்ற நாட்டில் ஒட்டகங்கள் அடங்கி இருக்க வேண்டும்" என்று அரச பேருந்து ஒன்றில் எழுதப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்ட சித்தார்த்தன், புளொட், டக்ளஸ், கருணா, சம்பந்தன், கூட்டமைப்பு, பிள்ளையான் போன்ற துரோகிகள் நம்மிடம் இல்லை என்றால் தமிழர்கள் எப்போதோ சுதந்திரத்தை அனுபவித்திருப்பார்கள். இவர்களே தமிழர்களின் சுதந்திரத்தைப் பறித்தவர்கள், பலவீனத்தாலும், சுயநலத்தாலும் தமிழர்களை விற்றவர்கள். என்றார்.

அவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க நாட்டின் கொடிகளையும் கையில் ஏந்தியிருந்தனர். (த-110)



தீபாவளி மற்றும் கௌரி விரதத்தை முன்னிட்டு

## வவுனியா ஆலயங்களில் சிறப்புப் பூசை வழிபாடுகள்

வவுனியா, ஒக். 28

கேதாரகௌரி விரதம் மற்றும், தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வவுனியாவில் அமைந்துள்ள இந்து ஆலயங்களில் நேற்று சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயம், சிறிநகர் துர்க்கை அம்மன் ஆலயம், சகாயமாதாபுரம் துர்க்கை அம்மன் ஆலயம், குருமன்காடு காளி கோவில், கந்தசுவாமி ஆலயம் போன்றவற்றில் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்துக்களின் சிறப்பு விரதங்களில் ஒன்றாகிய கேதார கௌரி விரதம் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமாகி 21 நாள்கள் கடைப்பிடிக்கப்பட்டு நேற்று தீபாவளி நாளில் கௌரிகாப்புக் கட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

கௌரிகாப்புக் கட்டுவதற்காக பல நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் ஆலயத்துக்கு வருதை தந்து ஆராதனைகள், பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டனர். (க-110, ரி4)

## இடர் முகாமைத்துவக் குழு யாழ்.மாவட்டத்தில் ஆரம்பம்

மருதங்கேணி, ஒக். 28

யாழ்ப்பாணமாவட்டத்தில் இடர் முகாமைத்துவக் குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் ஆலோசனையில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின்ஏற்பாட்டில்ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம்தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் இன்பம்தலைமையில் நடைபெற்றது.

இடர் ஏற்படும்போது அதனை எவ்வாறு எதிர்கொள்வது? மக்களை எவ்வாறு பாதுகாப்பது?, முன்னெச்சரிக்கைகள் தொடர்பாகவும் தற்போதுள்ள இடர்முகாமைத்துவக் கட்டமைப்புக்கள் தொடர்பாகவும் யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவஉதவிப்பணிப்பாளர் என். சூரியராஜா, வடமராட்சிகிழக்குபிரதேச செயலக இடர் முகாமைத்துவ அபிவிருத்தி அலுவலர் பொ. நந்தவர்மன், உடுவில் இடர் முகாமைத்துவ அபிவிருத்தி அலுவலர்திருமதி. சு. வரதராஜன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

தொடர்ந்து இடர் முகாமைத்துவக் குழு தெரிவு செய்யப்பட்டது. அதன் தலைவராக டிலக்சன், செயலராக செல்வி சியானி, பொருளாளராக புவிந்தன், உபதலைவராக ஜின்ரன், உபசெயலராக துஸ்யந்தன் ஆகியோர்மற்றும்உறுப்பினர்கள் என 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மகாசபை தலைவரும் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத் தலைவருமான இ. முரளீதரன், வடமராட்சி கிழக்கு, தெல்லிப்பளை, சண்டிலிப்பாய் பகுதிகளுக்கு உட்பட்ட இளையோர் என சுமார் 40 பேர்வரை கலந்து கொண்டனர் என்றுதெரிவிக்கப்பட்டது. (த-160)



## குளவிக் கொட்டுக்கு இலக்காகினர் ஏழு பேர்

முல்லைத்தீவு, ஒக். 28

புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் வயல் வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சிறுமி உள்ளிட்ட ஏழு பேர் பாதிக்கப்பட்டு புதுக்குடியிருப்பு ஆதாரார மருத்துவமனை மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அண்மையில் சுதந்திர புரம் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

ஆறு பேர் பாதிக்காப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வெளியேறினர். (க-ரி3)



மாவீரர் தினத்தை முன்னிட்டு மன்னார் ஆக்காட்டி வெளி கிராமத்தில் அடையாளம் காணக்கூடிய மாவீரர் துயிலும் இல்லங்கள் நேற்று முன்தினம் துப்புரவு செய்யப்பட்டன.

## மாணவர்கள் மதிப்பளிப்பு

சாவகச்சேரி, ஒக். 28

சாவகச்சேரி கிழக்கு மதுவன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் மற்றும் 70 க்கும் மேற்பட்ட புள்ளிகள் பெற்ற மாணவர்கள் ஆகியோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

க. யோகேஸ்வரதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கே. சயந்தன், சாவகச்சேரி நகர சபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

## சிங்கள மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு

கொழும்பு, ஒக். 28

புதிய ஜனநாயக மாக்சிச லெனினசக் கட்சியின் பொதுச் செயலர் சி. கா. செந்திவேலால் எழுதப்பட்ட வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை என்ற அரசியல் விமர்சன நூலின் சிங்கள மொழிபெயர்ப்பின் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மூத்த விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன் நூலை மொழிபெயர்ப்புச் செய்துள்ளார்.

பேராசிரியர் சி. சிவசேகரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கட்சியின் முக்கிய பிரதிநிதிகள் சிறப்புரை ஆற்றவுள்ளனர். (க)

## அரசமைப்புச் சதியின் ஓராண்டு நினைவு

கொழும்பு, ஒக். 28

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 26ஆம் திகதி இடம்பெற்ற அரசமைப்புச் சதியின், முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் மெழுகுவர்த்தி ஏந்தி கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.



அரசமைப்புக்கு முரணான வகையில், கடந்த ஆண்டு ஒக்ரோபர் 26ஆம் திகதி இரவு, தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார். இதையடுத்து, நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் 52 நாள்கள் நீடித்தது.

உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அடுத்து, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்து வைத்த இந்த நெருக்கடி முடிவுக்கு வந்தது.

இதனை நினைவுகூரும் வகையில், கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நூற்றுக்கணக்கானோர் கூடி நேற்றுமுன்தினம் மாலை மெழுகுவர்த்திகளை ஏந்தி கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தினர். சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஒ.5,26)

## அரச தலைவர் தேர்தலில் 2 லட்சம் அரச பணியாளர்கள்

கொழும்பு, ஒக். 28

அரச தலைவர் தேர்தலுக்காக இரண்டு இலட்சம் அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களில் இவர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பிரதி தேர்தல்கள் ஆணையாளர் ஜே.ஏ. எஸ்.பி.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது தேர்தல் கடமைகளுக்கு அரச ஊழியர்களை ஈடுபடுத்தும் விதமாக திட்டம் தயார் செய்யப்பட்டு அதனை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்களின் பிரகாரம், வாக்கெண்ணும் பணிகளில் மட்டும் சுமார் 48 ஆயிரம் அரச பணியாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அதனைவிட ஒரு இலட்சத்துக்கும் அதிகமான அரச பணியாளர்கள் வாக்களிப்பு நிலையப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோரை நலன்புரி மற்றும் போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபடுத்ததிட்டமிடப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் ஒரு வாக்களிப்பு நிலையத்தில் 8 அரச பணியாளர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர் எனவும், வாக்களிப்பு நிலையத்தின் தேவைக்கு ஏற்ப அந்த எண்ணிக்கை அதிகரிக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். (ஒ.5)

## ஜே.வி.பியின் குற்றச்சாட்டு பொய்

### அரச தலைவர் பணிமனை தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28

அரச தலைவரின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக தனிப்பட்ட பாவனைக்கு 800 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானதும் எவ்வித அடிப்படையும் அற்றதாகும் என்றும் அதனை கடுமையாக நிராகரிப்பதாகவும் அரச தலைவர் பணிமனை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடாளுமன்றத்தின் இடைக்கால கணக்கறிக்கை மூலம் அரச தலைவருக்காக மேலும் 240 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போது நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதாக ஊடக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பதவி வகித்த அல்லது பதவி வகிக்கும் எந்தவொரு அரச தலைவருக்கும் தனிப்பட்ட பாவனைக்காக நிதி ஒதுக்கப்படுவதில்லை என்றும் அந்த நிதி தமது பணிமனைக்கே ஒதுக்கப்படுவதாகவும் அரச தலைவர் பணிமனை சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய அரச தலைவரின் செலவுத் தலைப்பில் பெருமளவான நிதி ஒதுக்கப்பட்டிருப்பது தற்போது நடைமுறைப்படுத்தப்படும் அரச தலைவர் சிறப்புச் செயலணிகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களுக்கேயாகும்.

அந்த வகையில் அரச தலைவரின் தனிப்பட்ட பாவனைக்கு எந்தவகையிலும் நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் இத்தகைய விசமத்தனமான குற்றச்சாட்டுக்களை முற்றிலும் நிராகிப்பதாகவும் அரச தலைவர் பணிமனை குறிப்பிட்டுள்ளது. (ஒ.5)

## கோத்தாவைக் கைதுசெய்ய நானே பரிந்துரை செய்தேன்

### சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார

கொழும்பு, ஒக். 28

காலி துறைமுகத்தில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான கனரக ஆயுதங்களுடன் கைப்பற்றப்பட்ட எவன்காா்ட் மெரிடைம்ஸ் சேர்விசர்ஸ் நிறுவனத்தின் எம்.வி.மஹநுவர ஆயுதக் கப்பல் விவகாரத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலரும் தற்போதைய வேட்பாளருமான கோத்தபாய ராஜபக்சவை கைது செய்ய வேண்டும் என்று தானே அப்போதைய சட்ட மா அதிபர் யுவஞ்சன விஜேதிலகவுக்கு அறிக்கை ஊடாக பரிந்துரைத்ததாக முன்னாள் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அரச தலைவர் சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார தெரிவித்தார்.

ஆயுத கப்பல் விவகாரம் தொடர்பிலான நடவடிக்கைகள் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அப்போதைய குற்றவியல் பிரிவு பொறுப்பாளர் சொலிசிட்டர் ஜெனரல் சுகந்த கம்பலத்தால் என்னிடமே ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் கோத்தபாய உள்ளிட்ட ஐவரை அப்போது கைது செய்ய சட்ட மா அதிபருக்கு பரிந்துரைத்ததாகவும் அப்பரிந்துரையின் பின்னர் குறித்த கோவை மீள தன்னிடம் ஒப்படைக்கப்படவில்லை எனவும் அதனால் குறித்த ஐவரும் கைது செய்யப்படாமை தொடர்பில் முதுகெலும்புள்ள முன்னாள் சட்ட மா அதிபர் எனில் யுவஞ்சன விஜேதிலக நாட்டுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கோத்தா உள்ளிட்டோரைக் கைது செய்ய தான் அப்போது கொடுத்த பரிந்துரை, சட்ட மா அதிபர் திணைக்களத்தில் சிலரது அதிருப்திக்கு உள்ளானதால், அப்போதைய சட்ட மா அதிபரால் தனது பரிந்துரைகளை ஆராய, தற்போதைய தலைமை நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, தற்போதைய மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி யசந்த கோதாகொட, முன்னாள் பாதுகாப்பு செயலர் கபில வைத்தியரத்ன ஆகியோரைக் கொண்ட சிறப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், அவர்களும் அப்போது தனது பரிந்துரைகளுடன் உடன்பட்டதாகவும் வசந்த நவரத்ன பண்டார சுட்டிக் காட்டினார்.

முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் சுகந்த கம்லத் ஆகியோர் இருவேறு பத்திரிகைகளுக்கு வழங்கியிருந்த நேர்காணல்களில் குறிப்பிடப்பட்டுள்ள எவன்கார்ட் விவகார விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் நோக்கில் சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியே அரச தலைவர் சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார இந்த விடயங்களை வெளிப்படுத்தினார். (ஒ.5)

## கோத்தாவின் பரப்புரைக்காக அமெரிக்காவிலிருந்து 850பேர்

கொழும்பு, ஒக். 28

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவான பரப்புரைகளில் ஈடுபடுவதற்காக, அமெரிக்காவில் இருந்து 850 இலங்கையர்களும், இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களும் கொழும்புக்கு வரவுள்ளனர்.

கோத்தபாய ராஜபக்சவுக்கு வாக்களிப்பதற்காகவும், அவருக்கு ஆதரவான பரப்புரையில் ஈடுபடுவதற்காகவும், குறைந்தது 850 பேர் கொழும்பு வருவதற்கு வானூர்திகளில் ஆசனங்களைப் பதிவு செய்துள்ளதாக, அவர்களுக்கான பயணச்சீட்டுகளை விற்பனை செய்த பயண முகவர் தகவல் வெளியிட்டுள்ளார். இவர்களில் பெரும்பாலானவர்கள், லொஸ்ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட அமெரிக்காவின் கிழக்கு கரையோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ.5)

## உந்துருளியுடன் நாய் மோதியதில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, ஒக். 28

சாலையின் குறுக்கே ஓடிய நாயுடன் உந்துருளி மோதியதில் அதில் பயணித்த இளைஞன் தலையில் காயங்களுடன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு யாழ்ப்பாணம் போதான மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், இளைஞன் உந்துருளியைச் செலுத்தும்போது தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்று குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது. கந்தசாமி சிவகணேசன் (வயது-23) என்பவரே காயமடைந்தவராவார். (ஒ.5,9)

## விபத்தில் சிறுமி காயம்

சாவகச்சேரி, ஒக். 28

தீபாவளி கொண்டாட்டத்துக்காக உறவினர் வீட்டுக்குச் சென்று திரும்பிய 13 வயதுச் சிறுமி, பயணித்த ஈருருளியை உந்துருளி மோதி விட்டு தப்பியோடியுள்ளது. காயமடைந்த சிறுமி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கெற்பேலி மத்தியில் இடம்பெற்றுள்ளது. சசிகுமார் அபிராமி என்னும் சிறுமியே காயமடைந்தவராவார். (ஒ.5,9)

## 51 மணிநேரம் கடந்தும்

# குழந்தையை மீட்கும் முயற்சி தொடர்கிறது

சென்னை, ஒக். 28

ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த இரண்டு வயதுக் குழந்தையை மீட்கும் முயற்சி 51 மணி நேரம் கடந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆழ்துளைக் கிணற்றுக்கு பக்கவாட்டில் மற்றொரு துளை தோண்டி அதனூடாக தீயணைப்பு படைவீரர்களை அனுப்பி குழந்தையை மீட்கும் கடைசி முயற்சி நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது. நேற்று இரவு இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் அந்த முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

தமிழகத்தின் திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை அருகே நடுக்காட்டுப்பட்டியில் உள்ள வீட்டின் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த 2 வயதுக் குழந்தை சுர்ஜித் ஆழ்துளை கிணற்றுக்குள் கடந்த 25ஆம் திகதி மாலை 5.40 மணிக்கு தவறி விழுந்துவிட்டான்.

ஆழ்துளை கிணற்றில் விழுந்த குழந்தை முதலில் 26 அடியில் சிக்கியது. பின்னர் 70 அடி ஆழத்துக்குச் சென்ற குழந்தை, அதன்பின் 85 அடி ஆழத்துக்குச் சென்றுவிட்டான். குழந்தை மேலும் இறங்கி 100 அடி ஆழத்துக்குச் சென்றுவிட்டான். குழந்தை சிக்கியுள்ள ஆழ்துளைக்கிணறு 600 அடி ஆழமுள்ளதாகும். இதனிடையே ஆழ்துளை கிணற்றில் விழுந்த குழந்தை சுர்ஜித் 100 அடிக்கும் கீழே சென்றுவிடாதபடி 'ஏர் லாக்' மூலம் கை பிடிக்கப்பட்டுள்ளது. சுரங்கம் தோண்டி மீட்கும்போது அதிர்வில் குழந்தை கீழே சென்றுவிடாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணிகளில் பல்வேறு குழுக்கள் ஊடாக பலவிதமான முயற்சிகள் எடுக்கப்பட்டு அவை தோல்வியில் முடிவடைந்திருந்தன. இறுதியாக ஆழ்துளைக் கிணற்றுக்கு சமாந்தரமாக 110 அடி ஆழம் வரையில் ஆழ்துளை தோண்டி, அதனூடாக வீரர்களை அனுப்பி குழந்தை இருக்கின்ற இடத்தை நோக்கி மண்ணை அகழ்ந்து சென்று மீட்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

110 அடி ஆழத்தை தோண்டும் நோக்கில் 'ரிக்' இயந்திரம் கொண்டு வரப்பட்டது. அதனூடாக 2 மணி நேரத்தில் குழி தோண்ட முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும், நிலம் கல்பாறையாக இருப்பதாக வேகமாக தோண்ட முடியவில்லை. இதற்கிடையில் இயந்திரமும் சூடேறுவதால் இடையிடையே ஓய்வும் வழங்கப்படுகின்றது. இதேவேளை, இதனை விட மூன்று மடங்கு வேகமாகச் செயற்படும் ரிக் இயந்திரம் நேற்று இரவு கொண்டு வரப்பட்டாலும் அதனைப் பூட்டி செயற்படுத்தும் பணி இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் ஆரம்பிக்கப்படவில்லை.

(ஒ,5)

## அப்பாவை...

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார், தொலைக்காட்சி நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில், சஜித் பிரேமதாசவுக்கு அவரது தந்தையை கொலை செய்த விடுதலைப் புலிகள் மீது கோபம் இருக்கின்றது என்று கூறி யிருந்தார். இது தொடர்பில் சஜித் பிரேமதாசவிடம், பன்னாட்டு ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்கையிலேயே சஜித் மேற்கண்டவாறு கூறினார்.

'தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலிலேயே எனது தந்தை உயிரிழந்தார். அதற்காக தமிழ்க் கட்சிகளையோ, தமிழ் மக்களையோ வெறுக்கவில்லை. கட்சிகளுடன் பேச்சு நடத்தி, மக்களின் வாக்குகளை பெறுவதற்கு கட்சியின் தலைமைப்பீடம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. தந்தைக்காக யாரையும் பழிவாங்கும் நோக்கம் எனக்கில்லை' - என்றார். (ஒ,5,22)

## சுர்ஜித்...

ணகை அம்மன் சனசமூக நிலையத்தில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கிராம அமைப்புக்களின் தலைவர்கள், சனசமூக நிலையத்தலைவர்கள், ஸ்டார் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் எனப்பலரும் ஒன்று கூடினர்.

தமிழ்நாடு திருச்சி மாவட்டம் மணற்பாறை அருகே உள்ள நடுக்காட்டுப்பட்டிக்கிராமத்தில் ஆழ்துளை கிணற்றுக்குள் சிக்கிக் கொண்ட சிறுவன் சுர்ஜித் நலமுடன் மீட்கப்படவேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து மௌன வழிபாட்டை முன்னெடுத்தனர். (ஒ,5,21)

## தேர்தல்...

வரையில் பணியாற்றுவதற்கு தேர்தல்கள் திணைக்களம் தடை விதித்துள்ளது. இது தொடர்பில் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் பேரவைக்கு பதவிவழி உள்வாரி உறுப்பினர்களாக நியமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட ஒன்று அதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுவது வழமையாகும். கடந்த வருடம் மார்ச் மாதம் 28 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையில் இருந்த 14 உள்வாரி உறுப்பினர்களுக்கு ஈடாக 15 வெளிவாரி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அதன் பின்னர் இந்த வருட முற்பகுதியில் இந்து கற்கைகள் பீடம் புதிதாக உருவாக்கப்பட்டதன் காரணமாக உள்வாரியாக அதன் பீடாதிபதி உள்வாங்கப்பட்டதனால் அதனைச் சமப்படுத்தும் வகையில் புதிதாக வெளிவாரி உறுப்பினர் ஒருவரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்திருந்தது.

இந்த நியமனம் அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்து தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பில் ஆராய்ந்த தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல் முடியும் வரையில் அவர் செயற்படத் தடை விதித்துள்ளது. (ஒ,5,105)

## ஐ.எஸ். ...

அவர் தெரிவித்ததாவது:

உலகின் மிகவும் ஆபத்தான பயங்கரவாதியை அமெரிக்க படையினர் நேற்று இரவு (நேற்றுமுன்தினம்) அழித்துள்ளனர். அமெரிக்கா உலகின் மிகப்பெரும் பயங்கரவாத தலைவருக்கு நீதி வழங்கியது.

சிரியாவில் அவரது மறைவிடத்தின் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது அவர் கொல்லப்பட்டுள்ளார். சிரிய அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத இட்லிப் நகரில் சனிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் அவர் கொல்லப்பட்டுள்ளார்.

சிரியாவின் வடமேற்கு பகுதியில் அமெரிக்க படையினர் துணிச்சலான, ஆபத்தான நடவடிக்கையை மேற்கொண்டு தங்கள் நோக்கத்தை மிகச்சிறப்பான விதத்தில் நிறைவேற்றினார்கள்.

சுரங்கப்பாதையொன்றின் முடிவு வரை ஓடிய பின்னர் பக்தாதி கதறி அழுதபடி சாவைத் தழுவினார். அந்த வீட்டிலிருந்து 11 சிறுவர்கள் மீட்கப்பட்டனர். அவர்களுக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் சுரங்கப்பாதை ஊடாக தப்பிச்செல்ல முற்பட்டவேளை பக்தாதி தன்னுடன் மூன்று குழந்தைகளையும் அழைத்துச்சென்றார். அவர் தனது தற்கொலை அங்கியை வெடிக்கவைத்தார். அவருடன் மூன்று குழந்தைகளும் கொல்லப்பட்டனர். அவர் ஒரு நாயை போல, ஒரு கோழையை போல கொல்லப்பட்டார். உலகம் தற்போது மிகவும் பாதுகாப்பான இடமாக மாறியுள்ளது.

மரபணு பரிசோதனைகள் உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் ஊடாக கொல்லப்பட்டது அபுபக்கர் அல் பக்தாதி தான் என்பதை உறுதிப்படுத்தியுள்ளோம் - என்றார். (ஒ,5)

## யாழ்ப்பாணத்தில்

பாணத்தில் இடம்பெறும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்கவுள்ளனர். வவுனியா வைரவ புளியங்குளத்தில் அமைந்துள்ள யங்ஸ்ரார் விளையாட்டு கழக மைதானத்தில் காலை 10 மணிக்கு முதலாவது பரப்புரைக் கூட்டம் நடைபெறும். அதன் பின்னர் உலங்குவானூர்தி மூலம் யாழ்ப்பாணம் வரும் ராஜபக்சாக்கள், யாழ்ப்பாண நகரில் ரக்கா வீதியில் அமைந்துள்ள இளங்கதிர் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறும் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

லலித் மற்றும் குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்குத் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முன்னிலையாகுவதில் தனக்குப் பாதுகாப்பு பிரச்சினை இருப்பதாக கோத்தபாய ராஜபக்ச தெரிவித்திருந்தார். இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறும் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் பங்கேற்கவுள்ளார்.

இன்றைய கூட்டத்துக்கு வழமையான பாதுகாப்பே வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ,5,21)

## விவாதத்துக்கு...

பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் அரச தலைவராகக் கூடியவருக்கு எதிர்காலத்தில் நாட்டில் மேற்கொள்ளவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் அதனைஎவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதுதொடர்பாகவும் தெளிவு இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் வேறு யாராவது எழுதிக் கொடுப்பதை வாசித்து மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்குவதால் மக்களுக்கு ஏமாற்றமே ஏற்படும்.

நாட்டின் தலைவராக வரக் கூடியவர் எவ்வாறு நாட்டை முன்னேற்றப்போகின்றார் என்ற வேலைத்திட்டத்தை பொது மக்களுக்கு முன்னால் தெரிவிக்கவேண்டும். அதன் மூலம் யார் அரச தலைவருக்குப் பொருத்தமானவர் என்று மக்கள் தீர்மானிப்பார்கள். அந்தச் சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்குவதற்காக எனது எதிர்வேட்பாளரை பகிரங்க விவாதத்துக்கு அழைத்திருந்தேன். ஆனால் அதற்கு இதுவரை பதில் தெரிவிக்கவில்லை - என்றார். (ஒ,5)

## 4 கிலோ...

பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் போதைப் பொருள் கடத்தல் இடம்பெறுவதாக அதிரடிப்படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. அந்தப் பகுதியில் அதிரடிப் படையினர் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அப்போது சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய நபரை மறித்து சோதனையிட்ட போது அவரிடம் இருந்து நான்கு கிலோ கேரள கஞ்சாவை மீட்டதாக அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (ஒ,5,21)


## புதிய...


கனமழை கிடைக்கும் என்பதுடன் காற்றின் வேகமும் உயர்வாக இருக்கும். வடக்கு, கிழக்கு கடற்பகுதிகளில் அலைகளின் உயரம் அதிகரித்து காணப்படுவதுடன் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும். மீனவர்கள் அவதானத்துடன் இருப்பது சிறந்தது என்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியற்துறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (ஒ,5)

## தேசிய...

அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் அறிக்கை தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையே அளித்துள்ளது என்று தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இது தொடர்பில் தங்களின் நிலைப்பாடு என்ன என்று சஜித்திடம், பன்னாட்டு ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு அவர், தமிழ் மக்களை ஓரங்கட்டி அரச தலைவர் தேர்தலில் எவரும் வென்றுவிட முடியாது. மூவின மக்களையும் மதிக்கும் வகையில் அவர்களுக்குச் சம உரிமையை வழங்கும் வகையில்தான் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். இதற்கமையவே எமது தேர்தல் அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை கண்டே தீருவோம். பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வை வழங்கியே தீருவோம். எமது ஆட்சியில் நல்லிணக்கமே நிலவும். சர்வாதிகாரத்தனத்துக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் - என்றார். (ஒ,5,22)



# சிரியாவிலிருந்து எண்ணெய் கடத்தியுள்ளது அமெரிக்கா!

மொஸ்கோ, ஒக். 28
சிரியாவில் இருந்து அமெரிக்கா பல்லாயிரம் தொன் கச்சாவை கடத்தியுள்ளது என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

சிரியாவில் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக அமெரிக்கா தனது படைகளை நிறுத்தியிருந்தது. குறிப்பாக குர்துக்களின் பகுதியில் முகாமிட்டிருந்த அமெரிக்கா அண்மையில் பின்வாங்கி வெளியேறியது. அமெரிக்கா பின்வாங்கியதை அடுத்து அந்தப் பகுதியில் துருக்கியும் ரஷ்யாவும் ஆதிக்கம் செலுத்தியுள்ளன.

இந்த நிலையில் அமெரிக்கா பின்வாங்கியமை கச்சாவைக் கடத்துவதற்காகவே என்றவாறாகத் தகவல் வெளியிட்டுள்ளது ரஷ்யா. அவ்வாறு பின்வாங்குவதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் பல்லாயிரம் தொன் கச்சாவை இரகசியமாகக் கடத்தியுள்ளது என்று ரஷ்யா குறிப்பிடுகிறது. மத்திய கிழக்கில் அமெரிக்காவுக்கு ஆதரவாக உள்ள இஸ்ரேலுக்குக் குறித்த கச்சா கடத்தப்பட்டு அங்கிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம் என்றும் ரஷ்யா கருதுகிறது. (ம)

# கியூபாவுடனான தொடர்புகளை துண்டிக்கின்றார் அதிபர் ட்ரம்ப்

வொஷிங்டன், ஒக். 28
கியூபாவுக்கான வானூர்திச் சேவைகளை நிறுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் இந்தத் தடை நடைமுறைக்கு வரும் என்று கருதப்படுகிறது.

அமெரிக்காவும், அதன் அண்டை நாடான கியூபாவும் அரை நூற்றாண்டுக்கும் மேலாகப் பரம எதிரிகளாக இருந்தன.

1959ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஆதரவுடன் அங்கு நடைபெற்றுவந்த ஆட்சியை பிடெல் காஸ்ட்ரோ தலைமையிலான கம்யூனிஸ்ட் புரட்சிப்படை தூக்கியெறிந்த பின்னர் இருநாடுகளுக்கும் இடையில் தீராப்பகை நிலவிவந்தது.

இந்த நிலையில், கியூபாவுடன் நட்பு பாராட்டுவது என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா முடிவெடுத்து அதற்கான முயற்சிகளையும் செய்தார்.

54 ஆண்டுகள் கழித்து அமெரிக்காவில் கியூபா நாட்டு தூதரகம் கடந்த 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் திறக்கப்பட்டது.

அதேபோன்று கியூபாவில் அமெரிக்க தூதரகம் திறக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் ஒபாமா கியூபாவுக்குச் சென்று அந்த நாட்டின் அதிபர் ரவுல் காஸ்ட்ரோவை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது இருநாட்டு நல்லுறவு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதன் பின்னர் இருநாடுகளும் பழைய பகையை மறந்து, சற்று இணக்கமாக நடக்கத் தொடங்கின.

இந்த நிலையில், அமெரிக்காவில் உள்ள பல்வேறு முக்கிய நகரங்களில் இருந்து கியூபாவுக்குச் செல்லும் அமெரிக்க வானூர்திகளுக்கு வரும் டிசெம்பர் மாதம் முதல் தடை விதிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளார். (ம)



## அமைதிக்கான நோபல் வென்ற எத்தியோப்பிய தலைமை அமைச்சருக்கு எதிரான போராட்டத்தில் 67 பேர் இறப்பு!

அடிஸ்அபபா, ஒக். 28
அமைதிக்கான நோபல் பரிசை வென்ற எத்தியோப்பிய தலைமை அமைச்சருக்கு எதிரான போராட்டத்தில் 67 பேர் உயிரிழந்தனர்.

அபி அகமதுவுக்கு எதிராக ஜாவர் முகமது என்பவர் தலைமையில் போராட்டங்கள் நடந்து வருகின்றன. இது தொடர்பில் ஜாவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

அகமது ஆரம்பகால சர்வதிகாரப் போக்கை கடைப்பிடிக்கும் அரசியலை மேற்கொள்ள திட்டமிட்டு வருகிறார். அவர் ஆட்சிக்கு வர உதவியாக இருந்த அவரது மிக நெருங்கிய கூட்டணியினர் கூட அவரது சில கொள்கைகள் மற்றும் ஆலோசனைகளை ஏற்க மறுத்து உள்ளனர்.

இந்த நிலையில்கூட அவரது அரசியல் நடவடிக்கைகள் சர்வாதிகாரப் போக்கை நோக்கி செல்கின்றன - என்றார். (ம)

## ஈராக்கில் வன்முறை 42 பேர் உயிரிழப்பு!

ஈராக் நாட்டில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் 42 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈராக் நாடு தொடர் போர்களால் நிலைகுலைந்துள்ளது. அங்கு வாழ்வாதாரம் இன்றி மக்கள் தத்தளிக்கின்றனர். இந்த நிலையில் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும், ஊழலை ஒழிக்க வேண்டும் என்று, வலியுறுத்தி வீதிகளில் இறங்கி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.


இந்தப் போராட்டங்கள் வன்முறையாக மாறியதில் இதுவரை 42 பேர் உயிரிழந்துள்ளனர். (ம)

# உலக பணக்காரராக மீண்டும் பில்கேட்ஸ்!



வொஷிங்டன், ஒக். 28
போர்ப்ஸ் பத்திரிகையின் பட்டியலின்படி உலகப் பணக்காரராக மீண்டும் உருவெடுத்துள்ளார் மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ். 1994ஆம் ஆண்டு முதல் உலகப் பணக்காரராக இருந்த பில்கேட்ஸ் 2018ஆம் ஆண்டில் அந்த இடத்தை அமேசன் இணைய விற்பனை நிறுவுநர் ஜெப் பெசோஸிடம் இழந்தார். கடந்த புதன்கிழமை முதல் அமேசன் நிறுவனம் பின்னடைவைச் சந்தித்து பங்குகளின் பெறுமதிகள் குறைவடையத் தொடங்கின. இதையடுத்து பெசோஸின் சொத்துமதிப்பு 103.9 பில்லியன் டொலரானது. இதனால் பில்கேட்ஸ் 105.7 பில்லியன் டொலர்களுடன் மீண்டும் உலகப் பணக்காரரானார். (ம)

# கலிபோர்னிய காட்டுத் தீ 7ஆயிரம் ஏக்கர் எரிந்தது




வொஷிங்டன், ஒக். 28

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் பற்றி எரியும் காட்டுத்தீ காரணமாக 50 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 7 ஆயிரம் ஏக்கர் நிலப் பகுதி முழுவதுமாக எரிந்து நாசமாகியுள்ளன.

கலிபோர்னியா மாநிலத்தில் உள்ளது சான்டா கிளாரிட்டா நகர். இயற்கை எழில் மிகுந்த இந்த பகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் அளவில் காடுகள் உள்ளன. கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட காட்டுத் தீ அங்கு விரைவாகப் பரவி வருகின்றது.

இதுவரை சுமார் 7 ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதி முழுவதுமாக எரிந்து நாசமாகியுள்ளது.

கடுமையான சூறைக் காற்று, அதிக வெப்பநிலை மற்றும் குறைந்த ஈரப்பதம் காரணமாகக் காட்டுத்தீ மிக மிக விரைவாகப் பரவி வருகின்றது.

கலிபோர்னியா அடிக்கடி காட்டுத் தீ ஏற்படும் நகரங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

கடந்த வருடத்தில் சுமார் 100 பேர் காட்டுத் தீ காரணமாக இந்த நகரத்தில் மட்டும் உயிரிழந்தனர். (ம)



## கடந்த ஆண்டில் 7 சிறுவர்களை தூக்கிட்டு கொன்றுள்ளது ஈரான்

தெக்ரோன், ஒக். 28

ஈரான் கடந்த ஆண்டு மட்டும் 7 சிறுவர்களுக்குச் சாவுத் தண்டனையை நிறைவேற்றியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

உலகம் முழுவதும் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சாவுத் தண்டனையை நிறைவேற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதனை மீறி ஈரான் கடந்த ஆண்டு மட்டும் 7 சிறுவர்களுக்குச் சாவுத் தண்டனையை நிறைவேற்றியதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஐ.நா சபைக்கான ஈரானின் மனித உரிமை விசாரணையாளர் ஜாவீத் ரஹ்மான், ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இந்த தகவலைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது: "இது நம்பகமான தகவல். ஈரானில் தற்போது சுமார் 90 சிறுவர்கள் சாவுத் தண்டனையை எதிர்நோக்கி உள்ளனர். உலக நாடுகளில் ஈரானில்தான் சாவுத் தண்டனைகள் அதிகமாக நிறைவேற்றப்படுகின்றன" - என்றார். (ம)

## சிலி தலைமை அமைச்சருக்கு எதிராக வெடித்தது போராட்டம்


சிலி நாட்டில் பொருளாதார சீர்திருத்தங்களைக் கண்டித்தும், அந்த நாட்டு தலைமை அமைச்சர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் லட்சக் கணக்கான மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலி நாட்டில் பொருளாதார சீர்திருத்தங்கள் காரணமாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. அரசின் நிர்வாகத்தில் பொதுப் போக்குவரத்துக் கட்டணங்கள் பலமடங்காக உயர்த்தப்பட்டன. மேலும் ஊதியம் மற்றும் ஓய்வூதியம், மருத்துவமனை கட்டணங்கள் ஆகியவற்றிலும் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

இந்தக் கட்டண உயர்வு மற்றும் சீர்திருத்தங்களைக் கண்டித்து சிலி நாட்டின் தலைநகர் சாண்டியாகோ உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 10 லட்சம் மக்கள் அவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் குறித்து சிலியின் தலைமை அமைச்சர்.தனது கீச்சகத்தில், "சிலி நாட்டை அமைதியான புதிய பாதையில் கொண்டு செல்வதற்கான கோரிக்கைகளை முன்னிறுத்தி மக்கள் பேரணி நடத்தியுள்ளனர். நாட்டின் நலனை நோக்கி மட்டுமே இனி அரசு செயற்படும். சமூக அமைதியின்மை ஏற்பட்டதற்காக வருந்துகிறோம். நாட்டில் அறிவிக்கப்பட்ட அவசர நிலை சட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவது பற்றி விரைவில் அறிவிக்கப்படும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம)





## இன்றைய நாள்

**மேடம்:** தொல்லை கொடுத்தவர் இடம் மாறி போவர். புதியவர்களின் ஆதரவில் தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவில் அறப்பணி செய்வீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும்.

**இடபம்:** கவனக் குறைவால் பணிகளில் சிரமம் வரலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு அவசியம். பணவரவு சிக்கன செலவுகளுக்குப் பயன்படும்.

**மிதுனம்:** உங்கள் மனதில் குழப்பம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நல்வழி தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஓரளவு கூடும். பண பரிவர்த்தனை சீராகும்.

**கடகம்:** உங்களின் சிறப்பான செயலால் புதியவர் நட்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய பணிகள் உருவாகி நெருக்குதல் ஏற்படலாம். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். பணவரவு வழக்கத்தை விட குறையலாம். பொருட்கள் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**கன்னி:** உங்கள் நடை, உடை, பேச்சில் வசீகரம் உருவாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும். தாராள பணவரவில் குடும்பத்தின் தேவை பெருமளவில் நிறைவேறும்.

**துலாம்:** நிகழ்வுகள் மனதில் சங்கடம் தரலாம். பொது இடங்களில் நிதானித்து பேச வேண்டும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணிபுரிவது அவசியம். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**விருச்சிகம்:** நண்பரின் உதவி எதிர்பாராமல் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க ஆர்வமுடன் செயல்படுவீர்கள். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும். புத்திரர் பெற்றோரது சொல் கேட்டு நடந்து கொள்வர்.

**தனுசு:** செயல்கள் திட்டமிட்டபடி இனிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த தாமதம் சரியாகும். தாராள பணவரவில் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

**மகரம்:** பணிகளை தாமதமின்றி நிறைவேற்றவும். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். உறவினருடன் கடின வார்த்தை பேச வேண்டாம்.

**கும்பம்:** குடும்ப உறுப்பினர்களின் மனம் அறிந்து பேச வேண்டும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். சேமிப்பு பணம் செலவாகும்.

**மீனம்:** உடன் பிறந்தவர்கள் ஆதரவாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் உள்ள குளறுபடி புதிய முயற்சியால் சரியாகும். குடும்பத்தின் செலவுக்காக கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள்.



## தேசியத்தில் கிண்ணம் வென்ற

# வடக்கு கால்பந்தாட்ட அணிக்கு நேற்று மகத்தான வரவேற்பளிப்பு


யாழ்ப்பாணம், ஒக். 28
45ஆவது தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற வடமாகாண கால்பந்தாட்ட அணியினருக்கு நேற்று மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.
பதுளை வின்சன் டயஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தென்மாகாண அணிக்கு எதிராக வடக்கு மாகாண அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் வென்றது வடக்கு மாகாண அணி. தேசியத்தில் கிண்ணம் வென்ற வடமாகாண அணிக்கு நேற்று மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் வைத்து இந்த மதிப்பளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (ம-23)



# கோக்லியை ஆதரிப்பேன் கங்குலி மீண்டும் தகவல்!



இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்ட கங்குலி, இந்திய அணியின் தலைவர் கோக்லியை அனைத்து வழிகளிலும் ஆதரிப்பேன் என்று தெரிவித்தார். இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட போதிலும் இவ்வாறான ஒரு கருத்தை கங்குலி முன்வைத்திருந்தார். இந்த நிலையில் மீண்டும் அவ்வாறு தெரிவித்துள்ளார் அவர்.
இது தொடர்பில் கங்குலி மேலும் தெரிவித்ததாவது:
இந்திய கிரிக்கெட்டில் தலைவராக கோக்லி மிக முக்கியமான ஒரு நபர். நான் அந்த வழியில் தான் பார்க்கிறேன். நான் ஏற்கெனவே கூறியது போல் சாத்தியமாகக்கூடிய வழிகளிலெல்லாம் அவருக்கு முழு ஆதரவு அளிப்போம். இந்திய அணியை உலகிலேயே சிறந்த அணியாக உருவாக்க அவர் விரும்புகிறார். உள்ளபடியே கூற வேண்டுமெனில் கடந்த 34 ஆண்டுகளாக இந்திய அணியினர் கிரிக்கெட்ஆட்டங்கள் அதனை சிறந்த அணியென்றே வர்ணிக்க வைக்கிறது. அனைத்தும் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்.அவ்ளுக்குஅனைத்தையும் எளிதாக்க வேண்டியதுதான் என் வேலை. கடினமாக்குவதல்ல. அனைத்தும் ஆட்டத்திறன் அடிப்படையில்தான் முடிவு செய்யப்படும். திறமைதான் இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலத்தை முடிவு செய்யும். இதில் விராட் கோக்லி தான் முக்கியமான நபர். அவருக்கு ஆதரவு அளிப்போம். அவர் கூறுவதைக் கவனிப்போம். உலகக் கிண்ணத்தை வெல்லவில்லை என்கிறீர்கள். ஒவ்வொரு முறையும் உலகக் கிண்ணத்தை வெல்ல முடியாது. கோக்லியை ஆதரிப்போம். அவர் என்ன விரும்புகிறாரோ அதைக் கொடுத்து இந்திய கிரிக்கெட் முன்னேற்றத்தை உறுதி செய்வோம்.
வடிவத்திற்கேற்ப தலைமைத்துவத்தில் மாற்றம் என்ற கேள்வி இப்போது எழவில்லை. இந்தியா இப்போது வெற்றிபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது இந்திய அணி உலகின் தலைசிறந்த அணியாகும்.
கிரிக்கெட் மைதானங்கள் விவகாரத்தில் எம்மிடையே நிறைய மாநிலங்கள், நிறைய மைதானங்கள் உள்ளன. எனவே இது தொடர்பாகவும் அவருடன்அமர்ந்துபேசுவோம். அவர்விரும்புவதைச் செய்யலாம். நான் இருக்கும் வரை அனைவருக்கும் உரிய மரியாதை சேர்ப்பிக்கப்படும் அதில் மாற்றமில்லை – என்றார். (ம)



# வில்லியம்சனின் காயத்தை கண்காணித்து வருகிறோம்!

## நியூசிலாந்து கிரிக்கெட் சபை தகவல்

நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சனுக்கு ஏற்பட்டுள்ள காயத்தைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றோம் என்று தெரிவித்துள்ளது நியூசிலாந்து கிரிக்கெட் சபை.
இங்கிலாந்து அணி நியூசிலாந்துக்குச் சென்று ஐந்து ஆட்டங்கள் கொண்ட ரி20 தொடரில் விளையாடவுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பிக்கவுள்ளது. இந்தத் தொடருக்கான நியூசிலாந்து அணியில் அணித் தலைவர் வில்லியம்சன் இடம்பெறவில்லை. முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் விலகியுள்ளார். இந்த நிலையிலேயே வில்லியம்சனின் காயம் குறித்து இவ்வாறு தெரிவித்துள்ளது நியூசிலாந்து கிரிக்கெட் சபை.
கேன் வில்லியம்சனின் காயத்தை கண்காணித்து வருகிறோம். வங்காளதேசத்திற்கு எதிராக மார்ச் மாதம் நடைபெற்ற டெஸ்ட்போட்டியின்போது ஏற்பட்ட வகையான காயத்தால் அவதிப்பட்டாரோ, தற்போதும் அதே காயத்தால் அவதிப்படுகிறார். இந்தச் செய்தி வருத்தத்தைத் தருகிறது. அவரின் உடல்தகுதி மட்டில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம் என்று நியூசிலாந்து கிரிக்கெட் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ம)

### மீண்டும் பயஸ்?

இந்திய ரென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் மீண்டும் ரென்னிஸ் அரங்குக்குத் திரும்பவுள்ளார். டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடரில் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் அடுத்த மாதம் மோதவுள்ளன. இந்த நிலையிலேயே மேற்படி தொடரில் பயஸ் களமிறங்கவுள்ளார்.
சுமார் ஓராண்டு இடைவெளிக்குப்பின்னர்பயஸ் களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தால் கச்சாய் மகாவித்தியாலய அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க கரப்பந்தாட்டக் கம்பம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு கடந்த புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. (ம-159)






# தீபாவளித் தினத்தில் இலங்கைக்கு ஆஸ்திரேலியா வாணவேடிக்கை!

இலங்கை அணிக்கு எதிரான நேற்றைய முதலாவது ரி20 ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 134 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வோர்ணர் ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களை விளாசினார்.

அடிலெய்டில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர்களாக பின்ஞ் மற்றும் வோர்ணர்.

இருவரும் இணைந்து இலங்கை அணியைப் புரட்டியெடுத்தனர். 4.5 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களையும், 9.4 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களையும் எட்டியது ஆஸ்திரேலிய அணி. அ்ணி 122 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அணித் தலைவர் பின்ஞ் 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

வோர்ணருடன் இணைந்து மக்ஸ்வெல் இலங்கை அணிக்கு சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார். வெறும் 22 பந்துகளில் மக்ஸ்வெல் அரைச்சதம் கடக்க ஆஸ்திரேலியா மிகமிக இலகுவாக 200 ஓட்டங்களைத் தொட்டது. மக்ஸ்வெல் 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மறுமுனையில் சதம் கடந்தார் வோர்ணர்.

பந்துவீச்சில் சன்டகன், சானக இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிள இலங்கை அணி ஆரம்பத்திலேயே பெரியளவில் தடுமாறியது. ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார் குசல் மென்டிஸ். பாகிஸ்தானை புரட்டியெடுத்த ராஜபக்சவால் முடிந்தது 2 ஓட்டங்களே. குணதிலகவை வெளியேற்றினார் கம்மின்ஸ். குசல் ஜெனித் பெரேரா 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இலங்கை அணியின் தடுமாற்றமும் ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளர்களின் எழுச்சியும் தொடர இலங்கை அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களை மட்டுமே பெற்று 134 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

பந்துவீச்சில் சாம்பா 3 இலக்குகளையும், ஸ்ராக், கம்மின்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.


வோர்ணர் ஆட்டநாயகனானார். (ம)




## பிறந்தநாள் சதம்

இலங்கை அணிக்கு எதிரான நேற்றைய முதலாவது ரி20 ஆட்டத்தில் வோர்ணர் சதம் கடந்தார். நேற்று அவரது பிறந்த தினம் என்பதால் இந்தச் சதம் அவருக்கு சிறப்பு வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது.

இலங்கை அணிக்கு எதிரான தொடர் ஆரம்பமாவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் முடிவடைந்த ஆஷஸ் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவித்த வோர்ணர், 'நான் திறனில் இருந்து வீழ்ச்சியடையவில்லை. ஓட்டங்களைப் பெறுவதற்கு சற்றுத் தடுமாறுகின்றேன் அவ்வளவே. எப்போது வேண்டுமானாலும் திறனுக்குத் திரும்புவேன்' என்று தெரிவித்திருந்தார். (ம)





## ராஜிதவுக்கு சாட்டை

ரி20 ஆட்டங்களில் அதிக ஓட்டங்களை விட்டு க்கொடுத்தவர் என்ற மோசமாக அடைவை நிலைநாட்டினார் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் ராஜித.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் 4 பந்துப்பரிமாற்றங்களை வீசிய ராஜித இலக்கு ஏதையும் கைப்பற்றாமல் 75 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார்.

ரி20 ஆட்டங்களில் ஒரு பந்துவீச்சாளர் விட்டுக்கொடுத்த அதிக ஓட்டங்கள் இதுவாகும். (ம)

## இந்தியத் தொடரிலிருந்து விலகினார் தமிம் இக்பால்

தனிப்பட்ட காரணங்களுக்கான இந்தியாவுக்கு எதிரான தொடரில் இருந்து விலகினார் பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பால்.

பங்களாதேஷ் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று வகைத் தொடர்களிலும் விளையாடவுள்ளது. அடுத்த மாதம் 3ஆம் திகதி இந்தத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்படவுள்ள நிலையில் தமீம் இக்பால் தனிப்பட்ட காரணங்களுக்கான தொடரில் இருந்து விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# இந்திய அணியை பார்த்து உலக அணிகள் கற்கலாம்

## இயன் சப்பல் புகழாரம்




சிறந்த அணியாக விரும்பும் அணிகள் கோக்லி தலைமையிலான இந்திய அணியைப் பார்த்துக் கற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான இயன் சப்பல்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக இந்தியா பெற்ற முழுமையான வெற்றி, இந்திய அணியின் திறமை, விராட்



கோக்லியின் முன்னுதாரணம், இந்திய வேகப்பந்து வீச்சின் புதிய எழுச்சி என்பன இந்திய அணி எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் எந்த ஒரு அணியையும் அதன் உள்நாட்டிலும் எதிரணியினர் மண்ணிலும் சந்திக்கும் அசாத்திய அணியாக உருவாக்கியுள்ளது என்றும் இயன் சப்பல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சப்பல் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய அணி தனது வேகப்பந்து வீச்சில் புதிய பரிமாணத்தைக் காட்டியுள்ளது. பும்ரா இல்லாமலேயே இந்த வேகப்பந்து வீச்சுக் கூட்டணி உள்நாட்டில் பிரமாதமாக வீசி வருகின்றது. இதன் பின்னணியில் பல ஆண்டுகள் திட்டம் உள்ளது. இன்று இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் எந்த ஆடுகளத்திலும் சவாலானவர்கள்தான்.

மொகமது சமி, நல்ல முன்னேற்றம் கண்டுள்ள இசாந்த் சர்மா, பும்ரா, வேகம் காட்டும் உமேஷ் யாதவ் ஆகிய இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் எதிரணியினருக்கு எந்த ஆடுகளமாக இருந்தாலும் தங்களை மதிக்குமாறு வற்புறுத்துகின்றனர். இதுதவிர இந்தியாவின் பலமான சுழல்பந்துவீச்சும் சேர்ந்து வேறு எந்த அணியுடனும் ஒப்பிடமுடியாத அளவுக்கு இந்திய அணியை பலமாக வைத்துள்ளது. இதனுடன் நல்ல உடற்தகுதியுடைய ஹார்திக் பாண்டியாவையும் உள்நுழைத்து விட்டால் இந்திய அணி பேராபத்தானது.

துடுப்பாட்டத்தில் மற்ற அணிகள் தொடக்கத்தில் விளை யாடக்கூடிய திறமையை நோக்கிச் செல்லும் போது இந்திய அணி கூடுதல் திறமையாக ரோகித் சர்மாவை இறக்கி அழகுபார்க்கிறது. அணித்தேர்வில் மட்டும் இன்னும் கொஞ்சம் தங்களை சரியான வழியில் திரட்டிக் கொண்டால் இந்திய அணி ஒரு பவர் ஹவுஸ்தான்.

இந்திய வெற்றியில் இன்னொரு காரணி பிரகாசிக்கும் அதன் தலைவர் விராட் கோக்லிதான். அனைத்து ஆடுகளங்களிலும் சிறப்பாக ஆட வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தவர். ஜொலிப்பதற்கான கோலியின் ஆசை அணியினரிடமும் தொற்றிக் கொள்ள ஒட்டு மொத்த அணியுமே சிறந்த அணியாக இருப்பதற்கான ஆசையினைக் கொண்டுள்ளது.

தொடர் முடிந்தவுடன் கோக்லி மிகப்பிர மாதமாகக் கூறினார். இது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மேற்கோள்: 'டெஸ்ட் கிரிக்கெட்டில் நாங்கள் சிறந்த அணியாக விரும்புகிறோம். நேர்மையான நோக்கத்துடன் தொடர்ந்து பணியாற்றினால் சிறந்த அணி என்ற தகுதி நம்மைத் தொடரும்' என்றார். இதில் 'நோக்கத்தில் நேர்மை' என்ற கோக்லியின் கூற்று பிற நாட்டு அணிகளுக்கான விழிப்பேற்படுத்தும் அழைப்பாகும்.

இந்தியா நிறைய பணம், திறமை, ஐபிஎல் ஆகியவற்றுடன் பெரிய சாதக நிலையில் இருக்கின்றது. சிறந்தவற்றை சாதிப்பதற்கான அவர்களது அணுகுமுறை அதே போல் சிறப்பாக ஆட வேண்டும் என்று கருதும் மற்ற அணிகளும் பின்பற்ற வேண்டியது அல்லது நகலெடுக்க வேண்டிய அணுகுமுறையாகும் - என்றார்.

(ம)

# டெஸ்ட்டில் இருந்து விலகுகிறார் ரியாஸ்?

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் வகாப் ரியாஸ் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெறுவதற்கு தீர்மானித்துள்ளார் என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உலகக் கிண்ணத் தொடருக்கு முன்புவரை வகாப் ரியாஸை பாகிஸ்தான் அணி நிர்வாகம் தேர்வு செய்யவில்லை. ஆனால் அணியில் மூத்த வீரர்கள் எவரும் இல்லை என்பதால், முகமது ஆமிர், வகாப் ரியாஸை தேர்வு செய்தது. சிறப்பாக செயல்படவில்லை என்று இருவரும் ஓரங்கப்பட்ட நிலையில், உலகக்கிண்ணத் தொடரில் இருவரும்தான் பாகிஸ்தான் அணியில் சிறப்பாகப் பந்துவீசினார்கள். ஆமீர் ஏற்கனவே டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக தனது முடிவை அறிவித்துவிட்டார். இப்போது, வகாப் ரியாஸும் ஓய்வு முடிவை அறிவித்துள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

(ம)



அமெரிக்க லொத்தர் இலவச விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241
V2 Travels
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675
புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

Bus Hire



- Line A/C, DVD, Cool Box, Free Wifi
- Adjustable seater
- Specially for - Tourism- wedding- Longtrip
T.P
076 920 9231, 076 642 4608

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 774
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.10.27
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,500,665/-
வெற்றி இலக்கங்கள் 08 34 50 64 C
விசேட வெற்றி இல. 3874
SEASON

ராசி அதிர்ஷ்டம்
திகதி 27.10.2019
வெற்றி வாரம் 2660
வர்ணம் ஊதா
மகரம்
வெற்றி இலக்கங்கள் 06 11 44 59
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 565, 892/=
28.10.2019ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1064
சீட்டிழுப்பு திகதி 2019.10.26 சனிக்கிழமை
O 17 24 50 59
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி கப்றுக
சீட்டிழுப்பு வாரம்: 512
திகதி: 2019 ஒக். 25
வர்ணம்: பச்சை
வெள்ளி
L 32 40 44 66
7 3 2 4 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.145,029,213/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.